ISSN 2424-6654

தமிழ்த் தூது

# தாயக ஒலி

THAYAKA OLI

இரு திங்கள் ஏடு 19





இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்



LONDON TAMIL LITERARY ASSOCIATION




## இளைஞர்களே கனவு காணுங்கள்

புரட்டாதி - ஐப்பசி 2015

விலை ரூபா 100/=


தரத்தில் உயர்ந்த தங்க நகைகளைப்
பெற்றுக்கொள்ள வாருங்கள்
RATHY
Jewellers | Tooting
209 Upper Tooting Road, Tooting SW17 7TG
T: 020 8682 2233
F: 020 8767 7600
E: rathyjewellers@hotmail.co.uk
28 Ealing Road, Wembley Middx HA0 4TL
T: 020 8903 3063

பொதுசன நூலகம்


LAC
Little Asia
Dream Big | Think Big | Achieve Big
Wellawatte | Pettah
Alluring Beauty,
exquisite taste!
ttle Asia : for 6- yards of bridal splendour"
Bridal Sarees | Designer Sarees | Salwar | Choli | Men's wear | Kid's wear
317, 317A, Galle Road, Wellawatte, Colombo 06. T : +94 11 2504470, 2500098 E : info@littlasia.lk www.littleasia.lk
73, 75A, Main Street, Colombo 11. T : +94 11 2391592, 2391593 E : info@littlasiasilk.com www.littleasiasilk.com

23 வருட கால அனுபவம்

# Linga & Co

## Legal Advisors & Immigration Specialists

## We Specialise in:

- Asylum and Immigration Matters
- Human Rights applications
- Appeals
- Detention and Bail
- Entry Clearance Application and Appeal
- Injunctions & Judicial Reviews through associate solicitors
- Work Permits
- EEA Application (Sponsor)
- Student Visa, Visitor's Visa
- Highly Skilled Migration Programme
- Naturalisation Applications

- Family Law
- Employment Law
- Criminal Law



**V.P.Lingajothy**
LLB(Hons), M.Sc., Dip Fms, ACILEX
Principal
immigration Specialist
E-mail: MRLINGA@AOL.COM

ஐரோப்பிய மனித உரிமைகள் சட்டம் சார்பாக தகுந்த ஆலோசனைகளை இப்போது நாங்கள் வழங்குகிறோம்.

நீங்கள் அல்லது உங்கள் உறவினர் இங்கிலாந்திற்கு 2007 ஆம் ஆண்டுக்கு முன்னர் வந்துள்ளார்களாயின் உடன் தொடர்பு கொள்ளவும்.

**மிகவும் நம்பிக்கையான வெற்றிகரமான நிறுவனம்**

General Line : 020 8544 9285
Fax : 020 8542 9530

46, High Street
Collierswood
London SW19 2BY

OISC

**Emergency Line : 07771 646 441**


செல்வராஜா
கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்
உங்கள்
எண்ணம் போல்
நகைகளையும்
புடைவைகளையும்
தெரிவுசெய்துகொள்ள
Exclusive Designer Jewellery
Sarees & all Other Dresses
Selvaraja Gold House & Textiles
பொன்னுருக்கலுக்கான வசதிகள் செய்து
தரப்படுவதுடன் தாலிக்கொடிகள் அனைத்தும்
தங்கத்தின் விலைக்கே செய்து தரப்படும்
கூறைப்புடவைகள், பட்டுப் புடைவைகள் அனைத்தும்
40% விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்
162B, Mitcham Road, London SW17 9NJ
Tel : 020 8767 3795, Mobile : 07825 005 269

சட்டத்தரணிகளும் குடிவரவு ஆலோசகர்களும்

# Rasiah & Co Solicitors

- *Conveyancing*
- *Residential & Commercial*
- *Matrimonial*
- *Immigration*
- *Landlord & Tenants*

**Tel : 020 8543 4040**
**Fax : 020 8543 2400**

180A Merton High Street,
South Wimbledon,
London SW 19 1AY

DX: 300004 Wimbledon South

rasiahsolicitors@btconnect.com





# AA Accounting & Business Solutions Associates

**265 Haydons Road / London SW19 8TY**

## Accountants and Management Consultants

*for Efficient and Quality Professional Accounting Services*

### We Specialise in



- *Year End Accounts Preparation*
- *Management Accounts*
- *Solicitors Accounts*
- *Book Keeping*
- *Self Assessment Tax Returns*
- *Vat and TAX Investigations*
- *Payroll Preparation*
- *Business Startup Advice*
- *Business Plans and Cash Flow Forecasts*
- *Management Consultancy*

*Also through our contacts we are able to raise Finance for New Business*

*Contact:*

**Uthayanan or Sasi**

**Mob : 0774 7794 358 / 07786 966 207 Tel : 020 8545 0205**

**www.aa-accounts.co.uk**

# Easan & CO

*Chartered Management Accountants*

## Specialists in arranging Commercial Loans

- Self Assessment Tax Return
- CIS Refunds
- Accounts & Book Keeping
- VAT Returns
- PAYE
- Management Accounting



S.Eswaranathan ACMA
(Easan)

196 Merton High Street
South Wimbledon
London SW19 1AX

Tel: 020 8543 8484
Fax : 020 8540 0107
Mobile : 07801227017

# HENSHOU ISSHINRYU KARATE ACADEMY

59 Cranley Road, Ilford, Essex, IG2 6AF

Tel: 020 8518 3288, Mob: 07950346432, Email: info@henshou.com, Web: www.henshou.com

AFFILIATED TO ISSHINRYU WORLD KARATE ASSOCIATION – OKINAWA, JAPAN AND
ALL INDIA ISSHINRYU KARATE ASSOCIATION - INDIA



## DEVELOP YOUR SELF DEFENCE, SELF CONTROL SELF DISCIPLINE, COURAGE & LEADERSHIP





*Renshi Raveendran is a 6th Dan Black Belt who has trained directly under Master Shihan Hussaini(India), Grandmaster Christopher Chase (USA) and Grandmaster Kichiro Shimabuku(Japan)

*Trained and coached over 1000 students from various branches (Students age varies from 5yrs to 65 yrs-male and female).

*His Students have won many awards from various local competitions and world Isshinryu Karate competitions held in the USA

தமிழர்கள் செறிந்து வாழும் பல பகுதிகளில்
றென்ஷி ரவீந்திரனது நேரடிக் கண்காணிப்பில்
தகுதி வாய்ந்த ஆசிரியர் குழுவின் அனுசரணையுடன்
இஷின்றியு கராத்தே வகுப்புக்கள்
சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது



**OUR BRANCHES:**

EASTHAM, MANOR PARK, NEWBURY PARK
WALTHAMSTOW, PLUMSTEAD, LEWISHAM
CROYDON, MITCHAM, BRISTOL, HARROW
SOUTHEND, SWINDON

**CONTACT : RENSHI KANDIAH RAVEENDRAN** (6th DAN BLACK BELT)

**TEL : 020 8518 3288**

**MOB : 07950 346 432**

**Email : info@henshou.com Web : www.henshou.com**

# Kanaga Solicitors

KEY PERSONNEL

Name : Ms.Kanakavalli Nadarajanpillay
Kanaga Solicitors
108 High Street, Colliers Wood
London - SW 19 2 BT

Position in the firm : Principal Solicitor

**Academic/ professional Qualifications:**
L.L.B(Hons), Barrister of Lincoln's Inn, Masters at Law (L.L.M), Advocate & Solicitor of High Court of Malaya, Solicitor of the Supreme Court of England and Wales.

**Relevant and Present Experience:**

Successful practitioner with 14years of experience as a an immigration Criminal, Civil, Family, Land Law matters, Wills Probate and Corporate litigation. lawyer in the High Courts of Malaya.





**Tel: 07878278131**
**020 8544 1100**
**108 High Street, Colliers Wood**
**London - SW 19 2 BT**
email : kanakavalli _ ek@yahoo.com

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

ISSN 2424-6654

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"

# 'தாயக ஒலி'

(தாயக மண்ணின் தனித்துவம் காக்கும் இருதிங்கள் ஏடு)

வள்ளுவர் ஆண்டு 2046 புரட்டாதி - ஐப்பசி 2015 வில்-04 ஒலி-19

இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும்
இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும்
இணைந்து வெளியிடும்
"தாயக ஒலி"

**பிரதம ஆசிரியர்**
த.சிவசுப்பிரமணியம் (தம்பு சிவா)
தொலைபேசி : 0094(0)718676482

**துணை ஆசிரியர்கள்**
தாயகன் (இலண்டன்), சி.பவன் ( இலங்கை)

**மதியுரைக் குழு**
பேராசிரியர் சபா ஜெயராசா
வவுனியூர் இரா உதயணன்
சைவப்புலவர் சு.செல்லத்துரை
ந.கருணை ஆனந்தன்
எஸ்.ஈஸ்வரநாதன் (இலண்டன்)
வைத்திய கலாநிதி தாஸிம் அகமது

**சஞ்சிகைக் குழு**
மூ.சிவலிங்கம்
கா.வைத்தீஸ்வரன்
கதிரவேலு மகாதேவா
செ.ராஜேந்திரா
இ.ஜீவகாந்தன்

**வெளிநாட்டுப் பிரதிநிதிகள் :**
கனடா : முருகேசு கிருபாகரன்
து.நடராஜா, அ.பற்குணன்
இலண்டன் : சி.அமிர்தலிங்கம்
அமெரிக்கா : வே.பிரேமதயாளன்
அவுஸ்திரேலியா : தி.திருநந்தகுமார்
பிரான்ஸ் : ச.ச்ச்சிதானந்தம்

**ஐரோப்பிய நாடுகளுக்கான
விடேச ஒருங்கிணைப்பாளர்**
திருமலை பாலா
தொ.பேசி : 0044(0) 7956486014

தொடர்பு : 9-2/1, நெல்சன் இடம்,
கொழும்பு - 06, இலங்கை
தொ.பேசி. : 0094(0)112364124

E.mail : thayakaoli@gmail.com

தாயக ஒலியில் இடம்பெறும் படைப்புக்களுக்குப் படைப்பாளிகளே பொறுப்புடையவர்கள். ஆக்கங்கள் ஆசிரியரின் அவதானிப்புடன் பிரசுரமாகும். - ஆசிரியர் -

**உள்ளே ஒலிப்பவை** **பக்கம்**

பேனா முனையிலிருந்து.... 02

**கட்டுரை :**
- வவுனியூர் இரா உதயணன் 03
- திக்கம் சிவயோகமலர் 07
- கவிதைகளின் பங்களிப்பு 18

**சிறுகதை :**
- எதையும் தாங்கும் இதயம் 12

**சிரிகதை :**
- மாணவர்களுக்கு அறிவுரை 22
- யமதர்மனுக்கே பாதுகாப்பு 22
- பொதுவான கேள்வி 23
- வாய்விட்டுச் சிரித்தால் 24

**சிறுவர் கதை :**
- மிருகாபிமானம் 33

**கவிதை :**
- குறிஞ்சிப்பூக்கள் அழுகின்றன 11
- மாற்றிப் பார்ப்போம் 11
- அம்மா வைக்கும் இரசம் 29

**கேட்டதைச் சொல்லவந்தோம்** 25-27

**அரங்கம் :**
- மனித ஆத்மாவைத் தேடவும் 09

**விளையாட்டு :**
- உலக சாதனையாளர் குமார் 20

**அறிந்தவையும் தெரிந்தவையும் :**
- மகிழ்ச்சியான நாடு 37
- மணப்பெண்களுக்குத் தட்டுப்பாடு 37
- இறைவனைப் பிரார்த்திக்கும்... 38

**நூல் அறிமுகம்:**
- மலைப்பூட்டும் மருத்துவ அறிவியல் 40
- பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை 42

**ஏனையவை :**
- நான் சொல்வதெல்லாம் உண்மை 30
- அமைதியின் சொற்கள் 32
- அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் 36
- பெருமைக்குரிய நித்தியானந்தங்கள் 39
- கண்ணீர் அஞ்சலி 44

அட்டையில்.....
தமிழை வளர்த்த பெருந்தகைகளும்
இலக்கியப் படைப்பாளிகளும்

## பேனா முனையிலிருந்து......

# மரணங்கள் மலிந்த பூமி

அண்மைக்காலமாக எமது நாட்டில் மரணிப்பவர்களின் தொகை அதிகரித்துக் காணப்படுகின்றமை வேதனை தரும் விடயம். கொலைகள், தற்கொலைகள், விபத்துக்கள் என்று பரந்துபட்ட நிலையில் மரணங்கள் ஏற்படுகின்றன. கோபம், ஏமாற்றம், பொறாமை, ஆத்திரம், குரோதம், குடிபோதை, வேறும் சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாகக் கொலைகள் இடம்பெற்று வருகின்றன. இத்தகைய மரணங்களுக்குக் காரணமானவர்கள் பலர் மரணதண்டனையை எதிர்நோக்கி இருப்பதும் தெரிந்த விடயம்.

தற்கொலைகள் மன அழுத்தம் காரணமாக ஏற்படும் மனநோய் என்றும், எதையும் தாங்கிக் கொள்ளக்கூடிய மனப்பக்குவம் இல்லாமையும், எடுத்தவுடன் தீர்மானிக்கும் உளப்பாதிப்பும் தற்கொலைகளுக்குக் காரணமாகின்றன என்று மனநல வைத்தியர்கள் குறிப்பிடுகின்றனர். பரீட்சையில் தோல்வி, காதலில் தோல்வி, வறுமை, அவமானம், வேலையின்மை, கடன்தொல்லை, தாங்கமுடியாத நோய், நினைத்தது கிடைக்கவில்லையே என்ற ஆத்திரம் போன்ற இன்னோரன்ன காரணங்களால் வாழவேண்டிய பல உயிர்கள் இளம்வயதிலேயே கருகிப்போகின்றன. இத்தகையவர்கள் தூக்கிட்டும், நீர்நிலைகளில் பாய்ந்தும், கிருமிநாசினிகள் உட்கொண்டும், புகையிரதத்திற்கு முன்பாகப் பாய்ந்தும் உயிரை மாய்த்துக்கொள்கின்றார்கள்.

பாடசாலைகள், சமயநிறுவனங்கள், மற்றும் பொது நிறுவனங்கள் என்பன இளம் சமுதாயத்தி னருக்கு உளரீதியான பயிற்சிகளை வழங்குவதன் மூலம் தற்கொலைகளை ஓரளவுக்காவது தடுக்க முடியும். ஆசிரியர்களும், பெற்றோர்களும், நண்பர்களும் பிள்ளைகளின் மனம் பாதிக்காத வகையில் அவர்களை உற்சாகப்படுத்தக் கூடிய சொற்பிரயோகங்களை தம்மளவில் வைத்துக் கொள்வதன் மூலம் தற்கொலைகளைத் தடுக்க முடியும் என்பதை மறந்துவிடக் கூடாது.

பாதைகளில் ஏற்படும் வாகன விபத்துக்களால் தினம் தினம் பல உயிர்கள் காவுகொள்ளப் படுகின்றன. நீர் நிலைகளிலில் குளிக்கும் வேளைகளில் நீரில் அமிழ்ந்தும் அடித்துச் செல்லப்பட்டும், பாதுகாப்பற்ற புகையிரதக்கடவைகளைக் கடக்கும் சந்தர்ப்பங்களிலும் மரணங்கள் சம்பவிக்கின்றன. அவதானத்துடன் நடந்து கொள்வதன் மூலம் தமது உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பதைப் பொதுமக்கள் தெரிந்துகொள்வது அவசியம்.

அண்மைக்காலமாக பாதுகாப்பற்ற கிணறுகளில், நீர் ஓடைகளில், வெள்ளம் தேங்கிநிற்கும் குழிகளில் சிறுவயதினர் தவறிவிழுந்து உயிரை நீத்த பரிதாபமான பலசம்பவங்கள் அடிக்கடி நடந்து வருகின்றன. பெற்றோர், பாதுகாவலர்களின் கவலையீனமே இத்தகைய பரிதாபகரமான சம்பவங்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கின்றன. பெற்றோர் எந்தவேளைகளிலும் தமது குழந்தைகளின் நடமாட்டத்தில் கவனம் கொண்டிருக்க வேண்டியது மிக அவசியம்.

காரணம் எதுவாக இருந்தாலும், தாம்பெற்ற சிசுக்களைக் கொல்லும் தாய்மார்களின் எண்ணிக் கையும் அதிகரித்துக் காணப்படுகின்றன. இது மிகவும் வேதனைக்குரியது. பாலியல் வல்லுறவுடனான கொலைகளும் பாரிய அளவில் இடம்பெறுவது சமூக அச்சுறுத்தலாக அமைந்துவிட்டது. எந்த வகையில் மரணங்கள் ஏற்பட்டாலும் அது மனித சமுதாயத்திற்குப் பேரிழப்பு என்பதை மறுக்க முடியாது. சமுதாயம் சிந்திக்காதவரை இத்தகைய மரணங்கள் தொடர்கதையாகவே இருக்கும் என்பது நிதர்சனம்.

வாழப்பிறந்த சமுதாயம் வாழும்காலம்வரை
வாழ்ந்து இயற்கையெய்தலே மேல்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.....

- ஆசிரியர்

கட்டுரை

# இலக்கிய ஆளுமை மிக்க புனைகதைப் படைப்பாளி வவுனியூர் இரா உதயணன்

- தம்பு சிவா



தமிழ் இலக்கியச் சூழலில் தனித்துவம் மிக்க படைப்பாளியாக முகிழ்ந்து நிற்கின்றார் வவுனியூர் இரா உதயணன். தாம் வாழ்ந்த மண்ணின் மாந்தர்களை கதா பாத்திரங்களாகக் கொண்டு அவர்களின் வாழ்க்கைக் கோலங்களை எழுத்தில் வடித்துள்ளார். லண்டன் மாநகரில் உயர் பதவியை வகித்துக்கொண்டு வாழ்ந்த போதிலும், பிறந்த மண்ணின் மேல் கொண்ட பற்றுறுதியின் காரணமாக, அங்கு வாழும் மக்கள், அவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள், துன்ப துயரங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள், கலாசாரம் பண்பாடுகள் போன்ற இன்னோரன்ன அம்சங்களை உள்வாங்கி அவற்றைப் புனை கதைகளாகத் தந்துள்ளார் எழுத்தாளர் இரா உதயணன். இலக்கியத்துக்கு ஒரு சிறப்பு உண்டு. படைப்பின் நோக்கமும் அதன் தன்மையும் படிப்பவர் நெஞ்சம் அகலாதபடி நகர்த்திச் செல்லும் விதமும்தான் அந்தப் படைப்புக்குக் கிட்டும் வெற்றியாகும். இந்த வகையில், தமது படைப்பின் மூலம் வாசகர் மனதில் இடம்பிடித்து வெற்றியும் கண்டுள்ளார் எழுத்தாளர்.

பல்வேறுபட்ட இலக்கியப் பங்களிப்புக்களில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட போதிலும், புனைகதைத் துறையில் தடம் பதித்து ஓயாது எழுதி வருகின்றார். இதுவரை அவரது ஆறு நூல்கள் வெளிவந்துள்ளன. "மாறு பட்ட சூழலில் வேறுபட்ட மனிதர்கள்" என்ற ஒரேயொரு சிறுகதைத் தொகுதியைத் தவிர மற்றைய நூல்கள் ஐந்தும் நாவல்களே.

"சிறுகதை வாழ்க்கையின் சாளரங்கள். ஒரு பகுதியை அல்லது ஒருவரின் தனி உணர்ச்சியை, அல்லது ஒரு சம்பவத்தை எடுத்துக் கூறுவது'' என்கிறார் சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன். "மாறும் என்கிற விதியைத் தவிர மற்றவையெல்லாம் மாறிக்கொண்டே இருக்கிறது'' என்று கூறியுள்ளார் கார்ல் மார்க்ஸ். இலக்கியம் என்பது வாழ்க்கையைப் படம்பிடித்துக்காட்டும் கண்ணாடி என்று சொல்லுவார்கள். அந்த வகையில் இரா.உதயணன் அவர்கள் தாம் வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தில் வாழ்க்கையில் கிடைத்த சில அனுபவங்களை, நெஞ்சத்தில் பொதிந்து வைத்திருந்த நினைவுகளை, அநீதிக்கும் அக்கிரமத்திற்கும் எதிரான எண்ண அலைகளை தம் சிறுகதைகளில் வடித்துத் தந்துள்ளார். அவரது கதைகளின் கதாபாத்திரங்கள் யாவும் உயிர்த் துடிப்புள்ள ஜீவன்கள். சமுதாயத்தில் அன்றாடம் தரிசித்த மனிதர்கள். கதைகளில் பேசப்படும் சம்பவங்கள் யாவும் நேரில் கண்ட காட்சிகளாக விரிகிறது.

மாறுபட்ட சூழலில் வேறுபட்ட மனிதர்கள் "மனிதனாகப் பிறந்த நாங்கள் மாறுபட்டவர்கள். வேறுபட்ட சூழலில் எங்கள் சிந்தனைகளும் நோக்கங்களும் வித்தியாசமானவையாகவே இருக்கும். இந்தச் சிறுகதைத் தொகுப்பில் ஒவ்வொரு சிறுகதையிலும் மாறுபட்ட மனிதர்களை நீங்கள் சந்திக்கப்

போகிறீர்கள்" இவ்வாறு ஆசிரியர் தனது உரையில் முன்னிறுத்தியுள்ளார்.

"இரா உதயணனின் சிறுகதைகள் தமிழ்ச் சிறுகதை உலகிற்கு ஒரு புதிய வடிவத்தை வழங்கும் என்பது எனது நம்பிக்கை'' என்று நூலின் வெளியீட்டாளர் அருணா செல்லத்துரை கூறியிருப்பது ஒரு ஆரோக்கியமான நோக்காகும்.

"மாறுபட்ட சூழலிலும் வேறுபடாத ஒரு மனிதநேயமிக்க எழுத்தாளனால் தான் மாறுபட்ட சூழலில் வேறுபட்ட மனிதர்களின் பெருமைகள் - சிறுமைகள் - உணர்வுகள் - உணர்ச்சிகள் - வக்கரித்த எண்ணங்கள் - வறட்டுக் கௌரவங்கள் போன்றவற்றை எழுத முடியும். இரா உதயணன் இலக்கியத்தைத் தொடர்ந்து படைத்து வருகின்றார் என்றால் அவர் சமூகத்தின் மீது கொண்ட பிரிக்கமுடியாத நேசிப்பே காரணமாகும். இந்த நேசிப்பு வெளிப்பாட்டின் ஓர் அங்கமே இந்தச் சிறுகதைத் தொகுப்பாகும்.'' என்று நூலின் முன்னுரையில் பா.மனோகரன் விளக்கியுள்ளார்.

இரா உதயணனின் எழுத்துக்கள் பற்றிய நோக்காளர்களின் கருத்துக்களை நோக்குமிடத்து எழுத்தாளரின் நேர்மையும் அவரது இலக்கிய ஆளுமையும் பட்டவெளிச்சமாகப் பிரகாசிக்கின்றது. எனவேதான் அவரை தமிழ் இலக்கியச் சூழலில் தனக்கென ஒரு தனித்துவம் கொண்ட எழுத்தாளராகத் தரிசிக்க முடிகிறது.

இவருடைய முதல் நாவல் "சுருதி பேதமடைகிறது", 2008 ஆம் ஆண்டு வெளிவந்து, அவரை ஒரு நாவல் எழுத்தாளராக வாசகர்களுக்கு அறிமுகமாக வைத்தது. "விதி வரைந்த பாதையிலே...." என்ற அவரது நாவல் அவருக்குப் பெருமையைத் தேடிக்கொடுத்தது. இந்த நாவலும் 2008 இல் வெளிவந்து, இலங்கை அரச சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றுக்கொண்டது. இலக்கிய வரலாற்றிலே ஈழத்து மண் வாசனையுடன் தமது படைப்புக்களை வெளியிட்டு, பலரின் பார்வைக்கு உட்படுத்தப்பட்ட ஒரு எழுத்தாளராக இரா உதயணன் தோன்றுகிறார். "விதி வரைந்த பாதையிலே...' மனித அவலங்களை சமுதாயத் தின்கண் தாம் தரிசித்த தரிசனங்களை யதார்த்தமாக வெளிக்காட்டுவதில் வெற்றிகண்ட ஆசிரியரின் கதாபாத்திரங்கள் எம் மனக்கண் முன் தோன்றி நீங்காத இடத்தைப் பெற்று நிற்கின்றன. அவரது உள்ளத்து உணர்வுகள், அவர் பிறந்து வளர்ந்த மண்ணையே வட்டமிட்டபடி உலாவருகின்றன. சாதாரண வாசகனும் புரிந்து கொள்ளக் கூடிய எளிய உரைநடையில் அவரது படைப்புக்கள் அமைந்துள்ளன.

அவருடைய இந்த நாவலில் வவுனியாவையும், அதனைச் சூழவுள்ள சில கிராமங்களின் அழகையும் எடுத்துக் காட்டுவதோடு, வவுனியா, சிங்கப்பூர், லண்டன் ஆகிய இடங்களில் நடைபெற்ற சம்பவங்களையும், ஏமாற்றுக்காரர்களினால் ஏமாற்றப்பட்ட ஒரு அபலைப் பெண்ணின் கதையை முன்னெடுத்துச் செல்லுகின்ற விதம் யதார்த்தமாகவே அமைந்துள்ளதைக் காணலாம்.

"அவள் வாழ்க்கையிலும் எத்தனை சோதனைகள். ஜீரணிக்க முடியாத உண்மைகள், நடந்து முடிந்த நிஜங்கள். ஒரு கட்டத்தில் அவள் வாழ்க்கையும் கூட இடி விழுந்து கருகிப்போன தென்னை மரம் போல சிதறிக்கிடந்த குருத்தோலைகள் போல, இளம் வயதில் சிதறிப் போன அந்த மறக்கமுடியாத அத்தியாயங்களை மீண்டும் ஒரு தடவை நினைக்கத் தொடங்க கண்களிலிருந்து சொட்டாக நீர்த்துளிகள் வழிந்து அவளது கன்னங்களை வருடிச் சென்றன" என்றும் முதல் ஆரம்பத்திலேயே கருவுக்குக் கட்டியம் கூறியதுடன், உவமானங்களையும் முன்வைத்து கதையை நகர்த்தியுள்ளமை அலாதியானது.

தன் சாதிவிட்டு வேறு சாதிக்காரனை விரும்பி அவனுடன் ஓடிவிட்ட பெண்ணின் நிலையும், அதனால் பெற்றோர் அவளை ஒதுக்கிவைப்பதைக் கதையில் கூறிவந்த ஆசிரியர், சாதி என்ற சாபக்கேடு சமுதாயத்திலிருந்து தூக்கி எறியப்பட வேண்டும் என்பதை வற்புறுத்தியுள்ளார்.

"இலக்கியம் வெறும் பொழுது போக்குக் கருவியல்ல. நயம்பார்த்து ரசித்துக் கொண்டிருக்கக் கூடியதுமல்ல. மக்கள் வாழ்க்கைக்குத் தேவையானவற்றைக் கருத்திற் கொண்டு உருவாக்க வேண்டியதே இலக்கியம் என்ற நிலையில் நின்று தமது இலக்கியப் படைப்புக்களை இரா.உதயணன் மேற்கொண்டு வருகின்றார்.

வவுனியா மாவட்டம் விவசாயப் பூமியாகச் செழிப்புடன் இருந்த கால கட்டத்தில், வவுனியாவில் வாழ்ந்த இராமகிருஷ்ணா - கமலநாயகி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரராக 1960இல் பிறந்த உதயணன், யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி, வவுனியா தமிழ் மகாவித்தியாலயம் ஆகிய கல்வி நிறுவனங்களில் கற்று மேற்படிப்புக்காக லண்டன் சென்றார். அங்கு வர்த்தக முகாமைத்துவ முதுநிலைமாணி, கணக்கியல் முதுநிலைமாணி ஆகிய பட்டங்களைப் பெற்று நிதிப் பணிப்பாளராகச் சேவையாற்றி வருகின்றார். இத்தகைய பொறுப்பு வாய்ந்த பதவியை வகித்துக் கொண்டு இலக்கிய ஆர்வம் காரணமாக எழுத்துத் துறையில் கால் பதித்து ஒரு முன்னிலை எழுத்தாளராக முத்திரை பதித்து நிற்கின்றார்.

தமது இலக்கியம் ஆர்வம் மேலோங்க உந்து சக்தியாக இருந்த முன்னாள் தினகரன் ஆசிரியர் அமரர் கலாசூரி சிவகுருநாதன் மதிப்புக்குரியர் என்பதை அவர் சொல்லக் கேட்டிருக்கின்றேன். மேலும் தமது எழுத்தாற்றலை வளர்க்க பலவகையிலும் உதவிய முன்னாள் ஈழநாடு வார இதழின் ஆசிரியர் சசிபாரதி சு.சபாரத்தினம் அவர்களை மதித்துத் தமது சிறுகதைத் தொகுதியை அவருக்குச் சமர்ப்பணமான முன்வைத்துள்ளார். மூத்த பத்திரிகையாளரும் இலக்கிய வாதியுமாகிய "புதினம்" ஈ.கே.ராஜகோபால் தமது இலக்கியத் துறை வளர்ச்சிக்கு முக்கிய வழிகாட்டியாக இருப்பதையும், தமது ஆக்க இலக்கியப்படைப்புக்களை "அருணா வெளியீட்டகம்" ஊடாக வெளிக் கொணர்ந்து முதன்மைப் படுத்தும் அருணா செல்லத்துரையின் சேவையையும் நன்றியுடன் நோக்குகின்றார். மேலும் உலகளாவிய ரீதியில் பல எழுத்தாளர்களை நண்பர்களாகக் கொண்ட ஒரு படைப்பாளி என்ற வகையிலும் எழுத்தாளர் இரா உதயணன் மதிக்கப்படுகின்றார்.

"எழுதுவதில் எனக்கு எதுவித சிரமமும் இல்லை. ஏன் என்றால் எனக்குத் தெரிந்தவற்றைத்தான் நான் எழுதுகிறேன். எனக்குத் தெரியாதவற்றைப் பற்றி நான் ஒருபோதும் எழுதுவதில்லை" என்று மாக்ஸிம் கார்க்கி என்ற எழுத்தாளன் கூறியதற்கு அமைவாக நாவலாசிரியர் இரா உதயணனும் தமக்குத் தெரிந்தவற்றையே படைப்பாக வெளிக் கொணர்ந்துள்ளார்.

இவருடைய நூல் அறுந்த பட்டங்கள் என்னும் நாவல் 2009 இல் வெளிவந்து, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற விருதினைப் பெற்றுக் கொண்டது. நாவல் வரிசையில் இரா உதயணனின் நான்காவது நாவல் இது. இதைத் தொடர்ந்து 2010 ஆம் ஆண்டு இருநாவல்களை நூலாக வெளிக் கொணர்ந்துள்ளார். "பனிநிலவு" என்னும் நாவல்பற்றி ஆசிரியர் பின்வருமாறு கூறுகின்றார். "இன்றைய கால கட்டத்தில் தமிழ் மக்களாகிய நாம் எம்மைப் பற்றி மட்டுமே சிந்திக்காமல், எமது சமுதாயத்தில் பல இடர்களுக்கும் துயரங்களுக்கும் மத்தியில் வாழும் எம்மவர்களைப் பற்றி சிந்தித்து எம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய முற்பட்டால் அதுவே எமது சமுதாயத்திற்கு

நாம் செய்யும் அளப்பரிய பணியாகும்'' என்கிறார்.

இவரின் 'உயிர்க்காற்று' நாவல் இன்றைய சூழ்நிலையில் நடக்கின்ற நமது சமுதாயத்தில் ஏற்பட்டு வருகின்ற மாற்றங்களை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டது. நாம் மறக்க நினைத்த சம்பவத்தைக் களமாகக் கொண்டு மீண்டும் கண்களில் கண்ணீர் வரவைக் கிறார். காலத்திற்கேற்றவாறு "கற்பு" என்பதற்கான வரைவிலக்கணத்தை இந்த நாவலில் மீளாய்வு செய்கிறார்.

தொடர்ந்து எழுத்துத்துறையில் ஈடுபாட்டுடன் எழுதிவரும் இவரது ஆக்கங்கள் வீரகேசரி, லண்டன் புதினம் ஆகியவற்றில் வெளிவந்து கொண்டிருக் கின்றன. வீரகேசரியில் "வலியின் சுமைகள்" தொடர் நவீனம் வெளிவந்து பலரின் பாராட்டுக்களைப் பெற்று நிற்கின்றது. "தாயக ஒலி" சஞ்சிகையில் இவரது சிறுகதைகள் வெளிவந்துள்ளன. இவரது நாவல் ஒன்றும் சிறுகதைத் தொகுதி ஒன்றும் வெகுவிரைவில் வெளிவரவிருக்கின்றன.

படைப்பிலக்கியத்துறைக்குப் பெருமை சேர்த்துள்ள இவர் எழுத்தாளர்களை ஊக்குவிப்பது, அவர்களுக்கு ஆதரவு வழங்குவது என்ற வகையில் தமது பணியை விசாலப்படுத்தியுள்ளார். மாநாடுகள், விருதுவிழாக்கள், நூல் வெளியீடுகள் என்று பல வகைப்பட்ட இலக்கிய நிகழ்வுகள் எந்த நாட்டில் நடைபெற்றாலும் தவறாது பங்குபற்றிச் சிறப்புச் செய்யும் பண்பாளன். இத்தகைய ஒரு இலக்கியப் படைப்பாளி இலக்கிய வரலாற்றில் நிலைத்து நின்று அரும்பணி யாற்ற வேண்டும் என்று இலக்கிய நெஞ்சங்கள் வேண்டி நிற்கின்றன. அகவை 55 இல் தடம்பதித்து நிற்கும் எழுத்துச் செம்மல் வவுனியூர் இரா உதயணனுக்கு எமது நல்வாழ்த்துக்கள்.


## 'தாயக ஒலி' சந்தா விபரம்

ஒரு வருடச் சந்தா - ரூபா 900 (அஞ்சல் செலவுடன்)
வெளிநாடு - $30(U.S), £ 20(U.K)

உங்கள் தாயக ஒலியின் வளர்ச்சிக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஆதரவு நல்குங்கள்.

தொடர்பு :

| | | |
|---|---|---|
| S.AMIRTHALINGAM<br>13B, CEDAR ROAD<br>SUTTON<br>SM2 5DA,<br>UK.<br>02034416329 | திருமலை பாலா<br>(Thirumalai Bala)<br>133, Canterbury Road<br>Morden, Surrey<br>SM4 6QJ - U.K<br>07956486014 | வங்கிக் கணக்கு விபரம்<br>T.Sivasupramaniam<br>A/C No : 8100086490<br>Commercial Bank<br>Wellawatte,<br>Sri Lanka |

அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!
இதுவரை சந்தாப்பணத்தை செலுத்தாத 'தாயக ஒலி' வாசகர்கள் எமது வங்கிக் கணக்கில் சந்தாவை செலுத்தி பெற்றுக் கொண்ட பிரதியை எமது முகவரிக்கு அனுப்பி வைத்து அதற்கான பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளுங்கள். 'தாயக ஒலி' யின் தொடர் வளர்ச்சிக்கு உங்கள் மேலான ஆதரவை வேண்டி நிற்கின்றோம்.

\- சஞ்சிகைக் குழு

கட்டுரை

த.வசந்தன்

# ஈழத்தின் முதல் பெண் வரலாற்று நாவலாசிரியை திக்கம் சிவயோகமலர்

ஈழத்தின் இலக்கியப் பரப்பில் எண்பதுகளுக்குப் பின் தடம்பதித்த திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமார் தரமான பெண் எழுத்தாளர்களில் ஒருவராக முகிழ்ந்து நின்றார். இவரது முதல் சிறுகதை "மகன் தேடிய வீடு" 1984 ஆம் ஆண்டு சிந்தாமணியில் வெளிவந்தது. அதைத் தொடர்ந்து எழுதத் தொடங்கியவர், 1987 ஆம் ஆண்டு தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்க பிரெஞ்சுக் கிளையினர் நடத்திய பாவலர் தெ.து.துரையப்பாபிள்ளை நினைவு - அகில உலகச் சிறுகதைப் போட்டியில் இவர் எழுதிய "பிறந்த மண்" முதல் பரிசினைப் பெற்றுக்கொண்டது.

1990 ஆம் ஆண்டு சிரித்திரன் சஞ்சிகை நடத்திய சித்திரச் சிறுகதைப் போட்டியில் இவரின் 'வானம் பொய்க்கவில்லை' முதல் பரிசைத் தட்டிக் கொண்டது.

தேசிய கல்தோலிக்க எழுத்தாளர் சங்கம், கத்தோலிக்க சாகித்திய தினத்தை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் நடத்திய சிறுகதைப் போட்டியில் 'பாவத்தின் சுவடுகள்' என்னும் சிறுகதை முதலாவது பரிசைப் பெற்றது. 1998 ஆம் ஆண்டு வீரகேசரியில் வெளியான 'பாவத்தின் சுவடுகள்' என்னும் இச் சிறுகதை கலாசார சமய அலுவல்கள் அமைச்சினால் அவ்வாண்டுக்கான சிறந்த சிறுகதையாகத் தெரிவு செய்யப்பட்டு விருதும் பணப்பரிசும் வழங்கப்பட்டது.

தினகரன் பத்திரிகையும் துரைவி நிறுவனமும் இணைந்து நடத்திய அகில இலங்கைச் சிறுகதைப் போட்டியில் இவரது "சாமேளம்" பரிசைப் பெற்றுக் கொண்டது.



2013 ஆம் ஆண்டு ஹொரணை பிரதேச சபை நடத்திய சரத் சந்திர ஜெயக்கொடி ஞாபகார்த்த சாகித்திய விழாவையொட்டி அகில இலங்கை ரீதியல் நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் சிவயோகமலரின் 'மண்வாசம்' சிறுகதை இரண்டாம் பரிசைப் பெற்றமையும் வரலாற்றுப் பதிவுகளாகும்.

இவரது எழுத்துக்கள் சமகாலப் பிரச்சினைகள், சமூகப் பிரச்சினைகள், பெண்களின் வாழ்வியல், குடும்பப் பண்பாட்டுக்கோலங்கள் போன்வற்றைப் பிரதிபலித்தன. மண்வாசனையுடன், சரளமான தமிழ் நடையும் இலக்கிய நயமும் கொண்டதாக இவரது சிறுகதை அமைந்திருப்பதைத் தரிசிக்கலாம். "ஈழத்தின் தரமான பெண் எழுத்தாளர்களில் ஒருவரான இவரது சிறுகதைகள் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் குறிப்பிடத் தக்க முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளன" என்று செங்கையாழியான் எழுதிய 'ஈழத்துச் சிறுகதை வரலாறு' என்னும் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளமை அவதானத்துக்குரியது.

சிறுகதைத்துறையில் தடம்பதித்துப் பல ஆக்கங்களை வெளிக்கொணர்ந்த இவர் குறுநாவல், நாடகம், குழந்தைக் கவிதைகள் என்று தமது இலக்கியப் பரப்பை விசாலப்படுத்தியுள்ளார்.

மோல்டே தமிழ்க் கலைக்கலாசார மன்றம் பத்தாவதாண்டு நிறைவையொட்டி உலகளாவிய ரீதியில் நடத்திய நாடக எழுத்தாக்கப் போட்டியில் இவரால் எழுதப்பட்ட "புலம்பெயரும் பாசங்கள்"

நாடகப் பிரதி முதற்பரிசைப் பெற்றுக் கொண்டது. யாழ்.இலக்கிய வட்டமும் ஈழநாடு பத்திரிகையும் இணைந்து நடத்திய நாவல் போட்டியில் "கல்லுக்குள் ஈரம்" என்னும் இவரது நாவல் பரிசு பெற்றுள்ளது. மேலும் முரசொலி பத்திரிகையும் யாழ். இலக்கிய வட்டமும் இணைந்து நடத்திய குழந்தைப் பாடல் தொகுப்புப் போட்டியில் இவரின் 'தேட்டம்' குழந்தைக் கவிதைத் தொகுப்பும் பரிசினைப் பெற்றமை அவரின் கவிதை ஆக்கத்திறனை வெளிப்படுத்துவன வாக உள்ளன. இலங்கையில் பெண் எழுத்தாளர்கள் எவரும் வரலாற்று நாவல் எழுதாத நிலையில் அத்துறை பால் ஆர்வம் மிக்கவராக இருந்த சிவயோகமலர் "அடிமையின் காதலி" என்னும் சரித்திர நாவலை எழுதினார். இலங்கையில் வாழும் மலாய் வம்சத்தி னரின் வரலாறு பற்றிய உண்மையினை எடுத்துக் கூறும் வகையில் இச்சரித்திர நாவல் எழுதப்பட்டுள்ளது. இவ்வரலாற்று நாவல் 1999 ஆம் ஆண்டு தினகரன் வாரமஞ்சரியில் தொடர்கதை யாக 21 அத்தியாயங்கள் வெளிவந்து பலரின் அவதானிப்பைப் பெற்றுக் கொண்டது.

அல்வாய் மேற்கு திக்கம் என்னும் கிராமத்தில் 1950 ஆம் ஆண்டு பிறந்து எழுத்துத்துறையில் ஒரு அத்தியா யத்தைப் படைத்துவிட்டு 16.01.2014 இல் உயர்நீத்த திக்கம் சிவயோகமலர் ஈழத்தின் முதலாவது பெண் வரலாற்று நாவல் ஆசிரியர் என்ற பெருமையை 'அடிமையின் காதலி' என்ற நாவல் மூலம் பெற்றுள்ளார். இத்தகைய ஆற்றல் மிக்க படைப்பாளியை 'தாயக ஒலி' நினைவு கூர்ந்து நிற்கிறது. ■

## அன்பான வேண்டுகோள்

**'தாயக ஒலி'** யின் வெளிநாட்டுப் பிரதிநிதிகள், மற்றும் வாசகர்கள், எழுத்தாளர்கள், ஆர்வலர்கள் அனைவருக்கும் அன்பான வேண்டுகோள். உங்கள் நாடுகளில் நடைபெறும் எம்மவர்களின் விழாக்கள், அரங்கேற்றங்கள், நூல்வெளியீடுகள், பரிசளிப்பு விழாக்கள் மற்றும் இலக்கிய நிகழ்வுகள் போன்றவற்றின் விபரங்களை படங்களுடன் எமக்கு அனுப்பி வைத்தால் **'தாயக ஒலி'** யில் பிரசுரிக்க உதவியாக இருக்கும் **thayakaoli@gmail.com** என்ற e-mail முகவரிக்குத் தவறாது அனுப்பி வைத்து உதவுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

-ஆசிரியர்

## உங்கள் விருந்து

முதற்கண் என் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். "தாயக ஒலி" சித்திரைச் சிறப்பிதழ் சீக்கிரமாய்க் கிடைக்கப்பெற்றேன். மிக்க நன்றி. கனதியான விடயதானங்கள் கச்சிதமான வடிவமைப்பு, எனக்குப் பிடித்தமானதொரு சஞ்சிகை. பிரித்துப் படித்தும் மகிழ்ச்சியும் திருப்தியும் ஏற்பட்டது. "தாயக ஒலி" ஓயாது ஒலிக்க உன்னதரைப் பிரார்த்திக்கின்றேன்.

"தாயக ஒலி" இதழுக்கான சந்தாப்பணத்தை தபாலகம் மூலமாகச் செலுத்திய பற்றச்சீட்டை இத்துடன் இணைத்துள்ளேன். தொடரட்டும் உங்கள் சேவை.

*பொன்.ஏ.கலைக்கொழுந்தன்*
*கல்முனை*

# மனித ஆத்மாவைத் தேடவும் – தரிசிக்கவும்!

- கலைஞர் கலைச்செல்வன்



நமது நாட்டின் அரங்க முறைமை வாழ்வியலை உணர்வுபூர்வமாக பேசியதுடன் அரசியல் சமூக பின்புலத்தைக் கொண்டிருந்ததை மறுப்பதற்கில்லை. அரங்க முகங்களுக்கு மாறுபட்ட - வேறுபட்ட சமூகச் சூழல்களும் அறிமுகமாயிற்று.

அழிவுகள், இழப்புகள், வன்முறைகள், கலாசார சீரழிவுகள், போதைவஸ்துக்கள், பாலியல் கொடுமைகள், பொருளாதாரப் பாதிப்புக்கள், வர்த்தக முரண்பாடுகள், அடக்குமுறைகள், அடாவடித்தனங்கள், ஆதிக்க சக்திகளின் அட்டூழியங்கள் என அவலம் நிறைந்த எம் வாழ்க்கையை ஒவ்வொரு பக்கமாகப் புரட்டிய பெருமை எமது அரங்கு வடிவத்திற்கு மாத்திரமே உரித்தானது. அதனால்தான் காலத்தின் தேவைக்கேற்ப சமூக மாற்றத்திற்கான செயற்பாடுகளை முனைப்புடன் முன்னெடுத்த அரங்க வளர்ச்சிப் புலமொன்றை நாம் காணமுடிந்தது.

'அகஸ்தாபோல்' போன்ற நாடக அறிஞர்களால் முன்வைக்கப்பட்ட அடக்கப்பட்டோருக்கான - ஒடுக்கப்பட்டோருக்கான அரங்க முறைமைகள் மனச்சாட்சியின் தூண்டுகோலாக பிரதிபலிக்கின்றன. இதன் பாதிப்பும் தாக்கமும் தான் என் ஆற்றுகைகளின் கருப்பொருளுக்காக விளிம்பு நிலை மக்களின் விடிவே இல்லாத வாழ்வு நோக்கி என்னை பயணிக்கச் செய்கிறது. பிரச்சினைகளை நுண்ணிய அறிகை விளிம்புகளுக்கு எடுத்துச் சென்று, பாத்திரங்களின் உள மோதல்களுக்குரிய தீர்வுகளை நோக்கி நகர்த்துதல் என் அரங்கியற் பரிமாணமாகும்.

வாழ்க்கை பற்றிய தொலைநோக்கும் - நடைமுறைச் செப்பமும் நாடகத்தில் இணையாத பட்சத்தில், அவ்வரங்க ஆற்றுகை பொய்மைப்படுத்தப்பட்டதாக ஆகிவிடுகின்றது. நமது இளைய தலைமுறைக் கலைஞர்களை இந்தப் பொய்மை மழையில் நனையச் செய்வதில் தொலைக் காட்சியும் சினிமாவும் போட்டி போட்டுச் செயற்படுகின்றன. இந்த மாயைகளில் நமது இளங்கலைஞர்கள் கட்டுண்டு கிடப்பதால் அவர்கள் அரங்கிற்கு அந்நியமாகிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆறாம் வகுப்பிலிருந்து பல்கலைக் கழகம் வரையில், சிறப்புப் பாடமாகவும், முதுகலைத் தேர்வுப் பாடமாகவும், தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆசிரிய பயிற்சிப் பாடமாகவும் நாடகமும் அரங்கியலும் பயிற்றுவிக்கப்பட்டு கல்விசார் கலையாக மாற்றம் பெற்றாலும் செயல் திறன்சார் கல்வியை இன்னும் பூரணமாக வழங்கவில்லை என்பதே முகமூடி போடாதோர் முடிவாகும்.

அதனால்தான் இன்றைய இளந் தலைமுறைக் கலைஞர்களிடத்திலிருந்தும் நாடகத்தையும் அரங்கியலையும் சிறப்புப் பாடமாகக் கற்று பரீட்சை எழுதி பாஸ்மார்க் வாங்கியவர்களிடத்தில் இருந்தும் இப்பாட நெறியைக் கற்பிப்பவர்களிடத்தில் இருந்தும்

குழந்தை சண்முகலிங்கம், நாடக ஆசிரியர் பௌசுல் அமீர் போன்ற பிரதியாக்கக்காரர்களை, பிரான்ஸிஸ் ஜெனம், நடிகமணி கே.ஏ.ஜவாஹர் போன்ற நடிகர்களை, நெறியாளரான அமரர் சுஹைர் ஹமீட் இயக்குனர் தாஸீஸியஸ் போன்ற நெறியாளர்களை, பன்முக ஆற்றல்கள் கொண்ட பேராசிரியர் மௌனகுரு, நடிகவேள் லடிஸ் வீரமணி, போன்ற தயாரிப்பாளர்களை இன்னும் இன்றும் காணமுடியவில்லை.

கற்றல் - கற்பித்தல் என்ற செயற்பாட்டிலும் - நாடகமும் அரங்கியலும் என்ற கற்கை நெறியிலும் கணிசமான கலைஞர்கள் உள்வாங்கப்படவில்லை. உருவாக்கப்படவில்லை என்பது நிஜங்களின் நிதர்சனம். தன்னை ஆழமாக அறிந்தவர்கள் இக்கருத்தில் முரண்பாடு உடையவர்களாக இருக்கமாட்டார்கள்.

இன்றைய நவீன யுகமாற்றங்களுக்கேற்ப எமது ஆற்றுகைகளும் - எமது அரங்குகளும் மாற்றம் பெற வேண்டும். நமக்கு சவாலாக இருக்கின்ற சர்வதேச நவீனத்தோடு நிலைத்து நிற்க வேண்டுமாயின் நம்மை நாம் தயார்ப்படுத்திக் கொள்ளவேண்டும். அரங்க அளிக்கைகளைப் பொறுத்த வரையில், இன்று நடிகனை, பிரதியாளனை, நெறியாளனை விட, பார்வையாளனே முக்கியத்துவம் பெறுகிறான். எனவே 'நவீனத்துவம்' இல்லாத எந்தப் படையலும் விலை போகாத பண்டங்கள் என்பது ஏழாம் அறிவு.

நமது இளம் தலைமுறையினரின் சிந்தனை சிறகு விரிக்க, நாடகவாக்கத்தின், படைப்பாக்கத்திறன் விருத்தி செய்யப்பட வேண்டிய கடப்பாடு எம்முன் விஸ்வரூபதரிசனம் தருகிறது.

எனவே இளம் கலைஞர்கள் புதிதாக சிந்திப்பதற்கு அடித்தளம் இடவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில் ....

முப்பது ஆண்டுகாலம் நாம் ஓர் இருண்ட யுகத்திற்குள் சிக்குண்டு இருந்துள்ளோம். இக்கால கட்டத்தில் நமது விற்பன்னர்களில் சிலர் புலம் பெயர்ந்து சென்றனர். சிலர் புலன் பெயர்ந்து நின்றனர். சிலர் இயற்கை எய்தினர், எஞ்சியோரின் குறிப்பிட்ட சிலர் பத்திரிகை அறிக்கைகள், நேர்காணல்கள் மூலமாக தங்கள் மேதாவிலாசத்திற்கு மேடை அமைத்துக் கொண்டனர். ஏனையோர் பழம்பண்டிதராக பந்தல் கட்டிக் கொண்டனர்.

அதேவேளை...

"கலை எமக்களிப்பது ஊதியமல்ல, உயிர்' என்ற உயரிய நோக்கோடு ஒருவழிப் பாதையில் பயணித்தனர் தலைநகர்க் கலைஞர்கள். இந்த சூழ் நிலையில் நமது கலைஞர்களின் சிந்தனை அடங்கியது. முயற்சிகள் முடங்கியது. இதனால் எழுபதுக்கு பின் பிறந்த இளைய தலைமுறை கலைஞர்கள் சிறுவர் நாடகத்திற்கும், குறுநாடகத்திற்கும், பல அங்கங்களைக் கொண்ட முழு நீள நாடகத்திற்கும் வித்தியாசம் தெரியாதவர்களாக இருக்கிறார்கள்.

கலை நிலத்து வரட்சிக்கு எதிராக புரட்சி செய்யவேண்டி உள்ளது. போராட்டம் நடத்தித்தான் அரங்க பூமியில் தேரோட்டம் நடத்த வேண்டியுள்ளது.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் சமூக நாடகம் என்றும் சரித்திர புராண நாடகம் என்றும் பிரபல்யம் பெற்றிருந்த நாடக வடிவங்கள் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பதை மறந்து விட முடியாது. அவற்றை பழையது என்றும் ஒதுக்கிவிடவும் முடியாது. அவற்றைத் தொடர்ந்து ஆற்றுகைப் படுத்துவதன் மூலம் எமது பாரம்பரிய அரங்குகள் என்ற வகைக்குள் அவற்றை உள்ளடக்கலாம் என்பதில் அண்ணன் குழந்தை சண்முகலிங்கமும் நானும் ஒத்த கருத்துடையவர்களாக இருக்கிறோம்.

# குறிஞ்சிப்பூக்கள் அழுகின்றன

குறிஞ்சி பூக்கும் குளிர்தேசம்
எரிந்த நிலையில்
வாழ்வு ஏலமிடப்படுகிறது
வெளியே தெரிவதெல்லாம்
மாற்றம்
பூத்துவிட்டது என
மலையகம் எழுந்து விட்டது என
புள்ளிவிபரம் காட்டி
ஆய்வுக் கட்டுரைகள்
எழுத்தாகவேயுள்ளது
அவ்வப்போது
பூத்தவைகள் பெயர்கள் பெறாவே
எங்கள் அவலம் ஒரு பாடுபொருள்
பட்டணம் போனவர்கள் எல்லாம்
பாட்டாளிகளை நினைப்பது குறைவு
பாதி பசியில்தான் உலைகள்
கொதிக்கிறது
ரொட்டிதான் உழைப்பு தருகிறது
வேதனைகளை படம் பிடித்து
விற்று
காசாக்கும் கூட்டம் பெருகுகிறது
நிர்வாணம் மறைக்க தடுமாறுகிறோம்
நூற்றில் ஐந்து எழுகிறது
மீதம் கேள்விக்குறியானது
வளரும் தளிர்கள் வெட்டி
விடப்படுகிறது
குறிஞ்சிப் பூக்கள் அழுகின்றன.

- எஸ்.பி.பாலமுருகன்
பதுளை.

# மாற்றிப் பார்ப்போம்!

ஒரு தோல் போர்த்திய
மனிதருக்குள்ளும்
என்னையும் உன்னையும்
தூரம் தள்ளென
தெய்வம் சொன்னால்
கவலையில்லை...
'தள்ளி வைப்போம் தெய்வம்
தனை'

இறைவன் நம்மை பாதத்தில்
வைத்தான்
என்பதை மறவுங்கள்
இறைவன் நம்மை பாதமாய்
வைத்தான்
எனப் பாருங்கள்
இறைவனின் அசைவு கூட
உங்கள் இசைவிலே என்றாகி
விடும்

இருக்கும் இடத்தில் என்ன
இருக்கிறது?
இருக்கும் விதத்தை மாற்றுங்கள்
இறைவன் கூட சாத்திரத்தை சரி
செய்வான்



எம்.வை.எப்.ரிஸ்மியா.
கோட்டகொட.

சிறுகதை

# எதையும் தாங்கும் இதயம் வேண்டும்

- அருந்தவமலர், லண்டன்

"வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும் வாசல்தோறும் வேதனை யிருக்கும் வந்த துன்பம் எதுவென் றாலும் வாடிநின்றால் ஓடுவதில்லை'' சின்ன வயதிலே கேட்ட ஒரு சினிமாப் பாடல். ஆனால் அது என் வாழ்க்கை யோடு பிணைந்ததாக அமையும் என்று அப்பொழுது நான் நினைத்திருக்க வில்லை.

கௌரவமான வசதியான குடும் பத்தில் பிறந்த என் அம்மா சாவகச் சேரியிலுள்ள ஒரு பிரபல பாடசாலை யில் கல்விபயின்று வந்தார். அவரின் அழகும் கலகலப்பும் நல்ல நண்பிகளை உறவு கொண்டாட வைத்தது. கல்விப் பொதுத் தராதர உயர் வகுப்பில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் காலத்தில் ஒரு பஸ் சாரதியிடம் மனதைப் பறி கொடுத்து விட்டார். இருவரும் திருமணம் செய்து கொள்வதற்கு அம்மாவின் பெற்றோர் சொந்தங்கள் சம்மதிக்க மாட்டார்கள் என்று வலுவாகத் தெரிந் ததும் ஓடிப்போய் திருமணம் செய்து கொண்டு அப்பாவின் ஊர் பளையில் இருந்து குடும்பம் நடத்தி வந்தனர். நான் பிறந்து சில காலமாகச் சந்தோஷமாக இருந்த குடும்பத்தில் சச்சரவுகள் தோன்றத் தொடங்கி விட்டன. அப்பா வேலை முடிந்து குடித்து விட்டு வீட்டுக்கு வந்து அம்மாவுடன் சண்டை போடுவார். அம்மாவின் கண்களில் கண்ணீரைத் தான் தினமும் காணமுடிந்தது. வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும் என்று எண்ணிக் கொண்டேன். சாப்பாட்டுக்குக் கூட பல நாட்கள் கஷ்டப்பட்டிருப்போம். அம்மாவின் தோழி இராசமலர் வீட்டுக்கு வந்து எங்கள் நிலைமையை நன்றாகப் புரிந்துகொண்டு பின்னர் அவ்வப்போது உதவிகளைச் செய்து வந்தார். காலங்கள் ஓடிக்கொண்டிருந்தன. எனக்கு அப்பொழுது பன்னிரண்டு வயது.

அப்பா ஓடிக்கொண்டுபோன பஸ் மரத்துடன் மோதி படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் பெரியாசுபத்தி ரியில் சேர்த்திருப்பதாகவும் நிலமை மோசம் என்றும் வீட்டுக்கு வந்து சொன் னார்கள். அம்மாவும் நானும் ஆஸ்பத்தி ரிக்கு ஓடுகின்றோம். அங்கு போனபோது அப்பா இறந்து விட்டதாகச் சொன்னார் கள். நான் கத்தி அழகத்தொடங்கி விட்டேன். அம்மாவை பார்த்தேன் அவ வின் கண்களிலிருந்து கண்ணீர் ஒரு துளி கூட வரவில்லை. ஏன் அம்மா அழா மல் நிற்கின்றீர்கள் என்று கேட்டேன். நீ பிறந்த நாள் தொடக்கம் நேற்றுவரை அழுது கண்ணீர் எல்லாம் வற்றிவிட் டது என்றார். அம்மா, அப்பா இறந்தது உங்களுக்குக் கவலையில்லையா? என்று கேட்டேன். என் வாழ்க்கையைப் பொறுத் தளவில் அவர் இருந்தும் பயனில்லை இறந்தும் பயனில்லை என்று சொன்ன போது அம்மாமேல் ஒரு விதவெறுப்பு ஏற்பட்டது உண்மைதான்.

போக்குவரத்துச் சபை தொழிற் சங்கப் பிரதிநிதிகள் தங்கள் பொறுப்பில் அப்பாவின் மரணச் சடங்கைச் செய்து விட்டுச் சென்றுவிட்டார்கள். அப்பா இறந்த செய்தி அறிந்து அம்மாவின் தோழி இராசமலர் வீட்டுக்கு வந்தபோது அம்மா கத்தி அழத் தொடங்கிவிட்டா. அம்மா வைச் சமாதானப்படுத்திவிட்டு "என்ன செய்ய யோசிக்கிறாய் கமலம் என்று கேட்க, எனக்கு ஒரு வழியும் தெரிய

வில்லை இராசமலர் என்று சொல்லி அம்மா மீண்டும் அழத் தொடங்கிவிட்டா.

திருமணம் செய்யாமல் தனியாக வாழ்ந்து கொண்டிருக்கும் இராசமலர் அன்ரி அப்பொழுது ஒரு ஆசிரியராக கொழும்பு கொட்டாஞ்சேனையில் உள்ள ஒரு தமிழ்ப் பாடசாலையிலே கடமை யாற்றிக் கொண்டிருந்தார்.

கமலம் மகளையும் கூட்டிக் கொண்டு என்னுடன் வந்திரு. அங்கு பிள்ளையை எனது பாடசலையில் வைத்துப் படிப்பிக் கிறன். நீண்ட பிரயத்தனத்திற்குப் பின் நாங்கள் கொழும்பு வந்து சேர்ந்து அன்ரி யுடன் இருந்தோம். அம்மா வீட்டு வேலை, சமையல் வேலை எல்லாம் பாப்பா. நான் அன்ரியுடன் பாடசாலைக்குச் சென்று வந்தேன். நான் ஓ.எல் சித்தியடைந்து ஏ.எல்.படித்துக்கொண்டி ருந்தேன்.

நாங்கள் இருக்கும் வீட்டுக்குப் பக்கத் தில் உள்ள வீட்டில் ஒரு வயதான அம்மா தனியாகத்தான் இருக்கின்றா. சில நேரங்களில் நாங்கள் இருக்கும் வீட்டுக்கு வந்து அன்ரியுடன் கதைப்பா. அவ கதைத்து விட்டுப் போனபின்பு அவவைப்பற்றி அன்ரி சொன்னா.

யாழ்ப்பாணத்து ஆட்கள், அந்த அம்மாவின் புருசன் சுருட்டுக்கடை வைத்திருந்தவர் 83 கலவரத்தில் புருசனை அடிச்சுக் கொன்றுபோட்டாங் கள். ஒரேயொரு ஆம்பிளைப் பிள்ளை வைச்சிருக்கப் பயந்து லண்டனுக்கு அனுப்பிப்போட்டு மனிசி தனிய இருக் குது. பி.ஆர்.இப்பத்தானாம் கிடைச்சது அடுத்த மாதத்தில் மகன் வருவான் என்று சொல்லுவா'' என்று அன்ரி விபரங் களைச் சொன்னதும் அந்த அம்மா விடம் ஒருவித பரிவு ஏற்பட்டது.

காலங்கள் ஓடிக்கொண்டிருந்தன. நான் ஏ.எல்.சோதனை எழுதிவிட்டு வீட்டில் இருந்தேன். பக்கத்து வீட்டு அம்மாவின் மகன் லண்டனில் இருந்து வந்து விட்டார். ஒரு நாள் அவர் என்னைக் கண்டு கதைத்தார். அதன் பிறகு எனக்கு அவருடன் கதைத்து லண்டன் புதினங் களை அறிய வேண்டும் என்ற ஆவல் இருந்தாலும் அம்மா, அன்ரிக்குப் பயந்து கண்பார்வையுடன் நிறுத்திக் கொண்டேன்.

அடுத்த வீட்டு அம்மா ஒரு நாள் நாங்கள் இருக்கும் வீட்டுக்கு வந்து அன்ரியிடமும் அம்மாவிடம் ஏதோ கதைத் துக் கொண்டிருந்தா. அவ வழமையாக வந்திருந்து கதைக்கின்ற படியால் நான் என்பாட்டிலிருந்து என் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தேன். அடுத்த வீட்டு அம்மா போனபிறகு அம்மாவும் அன்ரியும் என்னிடம் வந்தார்கள். அன்ரி என்னைப் பார்த்து "பிள்ளை மலர் உனக்கு ஒரு நல்ல சம்மந்தம் வந்திருக்கு மாப்பிள்ளை வீட்டார் சீதனம் ஒன்றும் தேவையில்லை, பொம்பிளை கொஞ்சம் படிச்ச வடிவான பிள்ளையாக இருந்தால் காணும் என்று சொல்லிவிட்டார்கள். மாப்பிள்ளை இலண்டனில வேலை பார்க்கிறாராம். கலியாணம் முடிய இரண்டு மாதத்துக்குள்ள பொம்பிள் ளையை எடுத்துப் போடுவாராம். உன்ர அம்மாவின் நிலையில் உனக்கு இப்படி ஒரு அதிஷ்டம் கிடைச்சிருக்கு அதைக் கைவிடாமல் காலகாலத்தில் உனக்கு கல்யாணத்தைச் செய்துவைப்பது நல்லது என்று சொல்லுகிறா எனக்கும் அது தான் சரியெனத் தெரியுது. உன்னுடைய விருப்பத்தையும் அறிய வேண்டும் என்பதற்காகச் சொல்லுறன்'' என்று கூறிமுடித்தார்.

என்மனம் கவர்ந்த அடுத்த வீட்டு இலண்டன் மாப்பிளையாகத்தான் இருக்கும் என்று எண்ணிக்கொண்டு மௌனமாக இருந்தேன்.

"என்ன பேசமல் இருக்கிறாய். அடுத்த வீட்டு அம்மாவின் மகன் உன்னைக் கட்டிக்கொள்ள விரும்புகிறாராம் என்று தாய்வந்து கேட்டவ. நாங்களும் பிள்ளை யின் விருப்பத்தைக் கேட்டுச் சொல்லு கிறம் என்று அம்மா சொன்னவ. நான் விரும்பியவர் கணவராக வரப்போகி

றாரே என்று மனம் சந்தோசப்பட்டதற்கு அப்பால் இலண்டனுக்குப் போகப்போறேனே என்ற நிலையில் இரட்டிப்பு மகிழ்ச்சி. எதுவித தயக்கமுமின்றி சம்மதத்தைத் தெரிவித்துவிட்டேன்.

அதன்பிறகு திருமணம் நடந்து இரண்டு மாதங்களில் இலண்டனுக்கு வந்து சேர்ந்துவிட்டேன். ஒரு அறையுள்ள சின்னதான வாடகை வீட்டில் வாழ்க்கை ஆரம்பமாகியது. என் கணவர் ஒரு கோப்பிறட்டியில் வேலை என்று சொன்னார். கலை பத்துமணிக்கு வேலைக்குப் போவார் இரவு எட்டு மணிக்குத்தான் வீடு திரும்புவார். தனிமை என்னைப் பெரிதும் வாட்டியது. காலங்கள் ஓடிக் கொண்டிருந்தன. நான் கர்ப்பமானேன். அந்த நாட்களில் தனிமையில் நான் மிகவும் கஷ்டப்பட்டுப் போனேன். சத்தி, தலைசுற்று என்று கணவரிடம் சொன்னால் அது சாதாரணமாக நடக்கும் விடயம்தானே என்று சொல்லிவிடுவார். நான் படும் கஷ்டம் அவருக்கு எங்கே தெரியப் போகிறது வாழ்க்கையென்றால் அயிரம் இருக்கும் என எண்ணிக் கொள்வேன்.

இரவு பகல் குளிர் அதுவும் என்னைப் பெரிதும் வாட்டியது. காலாகாலத்தில்.... மகன் ஒருவன் பிறந்தான். அவனை வளர்த்தெடுப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டு விட்டேன். வீட்டின் பொருளாதார நிலை அவ்வளவாகச் சாதகமாக இருக்க வில்லை. இக்காலப் பகுதியில் என் கணவர் கொஞ்சம் கூடுதலாக குடிக்கத் தொடங்கிவிட்டார். எங்களில் இருந்த அக்கறை குறைந்துகொண்டே போகத் தொடங்கிவிட்டது. பிள்ளையையும் என்னையும் பார்ப்பதற்காக ஒரு வேலை செய்தே ஆக வேண்டும் என்ற கட்டாயம் தோன்றியது. அங்கு தெரிந்தவர்களிடம் என் கஷ்டங்களைச் சொல்லி வேலை ஒன்று எடுத்துத்தரும்படி வேண்டிக் கொண்டிருந்தேன்.

ஒருவாறு சில பிரயத்தனங்களுக்கு பிற்பாடு ஒரு மினி சுப்பர் மாக்கெட்டில் கூட்டித் துடைக்கும் வேலை கிடைத்தது. அதை நடத்தி வந்தவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் மனிதர். எனது பிரச்சினைகளை அவரிடம் சொன்னதும் அவர் என்னில் இரக்கப்பட்டு வீட்டுக்குத் தேவையான சாமான்களை குறைந்த விலையில் கடனாகத் தந்து பின் சம்பளத்தில் பெற்றுக்கொள்ளுவார். பிள்ளையைச் சுப்பமாக்கெட்டின் பின் பகுதியில் படுக்க வைத்துவிட்டுத் தான் வேலையைப் பார்த்து வந்தேன். அவரும் அதற்கு அனுமதி தந்ததால் எனக்கு ஆறுதலாக இருந்தது.

வேலைமுடிந்து அவசரமாக வீடுவந்து சேர்ந்து சமையல் வேலை பார்த்து எல்லோரும் சாப்பிட்டுப் படுக்க இரவு பன்னிரண்டு மணிசெல்லும். கணவர் போத்திலை வாங்கி வீட்டில் வைத்துக் குடிப்பதும் சிகரட் புகைப்பதும் பெரும் தொல்லையாக இருந்தாலும் பொறுத்துக் கொண்டு (என் அம்மாவைப் போல்) வாழ்வதைத் தவிர அந்நிய நாட்டில் வேறு ஒன்றும் செய்யத் தெரியவில்லை.

காலங்கள் ஓடிக்கொண்டிருந்தன. மகனுக்கும் நான்கு வயதாகிவிட்டது. அவனைப் பாடசாலையில் சேர்ப்பதற்குப் பெரிய பிரச்சினையாக இருந்தபோது எனது சுப்பர்மாக்கெட் முதலாளிதான் முயற்சி செய்து எடுத்துத் தந்தவர். என் கணவர் குடிமன்னனாக மாறியபடியால் ஒன்றையுமே கவனிப்பதில்லை. தனிமை கிடைக்கும் வேளைகளில் இதை நினைத்து அழுவேன். "வந்த துன்பம் எதுவென்றாலும் வாடி நின்றால் ஓடுவதில்லை" என்று எண்ணி என் வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்து விடுவேன்.

ஒரு நாள் என் கணவர் "வயது போன நேரத்தில அம்மா தனிய இருந்து கஷ்டப்படுகின்றா அவவை இலண்டனுக்கு எடுப்பித்து எங்களோட வைச்சிருக்கப் போறன்'' என்றார். நானும் அவ வருவது மிகவும் நல்லது. எடுப்பிப்ப

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

தற்கான அலுவல்களை உடன் பாருங்கள் என்று சொல்லிவிட்டேன்.

பாவம் அந்த அம்மா மகனை இலண்டனுக்கு அனுப்புவதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கும் கடைசிகாலத்திலே மகன் ஆறுதலில் வந்து இருப்பது நல்லது தானே நானும் அவவை நல்லாய்க் கவனிக்க வேண்டும் என்றும் மனதில் எண்ணிக் கொண்டு அவவின் வரவை எதிர்பார்த்திருந்தேன்.

அவருடைய அம்மா லண்டனுக்கு வந்தது சேர்ந்தது எனக்கு உண்மையிலேயே மகிழ்ச்சியைத் தந்தது. வீட்டில் ஒரு அறையிலுள்ள கட்டிலில் நான் கணவர் மகன் மூவரும் படுத்துறங்குவோம். மாமிக்கு குசினிப் பகுதியில் ஒரு மெத்தையைப் போட்டு படுக்கவிடுவோம். இந்த ஏற்பாடு அவவுக்குப் பிடிக்கவில்லை என்பது அவவின் நடத்தைகளில் இருந்து புரிந்துகொண்டாலும் வேறு என்ன செய்வது என்ற நிலையில் காலத்தைக் கடத்தினேன்.

ஒரு நாள் அவவுக்குக் குளிர் ஒத்துக் கொள்ளாத நிலையில் கஷ்டப் படுவதைக் கண்டு அறையிலுள்ள கட்டிலில் அவவைப் படுக்கவிட்டு நானும் மகனும் குசினிப்பகுதியில் படுத்துக்கொண்டோம். இச்செயற்பாடு மாற்றம் இன்றி தொடர் கதையாகவே தொடர்ந்தது.

கொஞ்ச நாட்களில் என் கணவரும் தாயும் சேர்ந்து எனக்குத் தொல்லை கொடுக்கத் தொடங்கிவிட்டார்கள். விடியற் காலையில் எழுந்து தேனீர் சாப்பாடு செய்து கொடுத்து மத்தியானச் சாப்பாடு செய்து வைத்து, வீட்டு வேலைகள் எல்லாம் பார்த்து விட்டு வேலைக்குப் போய் அதுமுடிய வீட்டுக்கு ஓடிவந்து மீண்டும் சமையல் வீட்டு வேலைகள் எல்லாம் பார்த்து மாமி கணவன் இருவருடைய பேச்சுக்களையும் கேட்டுக் கொண்டுபடுத்து நித்திரையின்றி மன வேதனையில் கண்ணீர் விட்டபடி இயந்திரமாகத் தினமும் வாழும் வாழ்க் கையை எண்ணி வேதனைப்பட்டாலும் யாரிடம் சொல்வது. எனக்காகத் தானோ என்னவோ வாழ்க்கையென்றால் ஆயிரம் இருக்கும் வாசல் தோறும் வேதனை இருக்கும்'' என்று அந்தக் கவிஞர் பாடிவைத்தான் போலும்.

என் கணவரும் தாய் சொல்லுவதை மந்திரமாகக் கொண்டு எடுத்ததுக் கெல்லாம் ஏதோ பிழை கண்டுபிடித்து ஏசுவதிலேயே கவனமாக இருந்து வந்தார். பல நாட்கள் பொறுமையைக் கடைப்பிடித்து வந்த நிலையில் ஒரு நாள் பொறுமையிழந்து ஏதோ சொல்லி விட்டேன் என்பதற்காக கணவரும் மாமியும் சேர்ந்து எனக்கு அடிக்கத் தொடங்கிவிட்டார்கள். பொறுக்க முடியா மல் கத்தி அழுதேன். என்னையும் மகனையும் வீட்டுக்கு வெளியாலை தள்ளிவிட்டு கதவைப் பூட்டிவிட்டார்கள் வீட்டு வாசலில் பிள்ளையையும் வைத்துக் கொண்டு குளிருக்குள் அழுதபடி மணிக் கணக்காக வெளியே இருந்தும் எதுவித பயனும் இல்ல. நீண்ட நேரத்தின் பின் கதவை திறந்த எனது கணவர் உன்னை எனக்குத் தேவையில்லை உன்ர பிள்ளையையும் கூட்டிக்கொண்டு எங்கையாவது ஓடிப்போய்விடு. என் கண்ணிலை முழிக்கக் கூடாது என்று சொல்லி விட்டு கதவைப் பூட்டிக் கொண்டார்.

வேதனையும் வெப்பியாரமும் மனதை வாட்ட தாய்க்காக கட்டிய மனைவியையும் பிள்ளையையும் வீட்டைவிட்டுத் துரத்தியடித்த என் கணவரை நினைத்துப் பார்க்கின்றேன். தாய் இருக்கும் வரை அவர் என்னையும் பிள்ளையும் வீட்டுக்கு அடுக்கவே மாட்டார் என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொண்ட நான் பிள்ளையும் கூட்டிக் கொண்டு நான் வேலை செய்யும் மினி சுப்பர் மார்க்கட் முதலாளியிடம் என் நிலைமைகளைச் சொல்லியழுதேன். அவர் அன்று தனது வீட்டில் தங்கவைத்து அடுத்த நாள் இருவருக்கும் ரிக்கேற் புக்பண்ணி தன் செலவில் இலங்கைக்கு அனுப்பி வைத்தார்.

கொழும்புக்கு வந்து கொட்டாஞ் சேனையில் இருக்கும் அம்மாவையும் அன்ரியையும் சந்தித்து நான் பட்ட கஷ்டங்களைச் சொல்லி அழுது எனது கவலையைக் கொட்டித்தீர்த்தேன்.

தொடர்ந்து வாழ்வதற்கு என்ன வழி என்று சிந்தித்துப் பார்த்தேன். ஒரு வழியும் தெரியவில்லை. கடைசியாக மகனை அம்மாவுடன் இலங்கையில் விட்டுவிட்டு மீண்டும் இலண்டனுக்கு வந்து உழைத்து அம்மா, மகன் இருவரின் சீவியத்துக்குப் பணம் அனுப்புவது என்ற திடசங்கற்பத்துடன் இலண்டனுக்குப் பயணமானேன்.

எனது முதலாளியிடம் விபரங்களைத் தெளிவுபடுத்தி மீண்டும் வேலையைப் பெற்றுக்கொண்டேன். தங்குவதற்கு தன் வீட்டில் தங்கலாம் என்று சொல்லியும் விட்டார். நான் முதலில் யோசித்தாலும் பின்பு வீட்டுக்கு அனுப்புவதற்குப் பணம் வேண்டுமே வீட்டு வாடகைக்குக் கொடுக்கும் காசும் மிஞ்சும்தானே என்று எண்ணி முதலாளி வீட்டில் தங்குவ தற்குச் சம்மதித்தேன்.

முதலாளி திருமணம் செய்தவர் மனைவியை யாழ்ப்பாணத்தில் விட்டு விட்டுத் தனியாகத்தான் வீட்டில் இருந்தார். வயது நாற்பது இருக்காது. சக்கரை வியாதி தினமும் இன்சுலின் அடித்துக் கொள்வார். வீட்டில் இருந்து குடிப்பதும் புகைப்பதும் தான் அவரின் முழு நேரப் பொழுதுபோக்கு. தனிமையில் இருந்து இவற்றுக்கு அடிமையாகி விட்டார். மாதம் ஒரு முறையாவது மருத்துவ மனைக்குச் சென்று இரண்டு மூன்று நாட்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுத் திரும்பவும் வீட்டுக்கு வருவார். அவர் மேல் எனக்கு ஒரு மரியாதையும் பரிதாபமும் ஏற்பட்டு அவரைக் கவனிப்பதும் மற்றும் வீட்டு வேலைகளுடன் அவருக்கான சாப்பாடுகளைச் செய்து கொடுப்பதும் ஒரு சேவையாகச் செய்து வந்தேன். இருபத்தைந்து வயதில் வாழ்க்கையை இழந்து நிற்கும் எனக்கு மனதில் உள்ள கவலையை மறந்து அவருக்குச் சேவை செய்வது ஆறுதலைக் கொடுத் தது.

அவர் சுப்பமார்க்கட்டுக்குப் போகாத வேளையில் என்னைப் போகச் சொல்வார். இப்பொழுது சுப்பர் மாக்கட் மூழு வேலை களையும் அவரின் அக்காவின் மகன் ராஜன் பார்த்துக் கொண்டு வந்தார். நான் அங்கு போகின்ற வேளைகளில் ராஜன் என்னை ஒரு மாதிரிப் பார்ப்பார். சில வேளைகளில் பக்கத்தில் வந்து நின்று கதைப்பார். அந்த நேரம் எனக்கு ஒரு மாதிரியாக இருந்த போதிலும், வெளிப்படையாக ஒன்றுமே தெரியாத மாதிரி இருந்து வேலைகளில் கவனம் செலுத்திக்கொள்வேன்.

என் கணவர் என்னை வந்து கூட்டிப் போவர் என்று இலண்டனுக்குத் திரும்பி வந்து இரண்டு வருடமாகக் காத்திருந் தேன். அவர் வரவே இல்லை. ஒரு நாள் வெளிக்கிட்டு நாங்கள் இருந்த வீட்டுக் குச் சென்று பார்க்கின்றேன். அங்கு கணவரோ மாமியோ இல்லை. வேறு ஒரு குடும்பம் இருந்தது. அவர்களிடம் விசாரித்த போது அவர்களுக்குத் தெரிய வில்லை. பக்கத்து வீட்டுக் காரரிடம் விசாரித்தேன். அவர்கள் ஒருவருடத் திற்கு முன் வீட்டை விட்டுப் போய் விட்டார்கள் என்று சொன்னார்கள். கணவன் வேலை செய்த கோப்பிறட்டி க்கு சென்று அங்கு வேலை செய்பவர் களிடம் விசாரித்துப் பார்த்தேன். காசு களவெடுத்துப் பிடிபட்டு வேலை நீக்கம் செய்து விட்டார்கள். இப்பொழுது என்ன செய்கிறார், எங்கே போய் விட்டார் ஒன்றும் தெரியாது என்று சொல்லி விட்டார் கள். எனக்குச் செய்த கொடுமைக்கு பிராயசித்தம் போலும் என்று நினைத்துக் கொண்டேன்.

தொடர்ந்து முதலாளி வீட்டில் இருந்து எனது கடமைகளையும் சுப்பர் மார்க் கட்டில் வேலையையும் பார்த்துக் கொண்டு கிடைக்கும் பணத்தில் யாழ்ப் பாணத்திற்குப் பணத்தை அனுப்பிக் கொண்டு மிகுதிப் பணத்தை வங்கியில்

வைப்பிலிட்டு வந்தேன். காலங்கள் ஓடிக்கொண்டிருந்தன.

அம்மாவிடமிருந்து கடிதம் ஒன்று வந்திருந்தது. ஆவலுடன் படிக்கலானேன். உன்ர புரிசனும் மாமியாரும் புங்குடுதீவில வந்து இருந்த போது மாமியார் இறந்துவிட்டதாகவும் அதன் பிறகு தனிய இருந்த "உன்ர கணவர் மனநோயாளியாக இருந்து ஒரு நாள் கிணற்றுக்குள் விழுந்து இறந்து விட்டார். இவை நடந்து ஆறுமாதங்களுக்கு மேலாகிவிட்டது. இப்பதான் எங்களுக்குத் தெரிய வந்தது" என்று கடிதம் எழுதியிருந்தார். தாயின் சொல்லக் கேட்டுக்கொண்டு குடும்பத்தை வெறுத்து ஒதுக்கிய ஆணாதிக்கத்தின் செயற்பாடுகளுக்கு இது ஒரு உதாரணமாக அமையட்டும் என்று நினைத்துக் கொண்டேன். விடுதலை நிரந்தரமாகக் கிடைத்து விட்டதே என்று நினைக்கும் போது மனத்திற்கு ஆறுதல் அளித்தது.

எனது முதலாளி மருமகளுக்கு திருமணம் என்று சொல்லி கனடாவுக்குச் சென்றுவிட்டார். வீட்டில் எனக்குத் துணையாக ராஜன் வந்து தங்குவார்.

"எனக்கு உங்கள் மேல் சரியான விருப்பம்'' என்று ராஜன் சொன்னார்.

அப்படியா! அப்ப என்னைத் திருமணம் செய்து கொள்ளுகின்றீர்களா? என்று கேட்டேன்.

"எனக்காக எனக்கொரு மச்சாள் ஊரில பார்த்துக்கொண்டிருக்கிறாள்''

"அப்படியென்றால் அவளைக் கட்டுவதுதானே'' என்றேன்.

"எனக்குப் பி.ஆர் கிடைச்சாத் தானே ஊருக்குப் போகலாம்'' என்றான் ராஜன்.

"அப்ப என்ன உத்தேசம்" என்றேன்

அதுவரை உங்களுடன் வாழ விரும்புகின்றேன்" என்று சொன்னானே படுபாவி. பார்க்கப் பரிதாமாகவும் இருந்தது அவன் நிலை.

"கோவிக்க மாட்டீர்கள்தானே நான், நீங்கள் பார்ப்பதற்கு நல்லதொரு புளூபிலிம் கொண்டு வந்திருக்கிறேன் பார்ப்பமா'' என்று கேட்டான்.

"சரி பார்த்தால் போகிறது" என்றேன்.

படம் பார்த்துக் கொண்டிருக்கும் போது ராஜன் எனக்குப் பக்கத்தில் வந்திருந்து என் கைகளைப் பிடித்து "உங்களுக்கும் சம்மதமா'' என்று கேட்டான்.

எனக்கு ஒன்றும் சொல்லத்தோன்றவில்லை நான் படுக்கும்அறைக்குச் சென்று கதவை மூடிக்கொண்டு கட்டிலில் படுத்துவிட்டேன். கதவு தட்டும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

"வந்த துன்பம் எதுவந்தாலும் வாடிநின்றால் ஓடுவதில்லை. எதையும் தாங்கும் இதயம் வேண்டும்'' என்ற பாடலை நினைத்துக்கொண்டு அறைக் கதவை திறக்கின்றேன் ராஜன் அறைக்குள் வந்ததும் மீண்டும் கதவைச் சாத்திக்கொள்ளுகின்றேன்.

(வெளிநாட்டு மாப்பிள்ளைமாரை நம்பித் திருமணம் செய்த என்னைப் போன்றபெண்களுக்கு என் வாழ்க்கை ஒரு பாடமாக அமையட்டும். இது எனது உண்மைக் கதை.)

''எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும், தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என்ற சினிமாப் பாடல் அன்னையொருத்தியின் அற்புதமான வளர்ப்பின் இரகசியத்தை விளம்பி நிற்கிறது. சுயநலம் பாராது. பொது நோக்கோடு எல்லாப் பிள்ளைகளிடமும் அன்புகாட்டி அவர்களை அரவணைக்கும் உன்னதமான பண்புடன் வாழவேண்டிய தாய்க்குலம் இன்று பொறாமை, வஞ்சகம், பொய், புரட்டுடன் ஒன்றித்து நெறிகெட்டு வாழும் நிலையைக் காணும் போது ''நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மனிதரை நினைந்துவிட்டால்'' என்று பாரதியின் கவிவரிகளை மீட்டுப்பார்க்க எண்ணுகிறது மனம்.

கட்டுரை

# ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் கவிதைகளின் பங்களிப்பு

தம்பு சிவசுப்பிரமணியம்

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு என்று நோக்கும்போது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் இருந்து அதை முன் வைக்கலாம் என் எண்ணுகின்றேன். சங்ககால இலக்கியங்கள் தொடக்கம் ஐரோப்பியரின் வருகைக்கு முன்னுள்ள காலப்பகுதியில் ஈழத்தைப் பொறுத் தளவில் எழுந்த இலக்கியங்கள் பற்றிய முழுமையான தெளிவு எமக்கில்லை. எனவே ஐரோப்பியர் காலத்துடனான காலப்பகுதியிலிருந்து ஈழத்தில் தோன்றிய இலக்கியங்கள் தொடர்பான எனது பதிவை உங்களுடன் பகிர்ந்து கொள்ள லாம் என எண்ணுகின்றேன். ஆறுமுக நாவலர் காலத்தில் எழுந்த இலக்கி யங்கள் யாப்பு விதிகளுக்கு அமைவாக செய்யுள் வடிவத்திலேயே எழுதப்பட்டன. படித்த புலவர்கள் பண்டிதர்கள் போன்றவர் களாலேயே அவற்றைப் புரிந்து கொள்ளக் கூடிய நிலை இருந்தது.

ஈழத்தின் உரைநடை இலக்கிய முன்னோடியான ஆறுமுகநாவலர் எல்லோரும் படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் உரைநடை இலக்கியங் களை வெளிக்கொணர்ந்தார். அதே வேளை சிறுபிள்ளைகள் தமிழ்மொழிக் கல்வியைக் கற்கவேண்டும் என்ற நோக்கில் இலகுதமிழில் பால பாடம் என்னும் பாடநூலை உருவாக்கி வெளி யிட்டார். அச்சுயந்திரசாலையை நிறுவிய அவரால் நூல்களை வெளியிடுவது சாத்தியமாயிற்று.

தமிழ்மொழிக் கல்வி குருசிஷ்ய முறையில் திண்ணைப் பள்ளிக்கூடங் களிலேயே கற்பிக்கப்பட்ட காலத்தில் வித்துவச்செருக்கு மிக்கவர்களாக இருந்த ஆசான்கள் தமது மாணாக் கர்களையும் வித்துவ வல்லமை பெற்ற வர்களாகவே உருவாக்கினார்கள். புலவர்கள் பண்டிதர்கள் கையில்தான் இலக்கிய உருவாக்கம் இருந்துள்ளது. சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், நல்லூர் சின்னத்தம்பிப் புலவர், பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை, இணுவில் சின்னத்தம்பிப்புலவர் போன்ற பல புலவர்கள் தமது படைப்புக்களை செய் யுள் நடையிலேயே தந்தனர். அதே வேளை தமது சமயம் சார்ந்த கோயில் களின் மேல் அந்தாதி, உலா, ஊஞ்சல் பாடல்களையும் பாடியுள்ளனர். எழுந்த மானத்தில் பாடல்களைப் பாடவல்ல பல புலவர்கள் இருந்துள்ளார்கள். கல்லடி வேலன் என்பவர் விகடகவி புனைவதில் வல்லவராக இருந்துள்ளார்.

வடபுலத்தில் ஆறுமுகநாவலரின் பணி எவ்வாறு அமைந்ததோ அதற்கு ஈடாகக் கிழக்கிலங்கையில் விபுலானந்த அடிக ளாரின் பணியும் அமைந்தது. யாழ்நூல் தந்த சுவாமி விபுலானந்தர் கவிதை எழுதுவதிலும் வல்லவர்.

*"வெள்ளை நிறப் பூவுமல்ல*
*வேறெந்த மலருமல்ல*
*உள்ளக் கமலமடி*
*உத்தமனார் வேண்டுவது"*

என்ற அவருடைய பாடல் மிகவும் பிரசித்தி பெற்றது. தமக்குக் கல்வி புகட்டிய குஞ்சித்தம்பி ஆசிரியர் மேல் தாம்கொண்டிருந்த மதிப்பையும், குரு பக்தியையும் நன்றியுணர்வையும்

வெளிப்படுத்தும் வகையில் கவிதையில் அஞ்சலி செலுத்துகின்றார்.

*"அம்புவியிற் செந்தமிழு மாங்கிலமும்*
*எனக்குணர்த்தி அறிவு தீட்டி*
*வம்புசெறி வெண்கலச வவ்வியருள்*
*கூட்டி வைத்த வள்ளல் குஞ்சித்*
*தம்பியெனும்பெயருடையோன்*
*தண்டமிழன் கரைகண்ட*
*தகைமை யோன்றன்*
*செம்பதும மலர்பதத்தைச்சிரத் திருத்தி*
*எஞ்ஞான்றும் சிந்திப்பேனே"*

என்று அமைகிறது அந்தக் கவிதை.

தங்கத்தாத்தா சோமசுந்தரப்புலவர்

*"ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை*
*ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!"*
*கூடிப் பனங்கட்டி கூழும் குடிக்கலாம்*
*கொளுக்கட்டை தின்னலாம் தோழர்களே!"*
என்றும்

*"கத்தரித் தோட்டத்து மத்தியிலே நின்று*
*காவல் புரிகின்ற சேவகா!"*

ஆகிய பாடல்களைப்பாடி குழந்தைகளை உற்சாகப்படுத்தியுள்ளார்.

ஆறுமுகநாவலர் வழிவந்த பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களும், மீன்பாடும் தேன்னாடாம் மட்டுநகர் தந்த புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையும் முக்கியமானவர்கள். அவர்கள் இருவரும் உரை நடையில் எழுத்துகளைத் தந்தாலும் 'வெண்பா' வடிவில் பல பாடல்களைத் தந்துள்ளார்கள். இவர்களைப் போன்றே புலவர்மணி ஷரிப்புத் தீனும் தமிழ் இலக்கியப் பரப்பில் முத்திரை இடப்பட்டுள்ளார்.

கவி என்பது கவிதையையும் அதே வேளை அக்கவிதைகளைப் பாடும் புலவனையும் குறிக்கும் கற்றோருக்கு இன்பம் தரும் கவிதைகளை மதுரகவி, ஆசுகவி, சித்திரக்கவி, வித்தாரக்கவி என்று நான்கு வகையாகக் காட்டுவார்கள். மதுரகவி என்பது சுவையாகப்பாடும் புலவனையும் பாடலையும் குறிக்கும். வித்துவான் வேந்தனாரின் மதுரகவிப் பாடல்கள் நம்மை வசப்படுத்தும். வித்தாரக்கவி என்பது வியக்கும் வண்ணம் பாடும் புலவனையும் பாடலையும் குறிக்கும். ஆசுகவி என்பது நினைத்தவுடன் பாடும் புலவனையும் பாடலையும் குறிக்கும். ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை அவர்களும் புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களும் ஆசுகவி பாடுவதில் வல்லவர்கள். சித்திரக்கவி என்பது நுட்பமாகப் பாடும் புலவனையும் பாடலையும் குறிக்கும். சித்திரக்கவியில் வல்லவரான மாவைக் கவி மயில்வாகனப் புலவர் பல கவிதைகளைத் தந்துள்ளார்.

அக்காலப்பகுதியில் நம்நாட்டுக் கவிஞர்களான வித்துவான் வேந்தனார். புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை, ஆசுகவி கல்லடி வேலன், சித்திரக்கவி மாவை மயில்வாகனப் புலவர் ஆகியோர் ஈழத்துக் கவிதை வளர்ச்சிக்கு தமது பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையும் ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளையும் ஒருநாள் யாழ்ப்பாணத்திலிருந்து பஸ்வண்டியில் திருகோணமலைக்குப் போகிறார்கள். வெவ்வேறு ஆசனத்தில் அமர்ந்திருந்து பயணம் செய்யும் இருவரும் வெய்யில் வெப்பம், சன நெரிச்சல் வியர்வை காரணமாக அந்த அனுபவத்தை கவிதை மொழியில் ஒருவருக்கொருவர் பேசுகிறார்கள்.

*"மனமும் விறைந்தது மார்பும் விறைத்தது*
*மாதர்கன*
*தனமும் விறைத்தது தாங்காத வெப்பம்*
*தகித்திடவா*
*சனமும் விறைத்த தாள் மேலாளை*
*ஏற்றச் சனமடைவி*
*சனமும் உரைப்பதென் பஸ்பயணம்*
*பெருஞ் சங்கடமே"*

தங்கள் சுவையான துன்ப அனுபவத்தை எடுத்த எடுப்பிலே உரையாடல் போன்று எழுத்தெண்ணிப்பாடும் கட்டளைக் கலித்துறைப்பாடலுக்குரிய யாப்பிலே அசுகவியாக இருவரும் பாடியுள்ளார்கள்.

அநேகமாக அன்று வாழ்ந்த மரபு வழிநின்று புலமைபெற்ற புலவர்களும், பண்டிதர்களும் தமது வித்துவச் செருக்குடன் கடவுளர்களைப் பற்றியும், பழந்தமிழ் இலக்கியங்களோடு தொடர்பு கொண்ட உணர்வுகளையும், இயற்கையுடனான ஈடுபாடுகளையும், பண்பாட்டு ரீதியான வைபவங்களைப் பற்றியும் கவிதைகளை யாத்துள்ளனர். பக்தி நெறியுடன் கற்பனை வளமும் அவற்றில் பொதிந்திருந்தன.

ஆங்கிலலேயரின் வருகையுடன் ஆங்கிலக் கல்வியின் தோற்றம் ஈழத்தின் இலக்கியப் பரப்பில் பல புதிய மாற்றங்களை அதாவது புதிய பாரம் பரியத்தைத் தோற்றுவித்தது. அன்று மேல் மட்டத்தில் உள்ளவர்களே தம்மைப் பெருமைப்படுத்திக் கொள்வதற்காக ஆங்கிலத்தைக் கற்றனர். காலப்போக்கில் அரச உத்தியோகம் பெறுவதற்காக மத்தியதர வர்க்கத்தினரும் ஆங்கிலக் கல்வியைக் கற்கலாயினர். அத்தகைய மத்தியதர வர்க்கத்தினர் தங்களது ஆங்கில அறிவின் நிமிர்த்தம் ஆங்கில இலக்கியங்களைப் படிக்கக் கூடிய வல்லமையை உருவாக்கிக் கொண்டனர். முதலில் மொழி பெயர்ப்பு வாயிலாக அவற்றைத் தமிழுக்குக்கொண்டு வந்தனர். இதன்படிமுறை வளர்ச்சியாக நாவல், சிறுகதை, கவிதை வடிவங்கள் தமிழுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன.

பாமரமக்களை சுதந்திர தாகம் கொண்டவர்களாக மாற்றவேண்டும் என்ற நோக்கில் இந்தியாவில் பாரதி எழுச்சி பெறுகின்றான். பண்டித வர்க்கத்தின் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் துணிந்து நின்று உணர்ச்சிக் கவிதைகளை இலகு தமிழில் கவிதைகளாகத் தந்தான். கவிதை இலக்கிய வரலாற்றில் வசன கவிதைகள் தோற்றம் பெற்று ஈழத்திலும் தமது செல்வாக்கைச் செலுத்தின.

1948 ஆம் ஆண்டு கே.கணேஷ் தொடங்கிய பாரதி என்னும் சஞ்சிகை மொழிபெயர்ப்புக் கவிதைகளுடன் வசனகவிதைகளையும் பிரசுரித்தது. கே.கணேஷ் இராமநாதன் அ.ந.கந்தசாமி ஆகியோரின் படைப்புக்கள் வெளிவந்தன. இதே ஆண்டு வரதரை ஆசிரியராகக் கொண்டு மறுமலர்ச்சி என்ற இதழ் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்தது. வரதர், மாஹாகவி உருத்திரமூர்த்தி, அ.ந.கந்தசாமி போன்றோர் வசன கவிதைகளை எழுதிவரலாயினர். மஹாகவி வசன கவிதை வடிவில் குறும்பா, நாடகங்கள் என்பவற்றையும் எழுதியுள்ளார். 'கண்மணியாள் காதை' லடீஸ் வீரமணியின் வில்லுப்பாட்டில் பெருமை பெற்றதை குறிப்பிட்டே ஆக வேண்டும். மஹாகவி, சில்லையூர் செல்வராஜன், நீலாவணன் ஆகிய மூவரும் கவிதைத்துறையில் கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளனர். கவியரங்குக் கவிதைகளை வழங்குவதில் சில்லையூர் செல்வராஜனின் பங்கு அளப்பரியது. 70களில் சில்லையூர் செல்வராஜன், இ.முருகையன், அம்பி, எம்.ஏ நு:.மான், சண்முகம் சிவலிங்கம், சத்தியசீலன், கரவை செ.சுந்தரம்பிள்ளை, ச.வே.பஞ்சாட்சரம், கல்வயல் வே.குமாரசாமி, புதுவை இரத்திரனதுரை, சோ.பத்மநாதன் ஆகியோர் கவியரங்குகளில் தோன்றி தமது பங்களிப்பை வழங்கியுள்ளார்கள். மஹாகவியின் கவிதைகளை எம்.ஏ.நு:.மானும், சண்முகம் சிவலிங்கமும் முன்னிலைப் படுத்தி தமது விமர்சனங்களை முன் வைத்துள்ளனர்.

1956ஆம்ஆண்டு ஏற்பட்ட அரசியல் மாற்றம் புதிய நிலைப்பாடுகளைத் தோற்றுவித்தது. தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவம் உணரப்பட்டு பெருந்

தொகையான பிள்ளைகள் கல்வி கற்கக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன. 1944 ஆம்ஆண்டு W.W.கன்னங்கர வினால் கொண்டு வரப்பட்ட இலவசக் கல்விமுறை மேட்டுக்குடி மக்களுக்கே பயனுள்ள தாக அமைந்தது என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டும். அக்காலத்தில் கல்வி பாமரமக்களுக்கு எட்டாக் கனியா கவே இருந்தது. 1956க்குப் பின் தாய் மொழிக்கல்வியின் வருகையுடன் இலவசக் கல்வியின் அர்த்தப்பாடு புலனாகியது.

பாடசாலைகள் தேசியமயமாக்கப் பட்டதன் விளைவாக சாதாரண குடும்பப் பிள்ளைகளும், பின்தங்கிய குடும்பப் பிள்ளைகளும் கல்வி கற்று அறிவைப் பெறுகின்ற வாய்ப்புக் கிடைத்தது. எல்லோருக்குமான கல்வி என்பது ஒரு வரப்பிரசாதமாக அமைந்ததைக் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

முற்போக்கு இலக்கியச் சிந்தனை தோற்றம் பெற்ற காலத்தில் திரு.கே.கணேஷ், இராமநாதன் இளங்கீரன் சுபைர், பிரேம்ஜீ சில்லையூர் செல்வராஜன் ஆகியோர் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை நிறுவிச் செயற்பட ஆரம்பித்தனர். போராசிரியர்களான க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, அறிஞர் அ.முகம்மது சமீம், டொமினிக் ஜீவா, டானியல், ஏ.இக்பால், கே.கணேசலிங்கன், காவலூர் இரசாதுரை, நீர்வை பொன்னையன், இ.முருகையன், அகஸ்தியர், தெணியான் இன்னும் இலங்கை எழுத்தாளர்களில் பலர் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் இணைந்து புதிய பாதையில் 'இலக்கியம் மக்களுக்காக' என்ற தொனிப்பொருளு டன் செயற்பட ஆரம்பித்தனர்.

இக்காலகட்டத்தில்தான் 'மரபுப் போராட்டம்' முன்னெடுக்கப்பட்டது. பண்டிதவர்க்கத்திற்கு எதிராக முற்போக்கு எழுத்தாளர் சங்கம் முனைப்புடன் நின்று தனது போராட்டத்தை முன்னெ டுத்து வெற்றியும் கண்டது. ஈழத்து எழுத்தாளர்கள் பலர் புதுக்கவிதையில் தடம் பதித்தனர். புதுக்கவிதைகளின் தோற்றம் தமிழ் இலக்கிய வரலாற்றில் புதிய துறையாக வளர்ந்து வருகின்றது. மரபுப் போராட்டத்தின் போது அதற்கு ஆதரவாக இளங்கீரன் சுபைர் 'மரகதம்' சஞ்சிகையில் ஆக்கங்களை முன்வைத் தார். இப்போராட்டத்தின் பயனால் புதுக் கவிதைகள் தோற்றம் பெற்றன. ஈழத்தின் இலக்கிய வரலாற்றில் புதுக்கவிதை களின் வரவு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தின என்றே கூறவேண்டும். இன்று ஏராளமான கவிதைகள் புதுக் கவிதைகளாகவே வெளிவருகின்றன. ஒரு சிலர் மரபுக் கவிதைகளை எழுதி வந்தாலும் அதன் வரவு வலுவாகக் குறைந்து விட்டது.

ஈழத்துக் கவிதை வளர்ச்சியில் பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொ லிகளின் பங்களிப்பை மறக்க முடியாது. பத்திரிகைகள் சஞ்சிகைகளில் எழுதிய படைப்பாளிகள் அவற்றைத் தொகுத்து நூல்களாக வெளிக்கொணர்ந்துள்ளனர். அந்த வகையில் நிறையக் கவிதை நூல்கள் வெளிவந்துள்ளன.

காப்பியங்கள் பல கவிதை வடிவில் வெளிவந்துள்ளன. நீலாவணன், ஜின்னாஹ் ஷரிபுத்தீன், செங்கதிரோன் ஆகியோர் இத்துறையில் தடம்பதித்துள் ளனர். உணர்ச்சிக் கவிதைகளைப் படைப்பதில் காசி ஆனந்தன் முன்னின் றார்.

போராளிகளால் எழுதப்பட்ட போர்க் காலக் கவிதைகள், யப்பான் நாட்டில் பிரபல்யமான கைக்கூக் கவிதைகள் என்பனவும் கவிதை இலக்கியமாக வரவு பெற்றுள்ளன. கவிதைக்கென்று ஈழத்தில் மறுகா, கவிஞன், நீங்களும் எழுதலாம் போன்ற சஞ்சிகைகள் வெளிவந்துள்ளன.

கவிஞர்களான எம்.ஏ.நு:மான், ஏ.இக்பால், அன்பு ஜவர்ஷா, கிண்ணியா

அமீர்அலி, தாஸிம் அகமது, நாகூர்கனி, அலி அக்பர், மருதூர்மஜித் மருதூர்கனி கலைவாதி கலீல், திக்குவல்லை கமால், மேமன்கவி இவர்களுடன் ஏராளமான முஸ்லிம் கவிஞர்களும் கவிதை இலக்கிய வளர்சிக்கு பெரும் பங்காற்றியுள்ளனர். பங்காற்றியும் வருகின்றனர்.

ஈழத்தின் கவிதை வளர்ச்சிக்கு தோற்றுவாயாக இருந்த காரணிகளை மீட்டு நோக்குவோமானால் உரைநடை இலக்கியத்தின் தோற்றம், ஆங்கிலக் கல்வி, பாரதியின் யுகப்புரட்சி, 1956ஆம் ஆண்டு ஏற்பட்ட அரசியல் மாற்றம், தாய்மொழிக்கல்வி, மரபுப் போராட்டம் என்பன ஈழத்தின் கவிதை வளர்ச்சியை நிர்ணயித்த காரணிகளாக அமைந்திருப்பதைக் காணலாம். ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய பெரும் தலைப்பாகக் கொண்டு இத்துறை முன்னெடுக்கப்பட வேண்டும். ■

# சிரிகதைகள்

## ஓர் ஆசிரியர் தன் வகுப்பு மாணவர்களுக்கு அறிவுரை கூறினார்:



“பிள்ளைகளே! உங்களோடு முக்கியமான ஒரு அனுபவத்தை நான் பகிர்ந்து கொள்ள வேண்டும். அது என்னவென்றால், இதே பாடசாலையில் படிச்சு, இதே பாடசாலையில் பரீட்சை எழுதி, இப்ப, இதே பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றுகின்றேன் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!'' என்றாராம் பெருமையோடு.

அவர் கூறிமுடிந்ததும் மாணவன் ஒருவன், “சேர், இந்தப் பாடசாலையில் படிச்சா வேறு இடத்தில் வேல தரமாட்டாங்க என்று, எங்கட அப்பாட்ட அப்பவே திரும்பத் திரும்ப சொன்னன் சேர், கேட்டாரா அவரு! இப்ப உங்க நிலைமை தான் எங்களுக்கும்!'' என்றானே பாருங்களேன்.

ஓர் ஆசிரியர் அண்மையில் தற்கொலை செய்ய முயற்சித்ததாக ஏதே ஒரு பத்திரிகையில் படித்த ஞாபகம் இருக்கிறது! அதற்கான காரணம் இப்போது தான் புரிகிறது.

*- அருட்தந்தை செ.அன்புராசா*

❑ ❑ ❑

## யமதர்மனுக்கே பாதுகாப்பு

சித்திரபுத்தன் அரண்மனை

“யார் அங்கே, யமதர்மரை உடன் அழைத்து வாரும்.”

“உத்தரவு பிரபு”

யமதர்மர் அழைத்து வரப்பட்டார்.

“யமதர்மா பூலோகத்தில் என்ன நடக்கிறது? நீர் அங்கு உமது கடமையைச் சரிவரச் செய்வதாகத் தெரியவில்லை. என்ன காரணம்”

“அதை ஏன் கேட்கிறீர்கள் பிரபு நான் எங்கள் கணக்கு முடிந்தவர்களை அழைத்துவர பூலோகத்திற்குச் செல்லும் வேளைகளில் அங்கு அவர்களைக் காண முடிவதில்லை!”

“ஏன் அவர்கள் எங்கு சென்று விட்டார்கள்.”


சிங்கப்பூர், மலேசிய நாடுகளில் சிறிய குடும்பத்திற்கு அளவான வீடு;
"STUDIO TYPE CONDOMINIUM FLAT" தற்போது நம் இலங்கையில்
MANCHESTER CITY
கொழும்பு 15
மட்டக்குளியில் வீடொன்று
ரூ. 1,585,000/-
(பதினைந்து இலட்சத்து எண்பத்தையாயிரம் மட்டுமே)
ரூ. 5,000/- செலுத்தி இன்றே வீட்டை தேர்வு செய்யுங்கள்
இரு வருட நிர்மான காலப்பகுதியில் இலகு தவணை முறையில் செலுத்தி இரு வருடங்களின் பின் குடிபுகலாம்.
இரண்டு அறைகளைக்கொண்ட மாடிவீட்டில் குளியலறை, வரவேற்பறை மற்றும் பான்றி விருந்தினர் குளியலறையும் உள்ளடக்கம்.
NIMAVIN DEVELOPERS
Nimavin Developers (Pvt) Ltd
187, Ward Place, Colombo 07.
Visit our Web Site : www.nimavingreenpark.com
JEBZ
தொ. இல. :
(011) 269 5714, (011) 269 5728
(கிழமை நாட்களில் மு.ப 9.00 - பி.ப. 5.00 மணிவரை)
0776 959197 (தமிழில்)
0776 147065 (ஆங்கிலத்தில்)
0776 216016 (சிங்களத்தில்)
எமது வலைத்தளத்தில் பார்வையிட : www.nimavingreenpark.com



இலண்டனில் நடைபெற்ற 25ஆவது ஆவணகக் கண்காட்சியில், ஆவணகத்தின் அமைப்பாளர் உயர்திரு. அன்ரன் ஜோசெப் அவர்களுக்கு 'தாயக ஒலி'யின் பிரதிகளை ஐரோப்பிய நாடுகளுக்கான விசேட ஒருங்கிணைப்பாளர் திருமலை பாலா வழங்கு வதையும் அருகில் முன்னாள் கிங்ஸ்டன் நகர முதல்வர் கௌரவ யோகன் யோகநாதன் அவர்கள் நிற்பதையும் காணலாம்.

# Kulendran Immigration Law Chambers



(அங்கீகார எண் : F200100055)

## 23வது ஆண்டு சேவை

**குடிவரவு விண்ணப்பங்கள் / குடிவரவு மேன்முறையீடுகள் மற்றும் சகலவிதமான குடிவரவு தேவைகளுக்கும்.**

- நாடு கடத்தலுக்கு எதிரான மேன்முறையீடுகள்
- பிரித்தானிய குடியுரிமை விண்ணப்பங்கள்
- உங்கள் உறவினர்களை வரவழைத்தல்
- சகலவிதமான விசா நிராகரிப்புக்கு எதிரான மேன்முறையீடுகள்
- Bail Application
- Asylum Appeals
- Human Rights Application / Appeals

"லண்டன் பல்கலைக்கழக / கல்லூரிகளுக்கான அனுமதிகள் / விசா நீடிப்புக்கள் / Prospective Student Visa விண்ணப்ப ஆலோசனைகள்"

Tel No: 020 8542 8222/ 020 8682 4494
Fax No : 020 8542 8666
Mobile : 07769185592
E-mail : kilc_work@yahoo.co.uk

OISC

**90, High Street,
Colliers Wood
London
SW19 2BT**

# கண்ணீர் அஞ்சலி



மனித வரலாற்றில் பெருமையுடன் வாழ்வாங்கு வாழ்ந்த மனித நேயம் கொண்டவர்களின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பா கும். எங்கள் பெருமதிப்புக்குரிய இணுவில் மண்ணின் தவப் புதல்வன் உயர் திரு. சி.அமிர்தலிங்கம் அவர்கள் எம்மைவிட்டு மறைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தோம். அன்னாரின் மறைவு உண்மையிலேயே வார்த்தைகளால் சொல்லமுடியாத பேரிழப்பு என்பதைத் தாங்க முடியாத வேதனையுடன் தெரிவித்துக்கொள் கின்றோம்.

இணுவில் மத்திய கல்லூரியின் உயர்ச்சி, கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சி என்பவற்றில் அன்னாரின் சேவை என்றும் மதித்துப் போற்றப்படக்கூடிய பெருமை களாகும். அன்னார் வாழ்ந்த காலம் முழுவதும் மற்றவர் களுக்கு உதவி செய்வதே பெரும்பணி எனக் கொண்டு தன்னா லான சேவையை ஆற்றிவந்துள்ளமை எவராலும் மறக்க முடியாத செற்பாடாகும்.

'இணுவில் ஒலி' அதைத் தொடர்ந்து வெளி வந்த 'தாயக ஒலி' சஞ்சிகையின் இலண்டன் பிரதிநிதியாக இருந்து அளப்பரிய சேவையாற்றிய பெருந்தகையை இழந்து ஏங்குகின்றோம். 'தாயக ஒலி'க்குச் சந்தாதாரர்களைச் சேர்ப்பதில் அவர் காட்டிய ஈடுபாடு உண்மையிலேயே எம்மை அதிசயிக்க வைத்தது.

அத்தகைய பெருமகனை எப்படி மறப்போம். அவர் என்றும் எம்மை ஆசீர்வதித்துக் கொண்டே இருப்பார். அன்னாரின் மறைவால் துயருறும் அவர்தம் குடும்பத்தாருக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எங்கள் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம். அன்னாரின் ஆத்மா சாந்திய டைய எல்லாம் வல்லவனை இறைஞ்சுகின்றோம்.

"எப்போ முடிந்த காரியம்"
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

வேதனையில் ஈரவிழிகளுடன்...

மலர்வு 20.10.1932 | உதிர்வு 19.08.2015

'தாயக ஒலி' ஆசிரியர்
தம்பு சிவசுப்பிரமணியம்,
இலண்டன் பிரதிநிதிகளான
திருமலை பாலா, வவுனியூர் இரா.உதயணன் மற்றும்
'தாயக ஒலி' சஞ்சிகைக் குழுவினர் (இலங்கை)




அன்பளிப்பு :

**தமிழினி குலேந்திரன் (லண்டன்)**

# தமிழ் மக்களுக்கு
# ஒரு மகிழ்ச்சியான செய்தி

# BARRISTER S.J.JOSEPH
# பாரிஸ்டர் செ.யோ.யோசேப்

நேரடியாக உங்கள் வழக்குகளை ஆராய்ந்து சொலிசிற்றர்
இல்லாமலேயே நீதிமன்றத்தில்
ஆஜராக உரிமை பெற்றுள்ளார்.
இதுதவிர, Home Office விண்ணப்பங்கள்,
உயர்நீதிமன்றத்தில் இடைக்காலத் தடைக்கான
உத்தரவு பெறல்
போன்ற சகலவற்றுக்கும்...



தென் லண்டனில்
**90, HIGH STREET,**
**COLLIERS WOOD LONDON SW19 2BT**

CHAMBERS OF BARRISTER JOSEPH

39, HERMITAGE ROAD, LONDON N4 1LU    020 8809 3083, 07831 594 270

உங்கள் வாழ்க்கைத் துணையை தேட

# அருந்ததி

இணையத்தளம்

www.arunthathee.com



**Our Services**

- Online Metrimonial ,
- Arunthathee Monthly Wedding Magazine
- Wedding Cards
- Wedding Cakes
- Wedding Gift Items
- Wedding Sweets

தொடர்புகளுக்கு:

0044 203 475 2590 (லண்டன்), 0777 164 524 (இலங்கை)

**Colombo:** 14, 3/1J, 37th Lane, Wellawatte. | Tel: **011 40 63 282** | **Jaffna:** 20, K.K.S Road, Kokuvil. | Tel: **021 49 27 527**

# IDEAL ACADEMY

*Join with pioneers in Professional Studies*



- Montessori School
- Extra Courses
- Educational Level
- language Courses
- Professional Accounting
- Professional Courses

| | | |
|---|---|---|
| **Tamil & English Medium** | Tamil & English Medium Grade 01-10 (G.C.E. O/L) & A/L Lon don & Local Nursery & Montessori | Mass Media Computer, Dress Making, Beauty Culture, Hand Work, Cookery & Cake |
| AT, Charted CIMA, ACCA (UK) Banking Class | Spoken English / Sinhala, Deutsch, French, Japanese, Arabic, Dutch, Korean, London IELTS, Ket, Pet A1, A2, B1, B2 | Government Competitive Exms, SLAS, SLEAS & LLB, ACT 16, FRPM |

No. 240/1/1,240/2/1, 2nd Floor, Galle Wellawatte. (Opp. Commercial Bank)
Tel : 0112 363060 Mob : 0778 583832 / 0777 902100
E-mail : idealacca@yahoo.com Web : www.idealacademysl.com

யாழ்ப்பாணம்.

"நான் அழைக்கப்போவதற்கு முன்பே அவர்கள் கூரிய ஆயுதங்களால் குத்தப்பட்டும், துப்பாக்கிகளால் சுடப்பட்டும் உரிய காலத்துக்கு முன்பே மரணமடைந்து விட்டதாகத் தெரிய வந்துள்ளது."

"அப்படியா சங்கதி. அப்படியாயின் கொலை செய்தவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்குவதற்காக உடன் அவர்களை இங்கு கொண்டு வாரும்"

"அது முடியாது பிரபு. ஏனென்றால் சரியான பாதுகாப்புக்கு மத்தியில் அவர்களைச் சிறையில் அடைத்து வைத்திருக்கிறார்கள்."

"அப்படியா! எங்கள் தொழிலை அவர்கள் பார்க்க முற்படுகிறார்கள். வேறு பூலோகத்தில் என்ன நடக்கிறது."

"சோதனையில் தோல்வி, காதலில் தோல்வி, பாலியல் வல்லுறவால் அவமானம் ஆகிய காரணங்களால் பல இளம் பெண்கள் தற்கொலை செய்து கொள்கிறார்கள் பிரபு''.

"என்ன அபத்தம். இவை ஒன்றும் எமது இராச்சியத்தில் நடக்கக்கூடாது யமதர்மா!"

"இதற்கு என்னதான் முடிவு பிரபு."

"உடனடியாக எனது உத்தரவை பூலோகத்திலுள்ள நாடுகளில் ஆட்சி செலுத்துபவர்களுக்கு அறிவித்து விடவும்"

"தங்கள் உத்தரவைச் சொல்லுங்கள் பிரபு."

"சோதனைகள் ஒன்றும் நடத்தக் கூடாது. எவருமே காதலிக்கக் கூடாது. பாலியல் வல்லுறவில் ஈடுபடுபவர்களை உடனடியாக கழுமரத்தில் ஏற்ற வேண்டும்."

"ஆகட்டும் பிரபு அறிவிக்கின்றேன்!"

"பிரபு பாசக்கயிற்றை தற்பொழுது பூலோகத்திலுள்ள சூழ்நிலையில் பாவிப்பது கஷ்டமாக இருக்கிறது. பாசக்கயிற்றுக்குப் பதிலாக ஏ.கே.47 ஒன்றை வாங்க அனுமதி தரவேண்டும்.''

"சரி அனுமதி தந்தேன். உடன் உமது பாதுகாப்பையும் கவனத்தில் எடுத்துள்ளேன். அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவிடம் தொடர்பினை ஏற்படுத்தி யமலோகத்திற்கு ஒரு தொகை ஆயுதங்களை றொக்கற்றில் அனுப்பிவிடச் சொல்லும்"

"அப்படியே ஆகட்டும். நன்றி பிரபு. ஆயுதங்கள் வந்ததும் நான் பூலோகம் செல்கிறேன். அதுவரை யமலோகத்தில் தங்கிக்கொள்ள அனுமதி தாருங்கள் பிரபு"

"ஆகட்டும் யமதர்மா!"

- சத்தியன்

□ □ □

# பொதுவான கேள்வி



வகுப்பறையில் ஆசிரியர் வந்ததும் மாணவர்கள் எல்லோரும் எழுந்து நின்று காலை வணக்கம் சொன்னார்கள்.

"எல்லோரும் இருங்கள். இன்று உங்களிடம் சில பொதுவான கேள்விகளைக் கேட்கப் போகிறேன்'' என்று ஆசிரியர் சொன்னார்.

ஒரு மாணவன் "பொது என்றால் என்ன சேர்" என்ற கேட்டான்.

இன்னொரு மாணவன் சொன்னான் "பொதுவான பாடம் ஒன்றும் எங்களுக்குப் படிப்பிக்காமல் கேள்வி கேட்டால் எங்களால் எப்படிச்சேர் விடைசொல்ல முடியும்."

"சரி பொறுங்கள். பொது என்பதை நீங்கள் விளங்கிக்கொள்வதற்காக சில உதாரணங்களைச் சொல்லுகிறேன் கேளுங்கள்."

"பொது மலசலகூடம் என்று சொல்வதை அறிந்திருக்கிறீர்களல்லவா? மேலும் பொதுக்கிணறு பொதுச் சந்தை என்பவற்றைக் குறிப்பிடலாம் என்றார் ஆசிரியர்"

"எங்கட பொது மலசலகூடம் பனை வடலி சேர். அங்கு சுதந்திரமாக எல்லோரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு இருப்பம். அந்தப் பொது நல்லாய் விளங்கிது சேர் என்றான் அந்த மாணவன்."

அதற்கு வியாக்கியானம் கொடுக்க ஆசிரியர் எண்ணினாலும் மாணவன் ஓரளவுக்காவது பொதுவைத் தெரிந்து கொண்டானே என்று எண்ணி மேற்கொண்டு ஒன்றும் பேசவில்லை.

பொதுவான என்பதைத் தெரியாத மாணவனைப் பார்த்து...

"அசிரியர்கள் பாடாசலைக்கு ஏன் வருகிறார்கள்? மாணவர்கள் ஏன் வருகிறார்கள்? இதுதான் பொதுவான கேள்வி என்றார் ஆசிரியர்"

"சேர் எனக்கு விடை தெரியும் என்றான் அந்த மாணவன்."

"சரி தெரிந்ததைச் சொல்லும் என்றார் ஆசிரியர்"

"சம்பளத்துக்காக ஆசிரியர்கள் பாடசாலைக்கு வருகிறார்கள். பணிஸ் சாப்பிட மாணவர்கள் பாடசாலைக்கு வருகிறார்கள்" என்றானே பார்க்கலாம்

ஆசிரியருக்கு அசடு வழிந்தது. பாடமணி அடித்து ஓய்ந்தது.

*- வசந்தன்*

❑ ❑ ❑



# வாய்விட்டுச் சிரித்தால்....



வகுப்பறையில் அன்றைய பாடத்து ஆசிரியர் வரத்தாமதமாகி விட்டது. மாணவர்கள் கதைத்துச் சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தப் பக்கம் சென்றுகொண்டிருந்த அதிபர் மாணவர்கள் சத்தம் போடுவதை அவதானித்தபடி வகுப்பறைக்குள் வந்து

"இப்பொழுது என்ன பாடம்? பாட ஆசிரியர் யார்?'' என்று கேட்டார்.

விஞ்ஞான பாடம். சுந்தரலிங்கம் சேர் தான் எடுக்கிறவர்'' என்று ஒரு மாணவன் சொன்னான்.

"சரி சத்தம் போடாமல் இருங்கள் சுந்தலிங்கம் சேர் வருவார்'' என்று சொல்லிவிட்டு வகுப்பறை விட்டுப் புறப்பட்டார் அதிபர்.

மாணவர்கள் எல்லோரும் பலமாகச் சிரித்தார்கள். அதிபர் திரும்பி வந்து "ஏன் சிரிக்கிறீர்கள் என்று கேட்டார்''

"சுந்தரலிங்கம் சேர் வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும் என்று சொல்லித்தந்தவர் அதனால் சிரித்தோம் என்றார்கள்.''

அதிபர் ஒன்றும் பேசாமல் வகுப்பறயை விட்டுச் சென்று விட்டார். சற்று நேரத்தில் சுந்தலிங்கம் சேர் வகுப்பறைக்கு வந்தார். மாணவர்கள் எல்லோரும் அவரைக் கண்டவுடன் சிரித்தார்கள்.

"ஏன் சிரிக்கிறீர்கள் அமைதியாக இருங்கள் என்றார்.''

"இல்ல சேர், நீங்கள் வரமுந்தி அதிபர் வந்து பாடம் எடுத்தவர் சேர் '' என்றார்கள் மாணவர்கள். "அதிபர் விஞ்ஞான பாடத்தில் என்ன சொல்லித்தந்தவர்'' என்று கேட்டார் ஆசிரியர்.

"வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும் என்று சொல்லித்தந்தார் அதிபர்'' என்றார்கள் மாணவர்கள்.

சுந்தலிங்கம் சேர் சிரிக்க மாணவர்களும் சேர்ந்து சிரித்தார்கள். சிரிப்புச் சத்தம் கேட்டு வகுப்பறைக்குள் வந்த அதிபர்

"சுந்தலிங்கம் சேர் பாடம் படிப்பிக்காமல் என்ன சிரிப்பு வேண்டிக் கிடக்கு" என்று அதிகாரத் தொனியில் கேட்டார்.

"நீங்கள் சொல்லிக்கொடுத்ததைத் தான் சேர்" என்று சொன்னாரே பார்க்கலாம்.

அதிபர் மாணவர்களைப் பார்க்க அவர்கள் எல்லோரும் தலைகுனிந்தபடி நின்றார்கள். சற்று நேரத்தில் சுந்தலிங்கம் சேருடன் அதிபர் வகுப்பறையை விட்டுச் சென்றார்.

அடுத்த நாள் விஞ்ஞான பாடத்திற்கு புதிய ஆசிரியர் வந்தார்.

"நான் கலைச்செல்வன்" என்று தன்னை அறிமுகப்படுத்தியபின் மாணவர்களே! "இவ்வளவு காலமும் விஞ்ஞான பாடம் கற்றிருப்பீர்கள். அதில் உங்களுக்கு ஏதாவது விளக்கமின்மை இருந்தால் கேளுங்கள் என்றார்."

"சேர்! வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்று முன்பு படிப்பித்தவர்கள் சொல்லித் தந்துள்ளார்கள். அது எந்த விஞ்ஞானப் பிரிவுக்குள் அடங்கும் சேர்" என்று ஒரு மாணவன் கேட்டான். புது ஆசிரியருக்கு அதிர்ச்சியாக இருந்தது.

"நாளை விளக்கம் சொல்லுகிறேன்" என்று சொன்னவர் உடனேயே வகுப்பை விட்டுச் சென்று விட்டார். மாணவர்கள் பலமாகச் சிரித்தார்கள்.

- நித்திலன்

# கேட்டதைச் சொல்லவந்தோம்

*"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு"*

*- குறள்*

''கல்வி மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதம் அதன் ஆற்றலை முன் நிறுத்தி உன்னால் இந்த உலகத்தையே மாற்ற முடியும்''

"Education is the most powerful weapon which you can use to change the world" *- Nelson Mandela*

"கல்வி என்பது ஏழை மாணவர்களுக்கு ஊன்றுகோலாகவே விளங்குகின்றது. ஏழைகளின் முக்கிய பலமும் அதுதான். கல்வியின் மூலம் தான் சமுதாயத்தில் உயர்ந்த இடத்தைப் பெறமுடியும். அது மாணவர்களுக்கு மட்டுமல்லாது, அவர்களின் பெற்றோருக்கும் நமது சமூகத்திற்கும் பெருமையைத் தேடித்தரும். மாணவர்கள் உறுதியுடன், நாங்கள் சாதிக்கவும் பிறந்தவர்கள் என்பதை இந்தச் சமூகத்துக்கு வெளிப்படுத்தும் அளவிற்கு அவர்களின் செயற்பாடுகள் இருக்கவேண்டும்

பெற்றோரும் ஆசிரியர்களும் மாணவர்களைக் கல்விமான்களாக மாற்ற வேண்டும். அந்தப்பாரிய பெறுப்பு இவர்களிடத்தே அதிகம் தங்கியிருக்கிறது. பிள்ளைகளை வளர்ப்பதில் மட்டுமல்ல அவர்களின் கல்வி விடையத்திலும் கண்ணும் கருத்துமாகச் செயற்பட வேண்டும்.

கல்வி இல்லாது விட்டால் எமது சமுதாயத்திற்கு எந்தப் பலாபலனையும் பெற்றுக்கொடுக்க முடியாது. இது வரை காலமும் நமக்காக மட்டும் படித்திருந்தாலும் இனி எமது சமுதாயத்திற்காகவும் படிக்க வேண்டும். இதன்மூலமே

எமது இனத்தை முன் நிலைக்குக் கொண்டுவர முடியும்."

*- கி. துரைராஜசிங்கம்*
*(கிழக்கு மாகாண விவசாய அமைச்சர்)*

♦ ♦ ♦

"தொலைக்காட்சியும் தொடர் நாடகங்களுமே கல்வித்தரத்தின் வீழ்ச்சிக்குக் காரணம். மாணவர்களின் கல்விக்கு வீடுகள் பெருந்தடையாக உள்ளன. பெரும்பாலான வீடுகளில் பெற்றோர் ஒருநாளின் அரைவாசிக்கு மேற்பட்ட பொழுதினை தொலைக்காட்சியுடன் செலவிடுகின்றார்கள். தம் பிள்ளைகளின் கல்வி தொடர்பாக அக்கறை அற்றவர்களாகத் தொலைக்காட்சிப் பெட்டிக்குள் மூழ்கி விடுகின்றனர். இதன் காரணமாக பெரும்பாலான பிள்ளைகள் கற்பதற்கான சூழல் வீடுகளில் இல்லாது கல்வியில் பின்னடைவை எதிர்நோக்குகின்றார்கள். இன்றைய எமது மாணவர்களின் கல்வித் தர வீழ்ச்சிக்கு தொலைக்காட்சியும் தொடர்நாடகங்களுமே காரணமாக அமைகின்றன. பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்வி சார்ந்த செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். வீடுகளில் கற்றலுக்கான சூழ்நிலை இல்லாத மாணவர்கள் தங்கள் கல்வி அறிவின் முக்கியத்துவத்தை மேம்படுத்திக் கொள்வதற்காக கற்றலுக்கான சூழலை நாடி தமது கல்வியினை வளர்த்துக்கொள்ளவேண்டும்"

எனவே இத்தகைய சூழலில் வாழும் மாணவர்கள் நூலகத்தினை நன்றாகப் பயன்படுத்தவேண்டும். வாசிக்க வாசிக்கத்தான் அறிவு மேலும் வளர்ச்சியடையும். வாசிக்கின்ற மனிதனே பூரணத்துவமுடையவனாக மிளிர்கின்றான்.

- பேராசிரியர் க. தேவராஜா
(வணிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

♦ ♦ ♦

"மாணவர்களின் கல்வியினை வழிநடத்துவது பெற்றோருடைய மிக முக்கியமான கடமையாக விளங்குகிறது. இதற்கு பாடசாலை ஆசிரியர்கள் வழிகாட்டிகளாக விளங்க வேண்டும். மாணவனைப் பூரணமானவனாக்க வேண்டிய பொறுப்பு பெற்றோரையே சாரும். சிறுவயதில் இருந்தே கல்வியறிவு, ஆளுமை விருத்தியுடன் வளர்க்க வேண்டும். வாசிப்பதால் மனிதன் பூரணம் அடைகின்றான். எழுத்தறிவித்தவன் இறைவன் அதற்கு ஏற்றாற்போல் முன்பள்ளிகளும் தமது செயற்பாட்டினை செயற்றிறன் மிக்கதாக ஆக்கிக் கொள்ள வேண்டும். நூலகமானது முன்பள்ளியிலிருந்து முதியோர் கல்வி வரை கற்கக் கூடிய அமைப்பாக விளங்குகின்றது.

**எமது பிரதேசத்திற்குப் பாதை திறக்கப்பட்டதன் பிற்பாடு பல புதிய விடயங்கள் எம்மிடையே வந்து நேர்ந்துள்ளன. இவ்வாறான பல புதிய விடயங்கள் பாடசாலை மாணவர்களிடையே தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன.**

மாணவர்கள் படிப்பதற்கு ஏதுவான சூழ்நிலையினைப் பெற்றோர் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். ஒவ்வொரு பெற்றோரும் மாணவர்கள் கற்கின்ற போது பாதுகாப்பாக இருந்து வழிநடத்தவேண்டிய பொறுப்புடையவர்களாக இருக்கவேண்டும்.

- ச. கைலாசநாதன்
(உதவிக் கல்விப் பணிப்பாளர்,
(முறைசாராக் கல்விப் பிரிவு, வடமாகாணம்)

♦ ♦ ♦

**ஆளுமை:**

" ஒரு பிள்ளையின் ஆளுமை விருத்தியில் குழந்தைப்பருவமும் குழந்தைப் பருவச் சூழலும் மிகுந்த செல்வாக்குச் செலுத்துகின்றன. குழந்தைப்பருவத்தில் காணப்படும் குடும்பச் சூழல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பிள்ளை குடும்பத்துடன் கொண்டிருக்கும் தொடர்பானது பிள்ளையின் ஆளுமையில் மிகுந்த செல்வாக்கு செலுத்துகின்றது. பிள்ளையின் ஆளுமை வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்திலே தாயின் அரவ

ணைப்பும் அன்பும் நெருக்கமும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. பெற்றோர் பிள்ளைகளைப் பாதுகாத்தல், வளர்த்தல் என்பவற்றில் பின்பற்றும் முறைகளும் செல்வாக்குச் செலுத்துவதனை அவதானிக்கலாம். ஒரு பிள்ளை குடும்பத்துடன் கொண்டிருக்கும் தொடர்பானது பிள்ளையினுடைய ஆளுமையில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

பெற்றோர் இல்லாத சந்தர்ப்பத்தில் குடும்பத்தில் ஏனைய அங்கத்தவர்களும் குழந்தைகளுடன் நல்ல முறையில் நடந்துகொள்ளவேண்டும். பாடசாலைச் சூழலானது தலைமைத்துவத்தை ஏற்று நடத்தல், முன்னிற்றல், பொறுப்பை ஏற்றல், குழுவாகச் செயற்பாடுகளைச் செய்தல், பொறுமை, நட்பு போன்ற பண்புகளை வளர்த்தெடுப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுப்பது அவசியமாகும். இதன் அடிப்படையில் மாணவர்களின் ஆளுமையை விருத்தி செய்வதில் ஆசிரியர்களின் வகிபங்கு முக்கியமானதாகும்.

மாணவர்களின் ஆளுமையானது வீட்டிலும் பாடசாலையிலும் பல்வேறு கருமங்களை நிறைவேற்றும் போது பெறும் பயிற்சி, முன்மாதிரியானவர்களைப் பின்பற்றுதல், சமுதாய மட்டத்தில் பல்வேறுபட்ட தரங்கள், தொழில்கள் மூலம் பெறும் அனுபவங்கள், சொந்த அனுபவங்கள் மூலம் மேற்கொள்ளும் தீர்மானங்கள் போன்றவற்றால் விருத்தியடைகிறது. இந்த வகையில் ஆசிரியர்கள் வகுப்பறைச் சூழ்நிலையை ஒரு ஜனநாயகத் தன்மை வாய்ந்ததாகவும் எல்லாச் செயற்பாடுகளிலும் மாணவர்களைப் பங்குபற்ற இடமளிக்கக் கூடியதாகவும் அமைதல் அவசியமாகும்.

இந்த வாய்ப்புக்கள் இல்லாமல் போகும் வேளையில் ஆளுமை விருத்திக்குரிய அரிய சந்தர்ப்பங்களும் இல்லாமல் போய் விடுகின்றன. இன்றைய சூழலில் ஒத்த வயதுப் பிள்ளைகள் குழுக்களாகச் சேர்ந்து மதுபானம், போதைவஸ்து, கெட்ட நடத்தைகள், வன்செயல்களில் ஈடுபடல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவது சர்வ சாதாரண விடயமாகவே உள்ளது. இது வாழ்நாளில் அவர்களின் நிரந்தரப்பழக்கமாகி விடுவதால் ஆளுமை விருத்தியையும் வெகுவாகக் குறைத்து விடுகின்றது.

ஆளுமை விருத்தியில் சமூக மன வெழுச்சிக் காரணிகளும் முக்கிய அம்சங்களாகக் கருதப்படுகின்றன. சிறுவயதிலேயே பிள்ளைகளிடம் பொருத்தமான அழகியல் உணர்வுகள் வளர்க்கப்படாத நிலையிலும் சமூகத்திற்கு ஏற்ப வாழப் பயிற்றப்படாதபோதும் பிள்ளைகள் சமூகத்துக்குப் பொருத்தப்பாடற்றவர்களாகவே உருவாகின்றனர்.

ஆகவே ஆளுமையானது ஒருவருக்குரிய தனிச்சிறப்பாக அமைந்து காணப்படும் முக்கிய வகிபாகமாகும். இந்த வகையில் ஒரு பிள்ளையின் ஆளுமையை வளர்த்தெடுக்கும் வகையில் குடும்பமும் ஆசிரியர்களும் செயற்படுவது இன்றியமையாததாகும்.

- சந்துரு மரியதாஸ்
(உதவி விரிவுரையாளர்
கிழக்குப் பல்கலைக்கழகம்)

## தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவம்

சிறுபராயம் தொடக்கம் தாய்மொழியில் கல்விகற்கும் மாணவன் சிந்தனைத் தெளிவு கொண்டவானக உருவாகின்றான். தாய்மொழியைச் சிறப்புடன் கற்றுக் கொண்டவனாலேயே வேற்றுமொழிகளை இலகுவாக கற்றுக்கொள்ள முடியும். தாய்மொழிக் கல்வி மூலம்தான் சிந்தனைத் திறனை, ஆற்றலை, அறிவை, வளர்த்துக் கொள்ள முடியும் என்று உளவிய லாளர்கள் ஆய்வின் மூலம் தெளிவுபடுத்தியுள்ளனர்.

விளையாட்டு

# உலகசாதனையாளர் குமார் சங்கக்கார

கதிரவேலு மகாதேவா



1977ல் மாத்தளையில் பிறந்த குமார் சங்கக்கார 1996ல் கண்டி திரித்துவக் கல்லூரியின் (Trinity College) கிரிக்கெட் அணிக்குத் தலைமைதாங்கியதுடன், அந்த ஆண்டின் அகில இலங்கைப் பாடசாலைகள் மட்டத்தில் இரண்டாவது சிறந்த துடுப்பாட்ட வீரனாகத் (Runners up) தெரிவானார். 1979இல் இலங்கைத் தேசிய அணியில் விளையாடுவதற்கும் (ஒரு நாள் போட்டிகள்) 1980இல் டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடுவதற்குத் தெரிவுசெய்யப்பட்டார்.

இவர் இதுவரை 130 டெஸ்ட் போட்டிகளில் பங்கு பற்றி மொத்தமாக 12,203 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். உலகத் துடுப்பாட்டத் தரவரிசையில் 5வது இடத்தில் உள்ளார். துடுப்பாட்டத் தர வரிசையில் 11 தடவைகள் ஒரு இனிங்ஸில் 200 ஓட்டங்களைக் கடந்துள்ளார். (Double Centuries) ஆகக் கூடிய ஓட்ட எண்ணிக்கை 2014ல் பங்காளதேஷ் அணிக்காகப் பெற்ற 319 ஆகும். (முச்சதம்) ஆவுஸ்திரேலியாவின் சேர் டொன் பிரட்மன் 12 தடவைகள் 200 ஓட்டங்களுக்கு மேல் பெற்றிருந்தார். அத்துடன் அவரது இறுதி ஓட்டச் சராசரி 99.94 ஆகும். இரண்டாவது இடத்தில் தற்பொழுது குமார் சங்கக்கார 58.66 என்ற சராசரியைப் பெற்று தொடர்ந்தும் ஆடி வருகின்றார். 2014ல் பங்காள தேஷிற்கு எதிராக எமது மண்ணில் ஒரு போட்டியில் முதல் இனிங்ஸில் 319 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்ஸில் 105 ஓட்டங்களையும் பெற்று சாதனை புரிந்தார். இவருக்கு முன்பாக இங்கிலாந்து வீரர் கிரகாம் கூச் (Graham Gooch) மட்டுமே இத்தகைய சாதனையை ஏற்படுத்தியிருந்தார். இந்தியா வுக்கு எதிராக (1990 இல் 333, 123 என்ற வகையில்) டெஸ்ட் கிரிக்கட் வரலாற்றில் எந்த விக்கட்டுக்கும் இடையிலான ஆகக்கூடிய இணைப்பாட்டத்தின் 3வது விக்கட்டிற்காக மஹேல ஜெயவர்தனவுடன் இணைந்து 624 ஓட்டங்களை (SSC மைதானத்தில்) குவித்தனர். தங்கள் பங்களிப்புகளாக ஜெயவர்தன 314 ஓட்டங்களையும், சங்கக்கார 287 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். டெஸ்ட் போட்டியில் சங்கக்கார இதுவரை 38 சதங்களையும் 51 அரைச் சதங்களையும் விளாசியுள்ளார். சில போட்டிகளில் மட்டும் விக்கட் காப்பாளராக பணிபுரிந்து 178 பிடியெடுப்புக்களையும் 20 ஸ்டம்பிங்களையும் செய்துள்ளார். 2008 - 2011 வரை இலங்கை அணிக்குத் தலைமை தாங்கி 5 டெஸ்ட் போட்டிகளில் அணிக்கு வெற்றியைத் தேடிக்கொடுத்துள்ளார்.

ஒரு நாள் போட்டிகளில் 2015 உலகக் கிண்ணத் தொடர்வரை 404 போட்டிகளில் விளையாடி 14234 ஓட்டங்களை மொத்தமாகப் பெற்று சச்சின் டெண்டுல்

காருக்கு அடுத்த இடத்தில் உள்ளார். மேலும் 25 சதங்களையும் 93 அரைச் சதங் களையும் அணிக்காகப் பெற்றுக் கொடுத்துள்ளார். அதிகபட்சமாக 169 ஓட்டங்களை எடுத்துள்ளார். விக்கட் காப்பாளராக விளையாடி 402 பிடியெடுப்பு களையும் (Catches) 99 ஸ்டம்பிங்களை யும் (Stumpings) செய்துள்ளார். மொத்த மாக (501) பல்வேறு நாடுகளின் துடுப் பாட்ட வீரர்களை வெளியேற்றியிருக்கின் றார். இது ஒரு சாதனையாகும். 2015 இல் உலகக் கிண்ணத் தொடரில் தொடர்ச்சியாக 4 தடவை சதங்களைப் பெற்று உலக சாதனையை ஏற்படுத்தி யுள்ளார். முன்னதாக பாகிஸ்தானின் சயித் அன்வர் (Saeed Anwar) (2002) டி வில்லியர்ஸ் (De Villias) (தெ.ஆ) 2010, குவின்டன் டி கொக் (Quinton De Kock) (தொ.ஆ.) 2013, றோஸ் டெயிலர் (Rose Tayler) (நியுசி) 2014, ஆகியோர் தொடர்ச்சியாக 3 சதங்களை மாத்திரம் எடுத்திருந்தனர். உலகக் கிண்ணப் போட்டிகளில் 36 போட்டிகளில் பங்குபற்றி 54 வீரர்களை அவுட் ஆக்கியுள் ளார். (41 பிடியெடுப்பு, 13 ஸ்டம்பிங்). அவுஸ்திரேலியாவின் அடம் கில்கிறிஸ்ட் 31 போட்டிகளில் 52 பேரை ஆட்டமிழக் கச் செய்திருந்த சாதனையை இவர் முறியடித்துள்ளார். 2015 உலகக் கிண்ணத் தொடரில் மொத்தமாக 541 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். சங்கக்கார 20/20 போட்டிகளிலும் பிரகாசித்துள்ளார். 56 போட்டிகளில் விளையாடி 1382 ஓட்டங்களைப் பெற்றதுடன் 8 அரைச் சதங்களையும் விளாசியுள்ளார்.

இதுவரை காலமும் நடந்த போட்டி களில் உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் முதல் 5 இடங்களுக்குள்ளும் இடம் பிடித்துள் ளார். இந்தியாவின் சச்சின், அவுஸ்தி ரேலியாவின் ரிக்கி பொன்டிங், தென் ஆபிரிக்காவின், ஜக்கலிஸ் அவுஸ்தி ரேலியாவின் டொன் பிரட்மன் ஆகியோர் மற்றைய நான்கு வீரர்களாகும். 2015ல் Best Asian for out standing contribution of sports பங்களிப்பு விருது சங்கக்கார வுக்கு கிடைத்துள்ளது. 2014ஆம் ஆண்டில் சிறப்பாகச் செயற்பட்டவர் களுக்கான சியெட் கிரிக்கெட் விருது வழங்கலில், இலங்கைக் கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார சிறந்த சர்வதேச கிரிக்கெட் வீராகத் தெரிவு செய்யப்பட் டுள்ளார். இத்தகைய சிறந்த வீரரை நாமும் வாழ்த்துவோம். ■

---

# அம்மா வைக்கும் இரசம்

சீரகம், மிளகு, மஞ்சள்,
சிறப்புறு கொத்து மல்லி...
சேர நல் வெள்ளைப் பூண்டு
சிவந்திடும் மிளகாய் ஒன்று
நீரது கலந்து இரண்டு
சிட்டிகை உப்பும் சேர்த்து
காரமாய்ப் புளி பிசைந்து
கறி வேப்பிலை மணக்க...

அன்புடன் தயார் செய்யும்
இரசத்துடன் அமுது உண்டால்...
துன்பந்தரு நோய்களெல்லாம்
தூரத்தே விலகி ஓடும்...
இன்றைக்கு நினைத்தாலும் என்
நாவிலே நீர் சுரக்கும்... இனி
என்றைக்கு அம்மா கையால்
ஏழையேன் அமுதுண்பேனோ...?

- இணுவை சுசிலா

# "நான் சொல்லுவதெல்லாம் உண்மை, உண்மையைத் தவிர வேறு ஒன்றுமில்லை"

### பெருங்-குடி-மக்களும் யாழ்ப்பாணத்திலேயே உள்ளனர்.

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் மதுபாவனை மிகவும் பிரமிக்கத்தக்க அளவு அதிகரித்துள்ளது. 2009 இல் ஐந்து இலட்சம் லீற்றராக இருந்த மது பாவனை 2010இல் பதினாறு இலட்சம் லீற்றராக உயர்ந்தது. இது 2013 இல் 20 இலட்சம் லீற்றராக அதிகரித்தது. பியர் பாவனை யாழ்ப்பாணத்தில் 40 இலட்சத்தையும் எட்டியுள்ளது. சாராயம் மற்றும் பியர் இரண்டையும் சேர்த்தால் 60 இலட்சம் லீற்றர் இங்கே நுகரப்படுகிறது. அதற்கு மேலாகக் கள்ளு (Toddy) 50 இலட்சம் லீற்றர் வரை நுகரப்படுகிறது. எல்லாவற்றையும் சேர்த்தால் கிட்டத் தட்ட 110 இலட்சம் லீற்றர் மதுபான வகை நுகரப்படுகிறது. இதைவிட வெளிநாட்டிலிருந்து வரும் நண்பர்கள் உறவினர்கள் கொண்டுவரும் மேல்நாட்டு மதுபானங்களும் செல்வாக்குப் பெற்றுள்ளன. யாழ்ப்பாண மாவட்டச் சனத்தாகை 6,10,600 ஆகும்.

ஆகவே ஆண்டு ஒன்றுக்கு சராசரி தனிநபர் மதுபான நுகர்வு 18.33 லீற்றர் ஆகும். யாழ்.குடாநாட்டில் மதுபாவனை அதிகரித்துக் கொண்டிருக்கும் நிலையில் கடந்த 2013 ஆம் ஆண்டு மட்டும் 2,018,434 லீற்றர் சாராயமும், 4,056,999 லீற்றர் பியரும் அருந்தப்பட்டதாக மதுவரித்திணைக்களத் தரவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலை தொடருமானால் ஆண்டாண்டு காலமாகக் கட்டிப் பாதுகாக்கப்பட்டு வந்த குடும்ப உறவுகள், பண்பாட்டுப் பாரம்பரியங்கள், நற்பண்புகள் எல்லாம் சிதைந்து போகும் என்பதைச் சமுதாயம் உணருமா? வருங்கால சமுதாயத்தின் நிலை என்னவாகும்? பெருங்குடி மக்களே உங்கள் நிலைப்பாடு என்ன?

இலங்கையில் ஆண்டு ஒன்றுக்குச் சராசரியாகத் தனிநபர் ஒருவரின் மதுபான நுகர்வு 11.2 லீற்றர் ஆக இருப்பதை உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக் காட்டி எச்சரிக்கை விடுத்துள்ளது. ஆனால் யாழ்.மாவட்டத்தின் நிலை மிகமோசமாக 18.33 லீற்றராக இருப்பதை எந்தச் சுகாதார நிறுவனத்தாலும் கட்டுப்படுத்த முடியாமலிருப்பது ஏன்? அவர்கள் எவரும் கட்டுப்பட விரும்பான தனிக் காட்டு இராஜாக்கள். என்று தணியும் இந்த மதுவின் மோகம் என்று தணியும் இந்த மதுவின் தாகம்.

கிழக்கு மாகாணத்திலும் மலையகத்திலும் மது அரக்கனின் ஆட்சி கோலோச்சுவதாக அறியமுடிகிறது. அப்பகுதியிலுள்ள பெண்கள் அமைப்புக்கள் அதற்கு எதிராகப் போராட்டங்களை நடத்திவருவதாகப் பிராந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

"குடி குடியைக் கெடுக்கும்" என்று சொன்னால் கேட்பார்களா? சமுதாயச் சீரழிவுக்குக் காரணமாக இருக்கும் மதுப்பாவனையை இல்லாதொழிக்க எல்லோரும் ஒன்றுபடவேண்டியதன் அவசியம் உணரப்பட்டுள்ளது.

### புகைப்பிரியர்களின் சொற்காபுரி யாழ்ப்பாணம்!

உலகளாவிய ரீதியில் 10 வீதமான இளைஞர்களின் மரணத்திற்குக் காரணமாக அமைவது இந்தப் புகைப் பிடித்தல் பழக்கமாகும். வருடாந்தம் உலகில் சுமார் ஆறு மில்லியன் (60

இலட்சம்) மக்கள் புகையிலைப் பாவனை தொடர்பான நோய்களினால் மரணமடைகின்றனர். அதேவேளை புகையிலைப் பழக்கமற்ற ஆறு இலட்சம் பேர் புகைப்பிடிப்பவர்களினால் பாதிக் கப்பட்டு இறக்கின்றனர். அதாவது மற்றவர்கள் புகைபிடிக்கும் போது அப் புகையைச் சுவாசிப்பதால் ஏற்படும் பாதிப்புக்காரணமாக உயிரிழப்புக்கள் ஏற்படுவதாக உலக சுகாதார நிறுவனம் தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள் ளது. இலங்கையில் எதிர் வரும் இரண்டு தசாப்தங்களில் புகைத்ததினால் ஏற் படக் கூடிய மரணங்களில் சடுதியான அதிகரிப்பு நிகழக்கூடுமென உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்திருக் கிறது. இத்தகைய உயிரிழப்புக்க ளைத் தடுப்பதற்கு முன்னெச்சரிக் கைகளுடனான பாதுகாப்பு நவடிக் கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இல்லையேல் உயிரிழப்புக்களைத் தவிர்க்க முடியாத அவல நிலைக்கு உள்ளாகவேண்டி ஏற்படும்.

இந்த விடயம் தொடர்பாக, இலங்கை யின் சுகாதார சேவைகள் பணிப்பா ளராக இருந்த மருத்துவர் மஹிபால அவர்கள் "சிகரட் மற்றும் புகையிலைப் பாவனை மூலம் நமது நாட்டில் எதிர்வரும் இருபது ஆண்டுகளில், ஆண்டுக்குச் சுமார் நாப்பதாயிரம் வரை யிலான இறப்புக்கள் நிகழக் கூடும்'' எனக் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கற் பாலது. புகைபிடிப்பதன் மூலம் நாளொன் றுக்கு 57பேர்வரை மரணிக்கின்றனர். மேலும் அறுநூறு பேர் வரை மாரடைப்பு நோய் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றனர். இலங்கை யில் சுமார் 39 வீதமான ஆண்களும் 2.6 வீதமான பெண்களும் புகைப் பிடிக்கும் பழக்கத்திற்கு உட்பட்டவர் களாகக் காணப்படுகின்றனர் என இலங்கைப் புகையிலைக் கட்டுப்பாட்டுச் சபையின் 2009 ஆம் ஆண்டு அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது நாட்டில் மாவட்ட ரீதியாகப் பார்க்கும் போது புகையிலைப் பாவனை யாளர்களின் எண்ணிக்கை யாழ்ப்பாண மாவட்டத்திலேயே அதிகமாகக் காணப் படுகின்றது. இது மாவட்ட ரீதியாகப் பார்க்கும் போது 42.9 வீதமாகும். யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள புற்று நோய் மருத்துவமனை நோயாளர் களால் நிறைந்து காணப்படுகின்றது. மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை யிலும் அதேநிலைதான். இவர்களில் 30 வீதமானவர்கள் 15 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர். 30 வீதத்திற்கும் சற்று அதிகமான தெகையினர் 25 வயதுக்கும் 39 வயதுக்கும் இடைப் பட்டவர்களாகும்.

புகைப்பிடிக்கும் பெரும்பாலானோரைப் புகையிலை அல்லது சிகரட் கொலை செய்கிறது. அதுமாத்திரமன்றி புகைப் பிடிப்போரின் பொறுப்பற்ற நடவடிக் கையால் அதாவது மக்கள் நடமாடும் பொது இடங்களில் வீட்டில் உள்ளோர் களின் முன்னிலையில் புகைப்பிடிப்ப தால் புகைப் பழக்கம் இல்லாதோரை யும் அதுபாதிக்கின்றது. புகைப்பிரியர் களே உங்களையும் அழித்துக் கொண்டு மற்றவர்களின் அழிவுக்குக் காரணமா கவும் இருக்காதீர்கள் என்பதைச் சொல் லித்தான் தெரிந்து கொள்வீர்களா?

**(மக்கள் மன்றின் தீர்ப்பு என்ன?)**

*புகைத்தல், மதுபாவனை, புற்றுநோயை உருவாக்கும் காரணிகளாக இருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் கூடதலாக இருக்கின்றார்கள். இவர்கள் இரப்பை, ஈரல், மார்பு, உணவுக் கால்வாய், வாய்க்குழிப்புற்றுநோயால் கூடுதலாகப் பாதிக்கப்படுகின்றார்கள் என்று புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.*



# அமைதியின் சொற்கள் நம்முள்ளிருக்கும் ஆற்றல்

-பிரேம் ராவத்

மிகக் கலக்கமான நிலையிலும் இந்தச் செய்தி அமைதிக்காக ஏங்குகின்றது. நம்பிக்கையில்லாத போது அது நமக்கு நம்பிக்கையைப் பற்றிக் கூறுகிறது.

மனிதர்களுக்கு நம்பிக்கை என்ற அன்பளிப்பு வழங்கப்படுகிறது. நம் எல்லோருக்கும் அந்த நம்பிக்கை தேவை. நம் வாழ்வில் நல்லவை நடக்கும், கெட்டவையும் நடக்கும். நமக்குப்பிடித்தவை நடக்கும், நமக்குப் பிடிக்காதவையும் நடக்கும். நாம் அவற்றினால் பெரும் பாதிப்படைகிறோம். அப்போது உள்ளம் உடைகிறது. நம்பிக்கையற்றுப் போகிறது. ஆனால், எது நடந்தாலும் நாம் அந்த நம்பிக்கையை இழக்கக்கூடாது. நம்முள்ளே பல விஷயங்களின் கலவை அடங்கியுள்ளது. அங்கு அச்சமும் அறியாமையும் இருக்கிறது. நாம் குழப்பத்தில் இருக்கும் பொழுது அச்சம் நம்மை கௌவிக்கொள்கிறது. அதே வேளையில் நம்மை ஊக்குவிக்கும் அபாரமான சக்தியும் நம்முள்ளே இருக்கிறது. அங்கு அச்சம் இருந்த போதிலும் "தொடர்ந்து செல், அந்த அடியை எடு" என்று அது நம்மைத் தூண்டுகிறது. மனம் தளர்ந்த நிலையில் நாம் வாழும் போது அது சிரி என்று கூறுகிறது. இக்கட்டான நிலைமைகளில் விஷயங்கள் நடக்காத போதும் "கவலைப்படாதே" என்று அது கூறுகிறது. அது மிக சக்தி வாய்ந்தது. அதுதான் நம்மை முழுமையாக வைத்துள்ளது. அது இல்லையென்றால் நாம் நிலைகுலைந்து விடுவோம்.

மிகக்கலக்கமான நிலையிலும் இந்தச் சக்தி அமைதிக்காக ஏங்குகிறது. நம்பிக்கையில்லாதபோது அது நமக்கு நம்பிக்கையைப் பற்றிக்கூறுகின்றது. முழு வேதனையிலும் அது நம்பிக்கையையும், நிவாரணத்தையும் கொண்டு வருகிறது. நம்பிக்கை என்பது ஓர் அன்பளிப்பு. நமக்கு அது வழங்கப்பட்டுள்ளது. நம்முடைய தாகத்தைத்தணிக்கும் படியும் ஒவ்வொரு நாளும் நிம்மதியைக் காணும் படியும் நம்மைத்தூண்டுகின்றது. நம்பிக்கைதான் எல்லாவற்றையும் இயங்க வைக்கிறது. அது வளர்வதற்கு காத்திருக்கும் ஒரு சிறிய விதையிலும் இருக்கிறது. நம்பிக்கை எரியும் ஒரு மெழுகு வர்த்தி. அது ஒரு அழகான பொன்னிறமான சூரியன். நாளைக்கு சூரியன் திரும்பவும் உதயமாகும் என்ற நம்பிக்கை இல்லாவிட்டால் ஒவ்வொரு இரவுக்கும் விடைகொடுப்பது மிகக் கடினமாக இருக்கும் ஆனால், சூரியன் நாளைக்கும் உதயமாகும். அதைப்பார்ப்பதற்கும் நாம் அங்கு இருப்போம் என்று நான் நம்புகிறேன். எப்பொழுதுமே நம்பிக்கை இருக்கிறது. நாம் அந்த நம்பிக்கையோடு நடக்க வேண்டும். நம்முடைய வாழ்க்கைப் பயணம் எதை நமக்கு காண்பிக்க இருக்கிறதோ அதைப் பார்ப்பதற்காக தேவையான அடிகளை நாம் எடுக்க வேண்டும்.

அமைதி என்பதும் ஆனந்தம் என்பதும் சாத்தியமானது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். நாம் எளிதில் பாதிப்படையக்கூடியவர்கள். ஆனாலும் நாம் மிகவும் வலிமையானவர்கள். சாதரணமாக எதுவும் நம்மை வீழ்த்திவிட முடியாது. நம்முள்ளே அளவிடமுடியாத வலிமை இருக்கிறது. அளவிட முடியாத விவேகம் இருக்கிறது. நிகரற்ற அன்பும் அங்கே இருக்கிறது. இது ஒரு நம்பிக்கை மட்டுமல்ல. ஆனால் இது ஒரு வியக்கத்தக்க உண்மை. நாம் நீராடக் கூடிய ஆனந்த நதி. கருணையின் நதி, அருளின் நதி அங்கே இருக்கிறது. அதுதான் நம்முடைய கருப்பொருள். ஆகையால் எது வந்தபோதும் நாம் நம்பிக்கையை இழக்கக் கூடாது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்..

சிறுவர் கதை

# மிருகாபிமானம்

திருநாவற்குளம்
நா.தியாகராசா

காட்டு மிருகங்கள் யானை, கரடி, மான், மரை, முயல், நரி, பன்றி இனங்க ளெல்லாம் அன்று பிற்பகல் 3 மணிக்கு காட்டின் நடுவே உள்ள முற்ற வெளியில் ஒன்று கூடின. எல்லா மிருகங்களும் ஒன்றுகூட வேண்டும் என்ற அறிவித் தலை ஆட்காட்டிக்குருவி அது பறந்து போகுமிடமெல்லாம் சந்தித்துச் சொல்லியி ருந்தது. கூட்டம் ஒன்று அவசரமாகக் கூட்டப்படவேண்டும் என்ற அவசர முடிவை பெரிய யானையே எடுத்தி ருந்தது. பெரிய நரி தனிப்பட்ட முறை யில் பெரிய யானையைச் சந்தித்தது முக்கியமான விடயமொன்றை கதைத் திருந்தது. அறிவித்தலைச் செய்வதற்கு ஆட்காட்டிக்குருவியே பொருத்தமானது என்று பெரிய யானையே தீர்மானித் திருந்தது.

கூட்டத்துக்கு பெரிய யானையே தலைமை தாங்கவேண்டுமென்று மிருகங்கள் எல்லாம் ஏகமனதாகக் கேட்டுக் கொண்டன.

பெரிய யானை காட்டு முற்ற வெளி யில் நடு நாயகமாக நின்றது. பெரிய நரி பெரிய யானைக்கு அண்மையில் நின்றது. யானைக்கு ஆலோசனை வழங்கும் பொறுப்பு நரியினுடையது. ஏனைய மிருகங்களெல்லாம் இன ரீதியாக அணிவகுத்து நின்றன.

"பின்நேரம் புல் மேயிறதுக்கும் சந்தர்ப்பம் தராமல் இங்கே எங்களைக் கூப்பிட்டதுக்கான காரணம் என்ன?" என்று முயல் ஒன்று சற்று துணிச்சலாக பெரிய யானையைக் கேட்டது. அன்று காலை புல் மேயும் போது முயலுக்கு மூக்கிலே புல் குத்திவிட்டது. பெரிய யானை பெரிய கரடியைப்பார்த்து தனது தும்பிக் கையை அசைத்தது.

"எல்லாரும் கவனமாக கேட்டுக் கொள்ளுங்கோ" என்றது கரடி. முயல் கள், மான்கள், மரைகள் தங்கள் காது களைக் கூர்மையாக்கிக் கொண்டன. "எமக்கு இப்போது புலிகளால் எந்த விதமான தொல்லைகளுமில்லை. புலிகள் வேறு காட்டுக்குப் போய்விட்டன." "அது பழைய கதை. உந்த விடுப்புக் கதையை விட்டுட்டு இப்ப எங்கள் எல்லாரையும் இங்க கூப்பிட்டதுக்குக் காரணம் என்ன கரடியாரே?" என்று சினந்தது பெரிய பன்றி.

"எங்கட காட்டில இருக்கிற கிழட்டுச் சிங்கம் கண்டபடி மிருகங்களைக் கொன்று திண்டுவருகிறது. இந்தப் போக்கில போனால் மிருக இனங்க ளெல்லாம் கெதியில் அழிஞ்சுபோயிடும். நாங்கள் தப்பிப்பிழைக்க வழி என்ன? அது தான் இப்ப பிரச்சினை" என்று சொல்லி முடித்தது கரடி. "கிழட்டுச் சிங்கத்துக்கு மூளை கெட்டுப்போச்சு. சின்ன மிருகம் பெரிய மிருகம் என்று பாராமல் நாளாந்தம் மிருகங்களைக் கொன்று தின்னுது. நாங்கள் வேறு காட்டுக்கு ஓடித்தப்புவது தான் இப்ப புத்திசாலித்தனமானது". என்றது மரை சற்று வெறுப்புடனும், வேதனையுடனும். "இதென்ன புதுக்கதை நிலவுக்கு ஒழிஞ்சு பரதேசம் போன கதையாக இருக்குது". என்றது பன்றி. "அப்ப என்ன செய்ய லாம்" என்று எல்லா மிருகங்களையும் பார்த்துக் கேட்டது பெரிய யானை. எல்லா மிருகங்களும் ஒன்றை ஒன்று பார்த்துக்கொண்டு இன்று இரவு சிங்கத் தின் கொடும் பசிக்கு யார் இரையாகப்

போகிறோமோ என்று ஏங்கிக் கொண்டிருந்தன. நிசப்தமும் கலகலப்பும் மாறி மாறி நிகழ்ந்து கொண்டிருந்தன.

"என்ன ஒருதரும் ஒன்றும் சொல்லுறதுக்கில்லையோ?" என்று கேட்ட பெரிய யானை இன்னும் சற்று முன்னே வந்து மிருகக் கூட்டங்களின் நடுவே நின்றது. "நீங்கள் ஒருவரும் வாய் திறக்கிறியளில்லை. நரியார் எனக்கு ஒரு யோசனை சொல்லியிருக்கிறார். அப்படியே செய்யலாம் எண்டு எண்ணுகிறன் என்றது பெரிய யானை. என்ன கிழட்டுச் சிங்கத்தை பாழும் கிணத்துக்க தள்ளி விடுகிறதோ" என்றது கரடி. "அது பழைய தந்திரம். அது இப்ப பலிக்காது" என்றது நரி.

"கிழட்டுச் சிங்கம் பகலில குகையை விட்டு வெளிக்கிடுவதில்லை. இரவில நாங்கள் அசந்து நித்திரை கொள்ளுற நேரத்திலை எல்லே வந்து கவ்விக் கொண்டு போகுது." என்று மீண்டும் கறுவிக்கொண்டது மரை. இரண்டு நாட்களுக்கு முன்னர் தனது குட்டி மரையை கிழட்டுச் சிங்கம் வாரிக் கொண்டு போனதை நினைத்து கண்ணீர் சிந்திக் கொண்டது தாய் மரை.

"எல்லோரும் கதையை நிப்பாட்டுங்கோ. நாங்கள் எல்லோரும் பொழுதுபட்டவுடன வேற இடத்துக்குப் போய் நல்லா நித்திரை கொண்டிட்டு, மறுநாள் காலையில எங்கட காட்டுக்குத் திரும்புவம். இதுதான் இப்போதைக்கு உசிதமானது எண்டு நரியார் எனக்குச் சொல்லியிருக்கிறார்" என்றது பெரிய யானை.

"எங்க போறது" என்று ஏக குரலில் மிருகங்கள் எல்லாம் கேட்டன. "எங்கட காட்டுக்கு பக்கத்தில இருக்கிற ஊர்புறங்களில நகர்புறங்கலில தங்கிக் கொள்ளலாம்" என்றது நரி. "கிராமத்தவர்களின் உடமைகளுக்கோ, பயிர் பச்சைகளுக்கோ யாரும் சேதம் உண்டாக்கக் கூடாது" என்று கடுமையான அறிவுறுத்தலை பெரிய யானை மிருகங்களுக்கு வழங்கியது.

எல்லா மிருகங்களும் "ஓம்" "ஓம்" என்றன. தொடர்ந்து மூன்று கிழமைகள் மிருகங்கள் இரவில் நகர்புறங்களில் தங்கிக்கொண்டன. சிங்கத்தின் தொல்லையிலிருந்து தப்பிவிட்டோம் என்று எல்லா மிருகங்களும் நினைத்துக் கொண்டன.

மூன்று கிழமைகளுக்குப் பின் பெரிய நரி பெரிய யானையை சந்தித்து அவசரக் கூட்டம் ஒன்று போடப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டது. இந்த முறை பெரிய யானையின் வேண்டுகோளின்படி காகம் எல்லா காடுகளுக்கும் பறந்து மிருகங்களுக்கு கூட்டம் பற்றிய அறிவித்தலை வழங்கியது.

மிருகங்களெல்லாம் பிற்பகல் மூன்று மணிக்கு காட்டு முற்ற வெளியில் ஒன்று கூடின. பெரிய யானை களைத்து மெலிந்து போயிருந்தது. மிருகங்களெல்லாம் ஒன்றாகச் சந்தித்த போது தான் எல்லா மிருகங்களும் களைத்து மெலிந்து போயிருப்பதை நேரில் பார்த்து தெரிந்து கொண்டன. அதோட மிருகங்களின் தொகையும் சற்றுக் குறைந்திருப்பதையும் அறிந்து கொண்டன. "போன கிழமை முழுக்க என்னால நித்திரை கொள்ள முடியல்ல. ஒருசாதி நுளம்பு உடம்பெல்லாம் கடிச்சுப் போட்டுது". "நரியாரும் இதைச் சொல்லித் தான் இந்தக் கூட்டத்தைக் கூட்டச் சொன்னவர்". என்றது யானை. "ஓம் ஓம் நாங்களும் எல்லாரும் இதைத்தான் சொல்லவேண்டுமெண்டு வந்தனாங்க. எங்களால நுளம்புக்கடி தாங்கமுடியல்ல" என்று எல்லா மிருகங்களும் ஒரே குரலில் சத்தமாகச் சொல்லின. "கிராம புறத்தில, தோட்டங்களில, வாய்க்கால்களில, பாதை ஓரங்களில, குளத்து அலைகரைல, பாலங்களுக்குக்கீழ, மரங்களுக்குக்கீழ எங்க படுத்தாலும் நுளம்புகடி தாங்கமுடியல்ல". எல்லா மிருகங்களும் சொல்லி முடித்தன. "அதுதானாம் டெங்கு நுளம்பு. அது கடிச்சால் மருந்து இல்லையாம் எண்டு ஊரவை கதைச்சவை. என்ர காதில கேட்டது". என்று நிதானமாக முயல்

சொன்னது. முயலுக்கு கூர்மையான பெரிய காதுகள் உண்டு. "அப்ப நாங்கள் சிங்கத்தில இருந்து தப்பி நுளம்பில மாட்டுபட்டுட்டம். இதுவரையிலும் டெங்கு நுளம்புக்கடியால எங்கள்ள இருபது பேர் அநியாயமாகச் செத்துப் போட்டினம். கிராமப்புறத்திலும் நகரிலும் டெங்கு மயம். மனிசரை அழிக்கிற தெண்டே பகல் இரவாய் டெங்கு நுளம்புகள் அங்க பறந்து திரியினம்". என்றது பன்றி.

"இந்த மனிசர்; வீடு, வளவு, தோட்டம், வாய்க்கால் எதையும் சுத்தமாக வைச்சிருக்கிறதில்லை. குப்பை கூளம், கோம்பை, ரின்கள், சிரட்டை. ரிசுபாக், ஐஸ்கிறீம் பெட்டி, யோகட் கப் எல்லாத்தையும் கண்டபடி எல்லா இடத்திலையும் எறிந்து விடுகினம். குப்பைகள் மூலை முடுக்குகளிலும் வீதிகளிலும் நிறைஞ்சு போய்க் கிடக்குது. இவற்றில தண்ணீர் தேங்கி நிற்கும். அதில தான் டெங்கு நுளம்பு உண்டாகிறது" என்றது நரி. நரி மிகவும் புத்தி கூர்மையுள்ள மிருகம் தானே.

"சிரமதானம் என்று சொல்லி பள்ளிக் கூடங்களிலையும், அரசாங்க கந்தோர்களிலேயும் கூட்டம் கூட்டமாய் மனிசர் கூடி கூடி கதைப்பினம். கட்டிடங்களுக்குள்ள இருக்கிற கஞ்சல் குப்பைகளை வெளியில கொணர்ந்து கொட்டுவினம். பிறகு வெளியில கிடக்கிற கஞ்சல்கள் குப்பைகளை கிண்டிக்கிளறி எல்லாத்தையும் அரைகுறையாக விட்டுட்டு; வடை, வாழைப்பழம் பிஸ்கற் சாப்பிட்டு சோடா குடிச்சு, பீடா போடுறதோட சிரமதானம் முடிஞ்சிடும். அவையள் டெங்குவை ஒழிக்கமாட்டினம். இந்த MOH கந்தோர்காரர் அவையள் டெங்கு நுளம்பு கடிச்சு ஆரும் செத்தால் தான் புகை அடிப்பினமாம். வருத்தம் வந்து செத்ததுக்குப் பிறகுதான் டெங்கு நுளம்பு கடிச்சிருக்கவேண்டும் என்று ஆஸ்பத்திரியில டொக்டர்மார் கண்டு பிடிச்சுச் சொல்லுவினம். வருமுன் காக்க வேண்டுமென்று சம்பிரதாயத்துக்காக சொல்லிக் கொள்ளுவினம்" என்று விளக்கமாகச் சொன்னது மரை.

"சரி சரி நிப்பாட்டுங்கோ மனிசற்ற பிரச்சினைகள் உங்களுக்கு வேண்டாம். நாங்கள் எனி என்ன செய்யவேண்டும் எண்டு தீர்மானம் எடுப்போம்". என்றது பெரிய கரடி. அப்போது பெரிய யானையின் காதில் நரி ஏதோ சொன்னது.

பெரிய யானை இப்போது பேசியது "நாங்கள் இனி கிராம புறங்களிலோ, நகர் புறங்களிலோ இரவுகளில் தங்க வேண்டாம். நுளம்பு கடிச்சு வருத்தம் தேடவும் வேண்டாம். மூண்டு கிழமைக் கிடையில எங்களில இருபது பேர் செத்துப் போட்டினம் டெங்கு நுளம்புக் கடியால. அதனால இனி வழக்கம் போல எங்கட இடங்களிலேயே இரவிலும் தங்கிக் கொள்ளுவம்." "அப்ப இரவுக்கு எங்கவில யாரை சிங்கம் கொண்டு போகுதோ" என்றது மான். "ஏன் நாங்கள் சிங்க ராசாவைச் சந்தித்து மூண்டு நாளைக்கு ஒருவராக சாப்பாட்டுக்கு வாறம் எண்டு ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டால் என்ன? என்று பன்றி யோசனை சொல்லியது.

"ஏன் கொஞ்சம் டெங்கு நுளம்பை பிடிச்சுக் கொணர்ந்து சிங்கராஜாவின்ரை குகையில் விட்டம் எண்டால் சிங்கராசா டெங்கு நோயால செத்துப்போவார். நாங்கள் எல்லாரும் தப்பிப்பிழைச்சிடுவம்" என்றது இளம் கரடி.

"வேண்டாம் வேண்டாம். கெடுவான் கேடு நினைப்பான். நாங்கள் நகரத்தில இருக்கிற. நுளம்புகளை காட்டுக்குள்ள கொண்டு வந்து விட்டால் எங்கட முழு இனத்துக்கும் அழிவுதான் உண்டாகும். நுளம்பு மனிசரோடையே சீவிச்சுக் கொள்ளட்டும். நுளம்பை மனிசர் தானே வளக்கினம். தங்கட அழிவை தாங்களே தேடிக்கொள்ளுகினம். நாங்களும் அப்படிச் செய்யக்கூடாது" என்றது யானை.

"இப்ப யார் யார் சிங்க ராஜாவை சந்திக்கப்போறது. கெதியில நாங்கள்

ஒரு ஒழுங்குக்கு வரவேண்டும்." பொழுதும் படப் போகின்றது. என்றது நரி.

அப்போது யாரும் எதிர்பாராத நேரத்தில் சிங்கராஜா அந்தக்காட்டு வெளிக்கு வந்தது. மிருகங்கள் பல ஆங்காங்கே ஓடி காடுகளுக்குள் ஒழித்துக் கொண்டன. பல நாட்களுக்குப் பின் தங்களைக் கண்ட சிங்கம் என்ன செய்யப்போகிறதோ என்ற பயம் காரணமாக மிருகங்கள் நடுங்கிக்கொண்டிருந்தன. பெரிய யானையும் பெரிய கரடியும் சிங்கத்தை "வாருங்கள் சிங்கராஜாவே" சற்றுப் பதட்டத்துடன் வரவேற்றன. "நீங்கள் எல்லோரும் எனக்குப்பயந்து கிராமப்புறங்களில இரவில தங்கிற விஷயத்தை நான் ஏற்கனவே அறிஞ்சிருந்தன். எனக்கு நண்பர் குரங்கு எல்லாத்தையும் சொன்னார்" என்றது சிங்கம். "அது நாங்கள் கொஞ்ச நாள் ஒரு மாற்றத்துக்காக காட்டுக்கு வெளியில தங்கினனாங்கள். இனி நாங்கள் எங்கட காட்டை விட்டுப் போக மாட்டம். இது விடயமாக உங்களோட கதைக்கிறதுக்கு யாரை அனுப்பிறது எண்டுதான் இப்ப நாங்கள் கதைச்சுக் கொண்டிருந்தம். நீங்களே வந்துட்டியள். என்று தட்டுத்தடுமாறி கூறிச் சமாளித்தது யானை.

"நீங்கள் எவரும் பயப்படத்தேவையில்லை. நான் இப்ப மிருகங்களைச் சாப்பிடுறதில்லை. எனக்கு மாமிசம் விருப்பமில்லை. இப்ப நான் காய் கனி கிழங்கு வகைகள்தான் சாப்பிடுறன். நீங்கள் இல்லாத காலத்தில் நண்பன் குரங்குதான் இந்தச் சாப்பாடுகளை எனக்கு கொணர்ந்து தந்து சாப்பிடப்பழக்கி னவர்" என்ற சிங்கம் எல்லா மிருகங்களையும் அழைக்கும்படி யானையைக் கேட்டது.

யானையின் அழைப்பின் பேரில் எல்லா மிருகங்களும் சிங்கராஜாவின் முன்னே ஒன்று கூடின. "எனக்கு வயது போட்டுது. மிச்ச காலத்துக்கு நான் சுத்த சைவமாய் இருக்க விரும்புறன். நீங்கள் எவரும் எனக்குப் , பயப்படத்தேவையில்லை. எனக்கு மிருகாபிமானம் உண்டு. எனக்குப் பின்னர் இந்தக்காட்டுக்கு ராஜாவாக பெரிய யானையார் இருப்பார். நீங்கள் எல்லாரும் சந்தோசமாக ஒற்றுமையாக இருங்கோ. உங்கள் சந்ததிகள் பெருகட்டும்" என்று கூறிக் கொண்டு சிங்கராஜா தனது குகையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. மிருகங்களெல்லாம் காட்டு முற்ற வெளியில் நின்று சந்தோஷத்தால் துள்ளிக் குதித்தன. சிங்கராஜா வாழ்க. அவரது மிருகாபிமானம் வாழ்க என்று கோஷ மிட்டன. ■

---

## விம்பிள்டன் டெனிஸ் பட்டம் வென்றார்

## அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ்



உலகின் தரவரிசையில் முதல் இடத்தில் உள்ள அமெரிக்காவின் டெனிஸ் வீராங்கனை 2015 ஆம் ஆண்டுக்கான விம்பிள்டன் டெனிஸ் பட்டத்தைச் சுவீகரித்துக்கொண்டார். இறுதிப் போட்டியில் ஸ்பெயின் வீராங்கனை முகுருஜாவை வெற்றி பெற்றதன் மூலம் செரீனா வில்லியம்ஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில் ஆறாவது முறையாகவும் விம்பிள்டன் பட்டத்தைத் தனதாக்கிக்கொண்டார். தற்பொழுது செரீனா வில்லியம்ஸ் வென்றுள்ள 21வது கிராண்ட்ஸ்லாம் பட்டம் இதுவாகும். உலகின் முதல்தர வீராங்கனையாகப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் செரீனா வில்லியம்ஸ் டெனிஸ் வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளார். வாழ்க சிறப்புடன்

 — தேடலோன்

# உலகில் மிகவும் மகிழ்ச்சிகரமான நாடு சுவிட்ஸர்லாந்து

உலகில் மூலதன அடிப்படையில் உண்மையான உள்நாட்டு உற்பத்தி யின் அளவு, நேர்மை, பெருந்தன்மை, நம்பிக்கை, எதிர்பார்க்கப்படும் ஆரோக்கி யமான வாழ்க்கை. ஊழல் மட்டங்கள், மற்றும் சமூக சுதந்திரங்கள் ஆகிய அம்சங்களைக் கொண்டு இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. பணம் என்பதற்கு அப்பால் மனித சமூகம் எப்படி மகிழ்ச்சியாக வாழ்கின்றது என்பதற்கான ஆதாரத்தை இந்த ஆய்வு வழங்கியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையால் இயலக் கூடிய அபிவிருத்தி இலக்குகளை எட்டும் நோக்கத்துக்காக ஸ்தாபிக்கப்பட்ட இயக்கக்கூடிய அபிவிருத்தித் தீர்வுகள் வலைப்பின்னலால் 158 உலக நாடுகளை உள்ளடக்கி இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

மேற்படி ஆய்வில் தொடர்ந்து மூன்றா வது ஆண்டும் உலகின் மிகவும் மகிழ்ச் சிகரமான நாடாக சுவிட்ஸர்லாந்து முதல் இடத்தை வகிக்கின்றது. சுவிட்ஸர்லாந் துக்கு அடுத்தாக மகிழ்ச்சியான நாடுகளாக முறையே ஐஸ்லாந்து, டென்மார்க், நோர்வே, கனடா, ஆகிய நாடுகள் உள்ளன.

அமெரிக்கா 15 ஆவது இடத்திலும், பிரிட்டன் 21வது இடத்திலும், சிங்கப்பூர் 24வது இடத்திலும் உள்ளன. இந்தப் பட்டியலில் இந்தியா 117வது இடத்திலும் இலங்கை 132 வது இடத்திலும் இந்த ஆண்டுக்கான உலகின் மிகவும் மகிழ்ச்சிகரமான நாடுகள் வரிசையில் இடம்பிடித்துள்ளன.

மகிழ்ச்சி குறைந்த நாடுகள் வரிசை யில் டோகா, புருண்டி , சிரியா, பெனின் மற்றும் ருவண்டா ஆகிய நாடுகள் உள்ளன.

இத்தரவுகளை உன்னிப்பாக அவதா னிக்கும்போது புலம்பெயர்ந்து சென்ற நம்மவர்களில் அநேகமானவர்கள் மகிழ்ச் சியான நாடுகளில்தான் வாழ்ந்து கொண்டி ருக்கின்றார்கள். அந்தந்த நாடுகளின் கௌரவத்திற்கு எவ்வகையிலும் இடையூ றுகள் ஏற்படாத வகையில் மிகுந்த அவதானிப்புடன் வாழ்ந்து காட்டவேண்டிய பெரும் பொறுப்பு அவர்களுக்கு உண்டு என்பதை எச்சந்தர்ப்பத்திலும் மறந்து விடக்கூடாது. வாழவைக்கும் நாட்டை மகிழ்ச்சியுடன் வாழவைப்போம்.

✧ ✧ ✧

# மணப்பெண்களுக்குத் தட்டுப்பாடு

எமது அயல் நாடான இந்தியாவில் மணப்பெண்களுக்குத் தட்டுப்பாடு காரணமாக 4 கோடி 12 இலட்சம் ஆண்கள் திருமணம் செய்யாமல் தனிமையில் வாழ்வதாக ஆய்வு ஒன் றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் சனத்தொகையில் ஆண்களை விட மிகக்குறைவான எண்ணிக்கையி லேயே பெண்கள் உள்ளனர். தற்பொழுது நாட்டிலுள்ள 6 கோடி 50 இலட்சம் திருமணமாகாத ஆண்களுக்கு 2 கோடி 38 இலட்சம் மணப்பெண்கள் மட்டுமே இருப்பதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக் கின்றன. அதனால் ஒரு பெண்ணுக்கு 3 ஆண்கள் என்ற விகிதாசாரத்திலேயே காணப்படுவதால் வேறு வழியின்றி ஆண்கள் திருமணம் செய்துகொள்ளாமல் இருக்கின்றார்கள். பெண் சிசுக்களை

கருவில் அழிப்பதும், கள்ளிப்பால் கொடுத்துக் கொல்வதும் சமூகச் சீர்கேடாக இருந்த காலகட்டத்தில் தம்மை ஒரு சீர் திருத்தவாதிகள் என்று எண்ணிக் கொண்டிருந்த ஆணாதிக்க வர்க்கம் இன்று திருமணம் செய்துகொள்ள பெண்கள் இல்லையே என்று எண்ணி வெட்கித் தலைகுனிந்து நிற்கிறது. குழந்தைத் திருமணங்கள், பாலியல் வன்முறைகள் அதன்காரணமாக ஏற்படும் தற்கொலைகள், கொலைகள் போன்றவற்றினால் பெண்களின் தொகையில் வீழ்ச்சி கண்டுள்ளமையும் அவதானத்திற்குரியது.

இந்தியாவில் 1970கள், 80கள் மற்றும் 90களில் கோடிக்கணக்கான பெண் சிசுக்கள் கருவிலேயே அழிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய பிற்போக்குத்தனமான செயற்பாட்டினால் தான் ஆண், பெண் விகிதாசாரம் சமமாக இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. காலப்போக்கில் பஞ்சபாண்ட வர்களுக்கு ஏற்பட்ட நிலைதான் உருவாகுமோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

வீட்டுக்கு விளக்கேற்ற அன்புடைய இல்லாள் அவசியம் என்பதை ஆணாதிக்க வர்க்கம் இனியாவது உணர்ந்து கொள்ளுமா? பாதிக்கப்பட்ட சிவப்பு விளக்குப் பகுதிப் பெண்களுக்கு மறுவாழ்வளிக்க முன்வருவார்களா இந்த ஆண்கள்? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் காலம் அவர்களுக்கு இனியாவது நல்ல எண்ணங்களைக் கொடுக்கட்டும்.

✧ ✧ ✧

# இறைவனைப் பிரார்த்திக்கும் மாதுலுவாவே சோபித தேரர்

மனிதாபிமானத்துக்கு எதிராக நடைபெறும் சம்பவங்களை எந்த வகையிலேனும் கட்டுப்படுத்த வேண்டும். பாலியல் கொடுமைகள், கொலைகளை தடுத்து மக்களின் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அதேபோல் மக்கள் தமது மனச்சாட்சிக்கு அடிபணிந்து நடக்க வேண்டும்.

வடமாகாணத்தில் இடம்பெற்ற பாடசாலை மாணவி வித்தியாவின் பாலியல் வன்கொடுமை மற்றும் அவரை படுகொலை செய்தமை கண்டனத்துக்குறிய விடயமாகும். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்துக் குற்றவாளிகளையும் உடனடியாக கைது செய்து கட்டாயம் சட்டத்திற்கு அமைய அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

மாணவி வித்தியாவின் படுகொலை சம்பவம் தொடர்பில் அம்மக்களின் கோபமும் கொந்தளிப்பும் நியாயமானதே. பாடசாலை சிறுமியை பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கிப் படுகொலை செய்த நபர்களை மக்கள் தண்டிக்கத் துடிப்பதையும் இவ் விடயத்தில் கோபப்படுவதையும் நாம் குறைகூற முடியாது. ஆயினும் மக்கள் அமைதியாக இருந்தால் மட்டுமே நியாயம் கிடைக்கும்.

வடக்கில் மக்கள் பல கஷ்டங்களை அனுபவித்து இன்று மிகக் குறுகிய காலத்தில் தான் விடுதலைக் காற்றை சுவாசிக்கின்றனர். இப்படியானதொரு நிலமையில் மக்கள் தம் சுதந்திரத்தை தவறான வழிமுறையில் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது. ஆண்கள் எப்போதும் பெண்களுக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டும். பெண் பிள்ளைகளுக்கு பெற்றோர் பாதுகாப்பாக இருக்க வேண்டியது அவர்களின் கடமையாகும். இக்கொடூர சம்பவம் இனி ஒருபோதிலும் எந்தப் பெண் பிள்ளைகளுக்கும் நடக்கக் கூடாது என்பதற்காக நான் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன் என்று தெரிவித்துள்ளார்.

# பெருமைக்குரிய நித்தியானந்தங்கள்

தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து வெளி நாடுகளில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற எம்மவர்கள் எமது சமுதாயத்திற்கும் எமது தாய் மொழியாம் தமிழுக்கும் ஆற்றிவருகின்ற அளப்பரிய சேவைகளை எண்ணி உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகின்றோம். ஐக்கிய இராச்சியம், கனடா, அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வாழுகின்ற இலங்கைத் தமிழர்கள் இன, மொழி அடையாளங்களை, எமது கலாசாரம் பண்பாடுகளைப் பேணிப் பாதுகாத்து வருகின்றார்கள். அதே வேளை புலம்பெயர் இலக்கியப் பங்களிப்புகளும் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



இலங்கையரான கலாநிதி மு.நித்தியானந்தன் இலண்டனில் வாழ்ந்துகொண்டு இலக்கியப்பணியில் ஈடுபட்டு வருகின்றார். முதிர்ந்த எழுத்தாளரும், ஆய்வாளரும், சிறந்த விமர்சகருமாகிய மு.நித்தியானந்தன் அவர்கள் ஆளுமைமிக்க ஒரு கல்வியாளருமாவார். எதையும் துணிந்து கூறும் ஆற்றலும் அறிவும் அவரின் தனித்துவங்கள். மலையக மக்களின் அவல வாழ்க்கைக் கோலங்களை அனுபவரீதியாகத் தரிசித்தவர் என்ற வகையில், மலையக எழுத்தாளர்களின் போக்குகளை 'கூலித் தமிழ்' என்னும் எழுத்தோவியமாக மக்கள் முன் வைத்துள்ளார். அவரின் உன்னதமான சேவையைத் 'தாயக ஒலி' வாழ்த்தி மகிழ்கிறது.

இலங்கையரான மாவை நித்தியானந்தன் இளம் வயதில் இலக்கியப் பங்களிப்புக்களை மேற்கொண்டவர். புலம் பெயர்ந்து அவுஸ்திரேலியாவுக்குச் சென்றவர். 1994இல் மெல்பன் பாரதி பள்ளி என்ற ஒரு தமிழ்ப் பாடசாலையை நிறுவி அதன் மூலம் ஆயிரக்கணக்கானவர்களுக்குத் தமிழ் மொழிக் கல்வியை ஊட்டி வருகின்றார். 'மெல்பன் பாரதி பள்ளியின் இருபதாவது ஆண்டு விழா அண்மையில் பலதரப்பட்ட நிகழ்ச்சிகளுடன் குழந்தைகள், பெற்றோர், ஆசிரியர், பொதுமக்கள், கலைஞர்கள், எழுத்தாளர்களின் மாபெரும் ஒன்று கூடலாக அமைந்திருந்தது. தமிழ்த்திறன் அறிவுப் போட்டிகள், புத்தகக்கண்காட்சி, ஓவியம், கைவினைக்கண்காட்சி, ஊர்வலம், பரிசளிப்பு என்று ஏகப்பட்ட நிகழ்ச்சிகள் விழாவின் சிறப்புக்குக் கட்டியம் கூறி நின்றன.



மாவை நித்தியானந்தன் தமிழ்ச் சேவையுடன் மட்டும் நின்று விடாது, தாயகத்திற்கு வருகை தந்து, வட பகுதியில் குடும்பத் தலைவனை இழந்து நிற்கும் தாய்மார்களுக்கான சுயதொழில் ஊக்குவிப்பு உதவிகளையும் காலத்துக்குக்காலம் மேற்கொண்டு வருகின்றார். அவரின் பொதுப் பணியினைத் 'தாயக ஒலி' வாழ்த்தி மகிழ்கின்றது.

இலண்டன், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் வாழ்த்திக்கொண்டு பெரும் சேவை ஆற்றிக்கொண்டிருக்கின்ற இரண்டு நித்தியானந்தங்களும் பெருமைக் குரியவர்களே! அவர்களின் சேவை தொடர எமது வாழ்த்துக்கள்

நூல் அறிமுகம்

தேடலோன்

# "மலைப்பூட்டும் மருத்துவ அறிவியலை அறிந்து கொள்வோம்"



குடும்ப மருத்துவராக கொழும்பில் இருந்து சேவையாற்றி வரும் டாக்டர் எம்.கே. முருகானந்தன் அவர்கள் சிறந்த மருத்துவராக மட்டுமன்றி ஒரு இலக்கிய வாதியாகவும் முகிழ்ந்து நிற்கின்றார். மருத்துவம், நலவியல் சார்ந்த துறைகளில் சமூக நலம் சார்ந்த தமது ஆக்கங்களை வெளியிட்டுவரும் இவர் கலை இலக்கியம் சார்ந்து சிறுகதை, கவிதை, இலக்கியக் கட்டுரைகள், சினிமா என்று படைப்பிலக்கியத்துறையில் தடம் பதித்தும் நிற்கின்றார். மேலும் தொலைக்காட்சி, இணையம், பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஊடாக நேர்காணல் மூலம் மருத்துவம் சம்பந்தமான தெளிவை வழங்கி வருவதையும் அவதானிக்க முடிந்துள்ளது.

பலதுறைகளில் அறிவும், ஆளுமையும் மிக்க டாக்டர் எம்.கே.முருகானந்தன் அவர்கள் இதுவரை பதின்நான்கு நூல்களை வெளியிட்டுள்ளார். 'தாயாகப் போகும் உங்களுக்கு', 'நீங்கள் நலமா' ஆகிய இவரது இரண்டு நூல்களுக்கும் சாகித்திய மண்டலப் பரிசுகள் கிடைத்துள்ளன. 'தாயாகப்போகும் உங்களுக்கு' என்னும் நூலுக்கு இலங்கை இலக்கியப் பேரவையின் விருதும் கிடைத்துள்ளது. 'சமகாலம்' என்னும் சஞ்சிகையில் இவரால் எழுதப்பட்ட அறிவியல் சார்ந்த கட்டுரைகள் சிலவற்றை உள்ளடக்கி 'மலைப்பூட்டும் மருத்துவ அறிவியலை அறிந்து கொள்வோம்' என்னும் நூல் 18 கட்டுரைகளுடன் வெளிவந்துள்ளது.

'காதலுக்கும் கவர்ச்சிக்கும் அப்பாலும் உதடுகள் சில ஆய்வுகள்' என்னும் முதலாவது கட்டுரையில் ஜோசப் சேவியர் தாசப்பன் புனைந்த கவிதையினை முன்னிறுத்தியுள்ளார். இவற்றுக்கு அப்பால் உதடுகளில் உள்ள மென் கோடுகளின் தெளிவும் பல தட்டுக்களும், பள்ளங்களும் இருப்பதாக அதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றார். உதட்டு அச்சு (Lip print) பற்றிய ஆய்வுக்கான Cheiloscopy என்னும் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உதடுகள் பற்றிய ஆய்வினை மானிடவியல் ஆய்வாளரான ஆர்.எஸ்.பிஸர் (R.S.Fischer) 1902ல் மேற் கொண்டிருந்தார். மற்றும் ஜப்பானைச் சேர்ந்த யாகசுவோ, சுசுகி ஆகியோர் மனித உடுகளின் சிவப்புப் பகுதியிலுள்ள வரி வடிவங்கள் ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்துவமும் பிரத்தியேகமுமானவை என்பதை நிறுவினார்கள். துப்புத்துலக்காத வழக்கில் குற்றவாளியைக் கண்டு பிடிப்பதற்கும் உதட்டிலுள்ள வரிவடிவங்கள் பயன்படும் என்றும் ஆண் பெண் உதடுகளின் வித்தியாசத்தையும் கண்டு பிடிக்க முடியும் என்ற நம்பிக்கையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.




'காதலும் காமமும் சாதலும் மனிதனிலும் மிருகங்களிலும்' என்னும் மகுடத்திலான கட்டுரையில் காதலின் உச்சகட்டம் கூடல்(புணர்ச்சி). அது காதலின் புனிதத்தை மாசுபடுத்துகின்றது என்றாலும், போதையில் மயங்கியது போன்ற இன்பத்தை உளமும் உடலும் ஒன்றிய இருவரின் கூடல் கொடுக்கிறது. காதல் விலங்குகள், பறவைகள், பூச்சி, புழுக்கள் யாவற்றுக்கும் பொதுவானது.

அன்ரகைனஸ் சுண்டெலிகளின் பாலியல் ஹார்மோன்கள் சுரக்கும் காலங்களில் புணர்ச்சி வேட்கை உச்சநிலையிடைந்து ஊன் உறக்கமின்றி துணையோடு இணைந்து பிணைந்து கடைசியில் உயிரைமாய்த்துக் கொள்கின்றன. மனிதர் களின் ஹார்மோன்கள் ஆண் பெண் இருபாலாரையும் பாலியல் வேட்கைக்கு உள்ளாக்குகின்றன. ஆண் பெண் உறவுகள் வெறும் காமக்கண்ணோட்டத் துடன் அணுகாமல் புரிந்துணர்வுடன் கூடிய உறவாக வளர்ப்பதே சிறந்தது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

'வாடகைத் தாய்மார்கள்' என்ற தலைப்பில் பெண்களின் அவலம் முன் வைக்கப்பட்டுள்ளது. வறுமை காரண மாக வாடகைத்தாய்மார்கள் பிரவசகாலத் திலும் அதன்பின்பும் பணக்காரவர்க்கத் தினால் ஏற்படுத்தப்படும் கஷ்டங்களுக்கு உடல் உளரீதியாகப் பாதிப்புக்கு உள்ளா கின்றார்கள். வாடகைத் தாய்மார்களின் பிரச்சினை இலங்கையில் இல்லாதபோதி லும் இந்தியாவில் பெருமளவு இருக்கின் றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

'முகத்தில் சிரிப்பு மூளையின் தெறிப்பு' என்னும் தலைப்பிலான கட்டுரையில் சிரிப்பானது தன்னளவானது என்பதை விட சமூகஊடலுடன் கூடிய செயற்பாடா கவே பெரும்பாலும் இருக்கிறது. ஒரு விடயத்தையிட்டு நாம் தனியாக இருக் கும் போது சிரிப்பதைவிட மற்றவர்களு டன் கூடியிருக்கும் போது முப்பது மடங்கு அதிகமாகச் சிரிக்கின்றோம் என்று ஆய்வாளர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள். இப்பொழுது நவீன கருவிகளின் உதவி யுடன் மூளையின் செயற்பாடுகளை ஆராய்ந்து உளம் நிறைந்த சிரிப்பா? அல்லது போலிச் சிரிப்பா? என்பதைத் தெரிந்துகொள்ளமுடியும் என்று விஞ்ஞான பூர்வமாக உறுதிப்படுத்த முடிந்திருக்கிறது.

'கருவறையினுள் சத்திரசிகிச்சை' என்னும் பகுதி விதியெழுதும் இறைவ னுக்குச் சவால் விடப்படுவதாக அமைந் துள்ளது. ஆச்சரியப்படத்தக்க வகையில் கருவில் சத்திரசிகிச்சை செய்வதானது இன்று துரித வளர்ச்சியடைந்த துறை யாக இருக்கின்றது.

பாலியல் குற்றவாளிகள் மறைத்த சங்கதிகளை வெளிவர வைக்குமா?' பொய் பேசுகின்றவர்களை பொலிகிராவ் டெஸ்ட் (polygraph Test) மூலம் உண் மையை வெளிக்கொணரமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

'அப்பாவாகப் போவது எப்போது?' என்னும் பகுதியில் இளம் வயதில் திருமணம் செய்து குழந்தைகளைப் பெறுவதால் குழந்தைகள் நல்லநிலை யில் வளர்ந்து ஆரோக்கியமாக இருப் பார்கள் என்றும், வயது கூடியவர்கள் குழந்தைகளை பெறுவதிலுள்ள சந்தர்ப் பங்களில் பலவகைப்பட்ட பிரச்சினை களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையையும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சமூகக் கட்டுப்பாடுகள் விஞ்ஞான முடிவுகளுடன் முரண்படுவதை அவதா னிக்கக் கூடியதாக உள்ளது.

'ஸ்டெம்செல் (Stem cells மூலக்கலம் மூல உயிரணு) மூலம் சுண்டெலிக் குஞ்சுகளை உருவாக்குவதில் விஞ்ஞா னிகள் வெற்றியும் கண்டுள்ளார்கள். குளோனிங் மூலம் பன்றி, ஆடு, நாய்க ளின் குட்டிகளையும் உருவாக்கிச் சாதனை படைத்துள்ளார்கள். இதன் அடிப்படையில் ஸ்டெம்செல் குழந்தை கள் எப்போது? என்ற கேள்வியையும் ஆசிரியர் முன்வைத்துள்ளார்.

'அலட்சியம் செய்ய முடியாத குழந்தை யின் அழுகுரல்' என்ற பகுதியில் குழந்தை யின் அழுகைச் சத்தம் மிகவும் வீரியம் மிக்கது. உடனே அதைக் கேட்டவுடன் தாயோ, தந்தையோ அல்லது வெறு நபரோ அதிர்வுக்கு ஆட்படுகின்றார்கள் என்று கூறப்பட்டுள்ளது. எமது மூளையா னது அதற்குப் பதப்படுத்தி வைக்கப்பட்

டுள்ளது என்று விஞ்ஞானிகள் தமது ஆய்வின் அடிப்படையில் கூறுகின்றார்கள்.

'புற்றுநோய்' பற்றிய பல தரவுகள் விஞ்ஞான ஆய்வுகளின் வாயிலாக முன் வைக்கப்பட்டுள்ளன. புற்றுநோயின் தொடக்கம், அது பெருகும் விதம் ஆகியவற்றின் நுணுக்கங்களை மேலும் கண்டறிவதன் மூலம் பூமியில் உயிரினம் கடந்துவந்த பாதை பற்றிய அறிவைப் பெறமுடியும். அதனால் புற்றுநோய் பற்றிய பயங்கள் நீங்கி மனித இனத்தின் வாழ்வு பற்றிய நம்பிக்கை வளரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

'மரணப் படுக்கை தரிசனங்கள்' என்ற பகுதியில் காலாதிகாலமாக இப்படியான விடயங்கள் பேசப்பட்டு வந்தாலும், அவை விஞ்ஞான பூர்வமான பதிவுகளாகத் தற்பொழுது ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. பிறப்பு எவ்வாறு எமது கைகளில் இல்லையோ அதேபோல இறப்பும் நிச்சயமானதே. அதுவும் எமது வாழ்க்கைச் சக்கரத்தின் தவிர்க்கமுடியாத ஒரு அங்கமேயாகும். இருந்த போதிலும் மரணம் பீதியானது பெரும்பாலானவர்களிடம் மறைந்திருக்கின்றது என்று அறிய முடிகிறது.

குழந்தைகளை குளோனிங் முறையில் உருவாக்கல், எச்.ஐ.வி.தொற்றை முற்றாகக் குணமாக்கல், உயிரியல் கணினி சாத்தியமாகும், டெஸ்ட்டியூப் பேபியின் தந்தை ரொபேட் எட்வேர்ட்ஸ், கொங்கை இழந்த திரை மங்கையாள், ஈ சிகரெட் பாதுகாப்பாதனா? ஆகிய பல விடயங்கள் விஞ்ஞான ரீதியான ஆய்வுகளின் அடிப்டையிலும், மனித வாழ்க்கையின் அர்த்தப்பாடுகளுடன் கூடிய அணுகுமுறையிலும் உண்மையை நிலைநிறுத்தி அறிவியல் நோக்கில் அற்புதமான இந்நூலை டாக்டர் எம்.கே.முருகானந்தன் மக்களின் பார்வைக்கு முன்வைத்துள்ளார். ■

---

# 'நல்லைநகர் நாவலர் பெருமான் வழியில்' பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை



அறிவும், ஆற்றலும், ஆளுமையும் மிக்க சைவப் பெருந்தகை கலாநிதி, கலாபூஷணம், உயர்திரு. குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் நாவலர் பெருமான் காட்டிய வழி நின்று சைவத்தையும் தமிழையும் போற்றிக் காத்துவருகிறார். யாழ்ப்பாணம், கல்வயலைப் பிறப்பிடமாகக் கொண்ட சோமசுந்தரம் அவர்கள் கல்விப் பெரும்புலத்தில் ஆசிரியராக, வட்டாரக் கல்வி அதிகாரியாக, கல்விப் பணிப்பாளராக, தேசிய கல்வி நிறுவக பிரதிக்கல்விப் பணிப்பாளர் நாயகமாக இருந்து பணியாற்றி ஓய்வு பெற்றார். தொடர்ந்து எழுத்து, பேச்சுமூலம் சைவத்திற்கும் தமிழுக்கும் அரும்பணி ஆற்றி வருகின்றார். வானொலியிலும், தொலைக் காட்சியிலும், பத்திரிகை ஊடகங்களிலும் தமது பேச்சுவன்மையாலும் எழுத்தாற்றலாலும் மக்கள் மனங்களில் இடம்பிடித்துள்ள இவர் மானிட விழுமியங்கள் பற்றிய புரிதலை உணர்த்தும் வகையிலான எழுத்துக்களை பல வடிவங்களில் தந்துள்ளார்.



நல்லைநகர் நாவலர், சைவ மரபும் தமிழர் வாழ்வும், மனித விழுமியங்கள்,

சைவ வாழ்வியற் சிந்தனைகள், மனித மேம்பாட்டுச் சிந்தனைகள், வாழ்வு நலம் பெற நற்சிந்தனைகள், மனித வாழ்க்கை விழுமியங்கள், சைவ நற்சிந்தனைக் களஞ்சியம் ஆகிய இவரது நூல்கள் பலரின் மதிப்பைப் பெற்றுள்ளன. தொடர்ந்து பத்திரிகைகளில் எழுதிவரும் இவருடைய ஆக்கங்கள் பலரின் அவதானிப்பைப் பெற்று நிற்கின்றன. அண்மையில் இவரது 'நல்லைநகர் நாவலர் பெருமான் வழியில் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை' என்னும் நூல் புதுவரவாக வெளிவந்துள்ளது.

"ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான்" மலைபோன்ற நல்லாசிரியர். நாவலர் பெருமானின் மாணவர்களின் மாணாக்கர். இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் அவரை மானசீகக் குருவாகக் கொண்டு கூடி வாழ்ந்தவர் இந்த நூலின் ஆசிரியர் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள். "நாவலர் பெருமான் வழியில் பண்டிதமணி" என்னும் இந்த நூலில் நாவலர்பெருமானையும் அவர் வழிந்த பண்டிதமணி அவர்களையும் பண்டிதமணி வழிவந்த நூலாசிரியரையும் தரிசிக்கின்றோம்." என்று கலாபூஷணம், சைவப் புலவர் சு.செல்லத்துரை அவர்கள் முன்னுரையில் தெரிவித்துள்ளார்.

"பண்டிதமணியின் உரைத்திறன், நவீனத்துவம் வாய்ந்தது. சொல்விற்பனமும், அவதானமும், கல்வி சொல்லவல்ல நல்வித்தையும் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் அற்புதக் கலையும், நகைச் சுவையை நளினமாகக் கையாளும் பாங்கும் பண்டிதமணியின் தனித்துவ முத்திரைகளாக, அவரின் ஆளுமை நலத்திற்கு அணி செய்கின்றன. பண்டிதமணியின் இப்பண்புகளை விளக்கும் வகையிலும் அவரின் சைவத்தமிழ் பணிகளை ஓரளவு கோடிட்டுக் காட்டும் நோக்கிலும் என்னால் எழுதப்பட்ட ஒன்பது கட்டுரைகள் இந்நூலில் உள்ளடக்கம் பெற்றுள்ளன." என்று நூலாசிரியர் நூலின் முகவுரையில் தெளிவுபடுத்தியுள்ளார்.

"பெரியார் கலாநிதி கு.சோமசுந்தரம் ஐயா" அவர்களின் "நல்லைநகர் நாவலர்" என்ற நாடக நூல் 1977 ஆம் ஆண்டு வெளிவந்தது. இந்நூலுக்கு பண்டிதமணி அவர்கள் மிக அருமையானதொரு அணிந்துரையையும் வழங்கி மிகவும் பாராட்டியுள்ளார். இவரின் நாடக நூல் ஆறுமுகநாவலரின் உண்மையான சரித்திரத்தைத் தந்த பெருமை பெற்றது. ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் மாதாந்த "அருள் ஒளி" சஞ்சிகையில் சோமசுந்தரம் ஐயாவின் நூறு கட்டுரைகள் வரை வெளிவந்துள்ளமை பெருமைக் குரியது." என்று இந்த நூலின் பதிப்புரையில் சைவத்திரு கா.சிவபாலன் அவர்கள் அறியத்தந்துள்ளார்கள்.

இந்நூலில் பண்டிதமணி பற்றிய பல்வேறு விடயத்தானங்களை ஒன்பது கட்டுரைகளாக ஆசிரியர் தந்துள்ளார். முதற்கட்டுரை 'நாவலர் ஞானப்பரம்பரையைத் தொடரவைத்த பண்டிதமணி இலக்கிய கலாநிதி சி.கணபதிப்பிள்ளை' என்று அமைகிறது. நாவலர் பெருமானுக்குப் பின்னர், அவரின் அடிச்சுவட்டிலே மறுமலர்ச்சிப் பணிகளைத் தொடர, நாவலர் பரம்பரை தோன்றியது. நாவலர் அணியின் விசுவாசம்மிக்க தளபதிகளுள் ஒருவராகவும், நாவலரின் நோக்கத்தினையும் போக்கினையும் உள்ளபடி அறிந்து உலகிற்குணர்த்திய தலைமகனாகவும் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை விளங்கினார் என்று இக்கட்டுரையில் பதியப்பட்டுள்ளது.

பண்டிதமணியின் வாழ்வும் வளமும், ஈழத்துத் தமிழ்க் கல்வி வழியில் பண்டிதமணி, பண்டிதமணி தரும் மனித விழுமியச் சிந்தனைகள், அவரின் இளமைக்கால அனுபவங்கள், ஆளுமை வளர்ச்சி, நாவலருக்குப் பின் நமக்கொரு சைவக்காவலர், இலக்கிய கலாநிதி சி.கணபதிப்பிள்ளை பண்டித மணி போற்றிய கந்தபுராணக் கலாசாரம் ஒரு கண்ணோட்டம் ஆகிய தலைப்புக் களில் தரப்பட்ட கட்டுரைகள் மூலம்

பண்டிதமணி பற்றிய முழுமையை அறியமுடிந்துள்ளது.

பண்டிதமணியின் இலக்கியப் பணி களைக் கௌரவித்து 1978 இல் இலங் கைப் பல்கலைக்கழகம், அவருக்கு இலக்கிய கலாநிதிப்பட்டத்தை வழங்கிப் பெருமை கொண்டது. பண்டிதமணி மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்தடிர் பட்டமும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பயிற்றப்பட்ட ஆசிரியர் சான்றிதழும் பெற்றவர். திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் தமிழ் விரிவுரை யாளராகப் பணியாற்றி நல்ல மாணாக் கர் பரம்பரையை உருவாக்கினார். இத்தகைய பெருமைகளுக்குரியவரான இப்பெருமகன் யாழ்ப்பாணம், மட்டுவில் கிராமத்தில் சின்னத்தம்பி -வள்ளியம்மை தம்பதியினருக்கு மகனாக 1899 ஆம் ஆண்டு ஆனி மாதம் 27ம் திகதி பிறந்தார். எண்பத்தாறு வருடங்கள் இப்பூவுலகில் நைட்டிகப் பிரமச்சாரியாகச் செம்மை வாழ்வு வாழ்ந்து சைவமும் தமி ழும் தழைக்கத் தொண்டுகள் பல புரிந்து 1986 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13ஆம் திகதி ஈசன் எந்தை இணையடி நிழலை அடையும் பேற்றினைப் பெற்றார். சைவ மும், தமிழும் இருக்கும் வரை அவர் வாழ்ந்து கொண்டே இருப்பார். அவரின் முழுமையான பதிவுகளை வருங்கால சமுதாயத்திற்குத் தந்துதவிய நூலாசிரி யர் குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் பாராட்டுக்குரியவர். அவர் பணி தொடர வாழ்த்துக்கள். ■

---

# கண்ணீர் அஞ்சலி



"எனது அர்ப்பணிப்புகளின் அடையாளங்கள் இவை. எனது அயராத உழைப்பின் வெளிப்பாடுகள் இவை. ஒவ்வொரு முறை விழுகின்ற போதும் அதைவிட வேகமாக நான் எழுந்திருக்கின்றேன், என நினைவில் வைத்திருக்கின் றேன். இதுதான் உங்களுக்கும் பாடமாக வேண்டும். என் பயணத்தில் இரண்டு முக்கிய நினைவுகள் என் மனதைத் தொட்டவை. ஒன்று 1995 இல் நிகழ்ந்த கொடூரமான யாழ். இடப்பெயர்வு. அந்த நாட்களில் நான் உடல் நலமற்றி ருந்தேன், என் அன்னை முதுமையின் இயலாமையில் இருந்தார். அப்படி இருந்தும் அண்ணா நிறுவனத்தையும் அதன் ஊழியர்களையும் மக்கள் கூட்டத்துடன் மழையின் நடுவே நகர்த்தியிருந்தேன். அந்த அனுபவங்கள் ஆழமான வடுக்களாக என் மனதுள் இருந்தன. என் வாழ்வின் வீரம் செறிந்த விளையாட்டாகவே அதை நினைத்துப் பார்க்கின்றேன். ஜீவாகாரம் உருவாக்கிய போது கடுமையான உழைக்க வேண்டியிருந்தது. கள நிலைமையும் மோசமாக இருந்தது. எனினும் என் கால் அடிகள் ஒவ்வொன்றும் அளந்தே வைக்கப்பட்டன. அப்போது மறக்க முடியாத பல மனித நேயங்கள் எனக்கு உதவிக்கரம் நீட்டின. நான் இந்த மண்ணின் மைந்தன், எந்தச் சோதனையிலும் நாம் மக்களை விட்டு ஓடியதில்லை, என்றும் ஒரு மக்கள் கூட்டம் எம்பின்னால் இருக்கின்றது என்ற உண்மையான எண்ணம் எனக்குண்டு. இது எந்த நிறுவனத்துக்கும் இல்லாத பெருமை எனக்கூறி நெஞ்சார முழு மனதுடன் உங்கள் முன் நிற்கின்றேன்." என்று கூறிய அண்ணா தொழிலக அதிபர் உயர்திரு.பொ.நடராசா அவர்கள் இன்று எம்முடன் இல்லை. அன்னாரின் இழப்பு தமிழ்த் தேசியத்திற்குப் பேரிழப்பாகும். அவரின் பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தாருக்கும், உறவினர்கள், நண்பர்களுக்கும் "தாயகஒலி" தனது கண்ணீர் அஞ்சலியை வேதனையுடன் தெரிவித்துக்கொள்கின்றது. "எப்போ முடிந்த காரியம்"

# JR Print

www.jrprint.com

- experience of the power -

www.jrprint.com

30 YEARS EXPERIENCE IN THE PRINTING INDUSTRY

QUICK, QUALITY & AFFORDABLE SERVICE

- Arangetram Books
- Cake Boxes
- Bill Books, Invoices
- Leaflets
- Rich Cakes & Boxes
- Raffle Tickets
- Rubber Stamps
- Lamination
- Translation Services
- Birthday Cards
- Letter Heads
- Wedding Cards
- Short Eat Boxes
- Photocopying
- Compliment Slips
- Short eat Bags
- Gold Blocking
- Visiting Cards
- Colour Printing
- Invitation Cards
- Souvenirs & Invoices



Guaranteed delivery within 72 Hours in Europe at Minimal cost

Fax: 020 8521 3967

Mob: 07939 998 730

E-mail: jrprintuk@gmail.com

Contact for FREE Quotation

0208 503 6643

59 - 61, Hoe Street, Walthamstow, London E17 4QR


Whether it's a Celebration,
a Gift to Someone Special,
or just a Royal Treat for yourself...
POOJA
SWEETS & SAVOURIES
Best Quality Vegetarian Food
discover a new heaven on earth:
POOJA
SWEETS & SAVOURIES
Best Quality Vegetarian Food
For Any Occasion
ORDER ONLINE FOR NEXT DAY DELIVERY *
www.poojasweets.com
TOOTING BRANCH
168-170 UPPER TOOTING
ROAD, LONDON, SW17 7 ER
T : 020 8672 4523
info@poojasweets.com
KINGSBURY BRANCH
KINGSBURY ROAD
LONDON, NW9 9ED
T : 020 8206 2206
kingsbury@poojasweets.com
CARDIFF BRANCH
3 ALBANY ROAD, ROATH
CARDIFF, CF24 3LH
T : 029 2021 4987
cardiff@poojasweets.com


Nallur Kumaran Textiles
Since 2000
New Sarees Collection Every Month from Bombay
Open
Mon-Sat 10am- 7pm
* திருமணக் கூறைகள்
* பூப்புனித நீராட்டு விழாப் பட்டு புடவைகள்
* Sequins Sarees
* Half Sarees
* நவநாகரீக ஆடைகள்
* பட்டுவேட்டிகள், சேட்டுகள்
* Childrens Party Wear
* ஏகாந்த வீணை, மிருதங்கம், தபேலா, சுருதிப் பெட்டி
* பரதநாட்டிய Costumes and Costume Jewels
Saree blouses உடனுக்குடன் தைத்துக் கொள்ளலாம்
1023-1025 London Road, Thornton Heath, Surrey CR7 6JF
Tel: 020 8684 1026 Mob: 07960 761 606
www.nallurkumaran.co.uk

# Ramesh & Co Accountants

T.P : 020 86823336



Home Services Contact

## Welcome to Ramesh & Co Accountants

We are South west London, based firm and we offer accounts, tax and business advises. We pride ourselves in providing the highest levels of professional service with expertise in the field. Our goal is to provide personalised professional services at the lowest fees to each of our clients and to build a long term professional relationship with them. Our accountants are highly experienced in Accounting, Taxation and Business, Financial and Mortgage consultancy services. Our Accountants & Tax Consultants offer friendly professional services for a competitive fixed fee. If you are not familiar with our company and your first contact with us, we would be pleased to hear from you. Please let us know what your needs and questions are, we will be more than happy to help! Call Ramesh & Co Accountants today on 0208 682 3336.

**Phone: 02086823336 | 02083552532**
**Mobile : 07823886784**
**Fax: 020 86728022**
**Website: www.rameshandco.co.uk**
**Email: info@rameshandco.co.uk**

**ஏழை மக்கள் கண்ணீர் துடைக்க**

**உங்கள் முன் வரும் இணையத் தளம்**

**விரைவில் எதிர்பாருங்கள்!**



Devi Jewellers
Devi Forex (Pvt) Ltd.
131
Buyers & Sellers of Bullion
(Gold, Silver, Platinum & Palladium)
Diamonds, Gems & Cubic Zirconium
131, Sea Street,
Colombo 11,
Sri Lanka.
Tel : 2388757,2388960
2395001/5
Fax : 2327101
E-Mail : info@devijewellers.lk
AUTHORISED MONEY CHANGER
WESTERN UNION MONEY TRANSFER
CUSTOM MADE JEWELLERY
No Other Branches.
WESTERN UNION
MONEY TRANSFER

Wellawatte (Land Side Opp Arpico)

# Akshaya Towers

*Wealthy Way of Life*

No:22A, 37th Lane Wellawatte,Colombo- 6

On going Project

1 Room, 2 Rooms, 3 Rooms
4 Rooms
Apartments available
**79 Lakhs upwards..**

**Reservation 10 Lakhs**

Swimming pool
Gym
Sauna
Elevator 2 (Bed lift 1)
Centralized (Line) Gas
Jogging track
Kids Playing area
CCTV
24 Hour Security
Individual Car Park
Stand by Generator



Installment
plan available

Loan can be arranged
(3 - 20 years 9.5% p a)

Bookings now open
contact- 0772 534622,0772534623

## Akshaya Projects (Private) Limited

No: 22A, 37th Lane Wellawatte, Colombo 06.T.P: 0777 370 292
E.mail: akshayatowers@gmail.com| www.akshayatowers.com


தரமான தங்க நகைகளுக்கு
நாடவேண்டிய ஒரே இடம்...
உங்கள் மனம்போல் நவீன
தங்கநகைகளைத் தெரிவு செய்ய
எங்களை நாடுங்கள்.
UDAYAA JEWELLERS
303, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06.
தொ.பேசி: +94 112 554 933

# Luckyland

## BISCUIT MANUFACTURERS




NATTARANPOTHA, KUNDASALE, SRILANKA.

T: +94 081 2420574, 2420217, Fax : +94 081 2420740

E-mail : luckyland@sltnet.lk


Western Jewellers
Jewellers & Gem Merchants
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகளை குறைந்த
விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள் உங்கள் வெஸ்டன் ஜுவல்லர்ஸ்
First Tamil Jewellery Shop in UK
Specialise in 22ct Gold, White Gold, Platinum
& Diamond Jewellery
TOOTING BRANCH
230, UPPER TOOTING ROAD
LONDON SW 17 7EW
UNITED KINGDOM
TEL: 020 8767 3445
WEMBLEY BRANCH
5, PLAZA PARADE
EALING ROAD,
WEMBLEY
HAO 4YA
UNITED KINGDOM
TEL : 0208 903 0909
Season's Best is Summer, Saree's Best is Silk Emporium Sarees
SILK
EMPORIUM
122 Upper Tooting Road,
London SW17 7EN
Tel : 020 8672 1900
Opening Hours : Monday - Saturday ( 10.30 am - 6.30pm), Sunday (11.30am-6.30pm)




சிவராம் பதிப்பகம், 20(32), கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 221 9440